# மன்னா

# பாஸ்கா விழாச் சிறப்புப் பொழிவு







“நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் சிலுவையில்தான்
நாம் பெருமை பாராட்ட வேண்டும்; அவரிலேதான் நமக்கு மீட்பும் வாழ்வும்
உயிர்த்தெழுதலும் உண்டு; அவர் வழியாகவே நாம் மீட்கப்பெற்றோம்;
விடுதலை அடைந்தோம்” (கலாத்தியர் 6 : 14).

“இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார்;
இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்ல, அல்லேலூயா” (உரோமர் 6: 9).
“நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால்
மேலுலகு சார்ந்தவற்றையே நாடுங்கள்” (கொலோசையர் 3: 1 – 2).





# உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள்!

மன்னா வாசக நண்பர்கள் அனைவருக்கும் உயிர்ப்புப் பெருவிழா நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

## மாந்தைத் திருத்தலப் பெருவிழா








மருதமடுத் திருத்தாயாரின் தொடக்ககால இருப்பிடமும், வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமான மாந்தை புனித லூர்து அன்னைத் திருத்தலப் பெருவிழா கடந்த பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை பல ஆயிரம் இறைமக்கள் ஒன்றுகூடி நிற்க மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

திருவிழாத் திருப்பலியை தலைமைதாங்கி ஒப்புக்கொடுக்க வந்திருந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களும் மற்றும் குருக்கள் துறவியர் பிரமுகர்களும் அடம்பன் மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் மகிழ்வொலி அணிவகுப்போடு வரவேற்று அழைத்துவரப்பட்டனர்.

அதன்பின்னர் ஆயர் தலைமையில் திருவிழாக் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## புதுக்கமம் ஆலயத் திறப்பு விழா





வஞ்சியன்குளம் பங்கின் துணை ஆலயங்களில் ஒன்றான புதுக்கமம் புனித சூசையப்பர் ஆலயம் புதிதாகக் கட்டப்பட்டு கடந்த பெப்ரவரி மாதம் 03ஆம் திகதி மாலை திறந்துவைக்கப்பட்டது.

மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் இப்புதிய ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்துவைத்தார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்களையும் மற்றும் குருக்கள், துறவிகள், விருந்தினர்களையும் புதுக்கமம் ஆலய சமூகத்தினர் கிராமத்தின் நுழைவாயிலில வைத்து சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து மன்னாரின் சிறப்பான கலை வடிவமாக விளங்கும் நாட்டுக்கூத்து நாடக வரவேற்புக் கவிபாடி விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டனர்.
(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

### 20 ஆண்டுகளின் பின்னர்
### வவுனியா பங்குச் சமூகம் பெருமையுடன் வழங்கும்
## வலிசுமந்த திருமகன்
### திருப்பாடுகளின் காட்சி

இடம் : புனித அந்தோனியார் ஆலய வளாகம்,
இறம்பைக்குளம், வவுனியா
காலம் : 25.03.2018 (ஞாயிறு)
நேரம் : மாலை 6.30 மணி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!**

– வவுனியா பங்குச் சமூகம் –

## ‘இயேசுக்கிறிஸ்து மனித குலங்களின் போதகர்’ காந்தியின் கடிதம் ஏலத்தில் வருகின்றது

இந்து சமயத்தவரான மகாத்மா காந்தி அவர்கள் சபர்மதி என்ற ஆசிரமத்தில் இருந்து அமெரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்தவர் மில்டன் நியூ பெர்ரி பிராண்ட்சுக்கு எழுதிய கடிதத்தில் இயேசுக் கிறிஸ்துவைப்பற்றி எழுதியிருந்தார். இந்தக்கடிதம் தற்போது ஏலத்தில் வருகின்றது.
(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)



## உள்ளே .....

பெரிய வியாழன், பெரிய வெள்ளி, புனித சனி ஆகிய திருவழிபாட்டு விளக்கவுரைகள் 10ஆம், 11ஆம் 12ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

வழிபாட்டில் பயன்படுத்துவதற்காகவும் தனிப்பட்ட முறையில் வாசித்துத் தியானிப்பதற்காகவும் இவற்றைப் பயன்படுத்தலாம்.

இறைவனின் இரக்கத்தாலும், புனித ஆட்சிப்பீடத்தின் ஆதரவாலும் மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ ஆகிய நாம் மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதும்

# தவக்காலத் திருமடல் - 2018



**இயேசுக் கிறிஸ்துவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே,**

**முன்னுரை**

நமது கத்தோலிக்க திருவழிபாட்டு ஆண்டின் முக்கியமான, புனிதமான காலமாகிய இத்தவக்காலத்தில் இத்திருமடல் வழியாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். "கடவுளையும் நமது ஆண்டவராகிய இயேசுவையும் நீங்கள் அறிவதன் வாயிலாக உங்களுக்கு அருளும் நலமும் பெருகுக!" (2 பேதுரு 1: 2).

**தவக்காலம்**

அருளின் காலமாகவும், மனமாற்றத்தின் காலமாகவும் திருச்சபைத்தாய் நமக்குத் தந்திருக்கின்ற இந்தத் தவக்காலத்தில் நாம் அனைவரும் கடவுளோடும், மனிதரோடும் ஒப்புரவாக அழைக்கப்படுகின்றோம். "நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய் இருக்கின்றோம். கடவுளே எங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுக்கிறார். ஆகவே கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம்" (2 கொரி 5: 20) எனப் புனித பவுல் கொரிந்திய மக்களுக்கு விடுக்கும் அழைப்பு நமக்கும் பொருத்தமானதே. "இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!" (2 கொரி 6:2) என்ற அவருடைய அழைப்பு இத்தவக்காலத்திற்குப் பொருத்தமானதாகும்.

இத்தவக்காலத்தில் நாம் பல்வேறு பக்தி முயற்சிகளில் ஈடுபடுகின்றோம். சிலுவைப்பாதை, மாமிசத் தவிர்ப்பு, உண்ணா நோன்பு, பாதயாத்திரை, வியாகுல பிரசங்கம், ஒறுத்தல் முயற்சிகள் போன்றவை வாயிலாக நாம் இறைவனோடு ஒப்புரவாகவும் அவரோடு நெருங்கிச் செல்லவும் முயற்சிக்கின்றோம். இப்பக்தி முயற்சிகளை உலகியல் ஆதாயத்திற்காகச் செய்யாமல் ஆன்மீக நலன்களுக்காகச் செய்வது அவசியமாகும். இந்தத் தவக்காலம் உடலை வருத்திக்கொள்வதற்காக மட்டும் அல்ல, மாறாக உள்ளத்தைத் திருத்திக்கொள்வதற்காகவே நமக்குத் தரப்படுகிறது என்பதை நாம் மனதிற் கொள்ளவேண்டும். நல்ல ஒப்புரவு (பாவசங்கீர்த்தன) அருட்சாதனத்தைப் பெறுவதன் வாயிலாக இறைவனோடும் அயலவர்களோடும் ஒப்புரவாகுவது இத்தவக்காலத்தில் அவசியமாகும்.

நமது மறைமாவட்டத்தில் தவக்காலத்தை முன்னிட்டு இவ்வாண்டும் பல்வேறு இடங்களில் சிறப்புத் தியானங்கள், வழிபாடுகள் போன்றவை ஒழுங்குசெய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்தியாவில் இருந்தும் இன்னும் வேறு இடங்களில் இருந்தும் அழைக்கப்பட்ட பல்வேறு இறைபணியாளர்கள் மூலமாக பொதுவாக இறைமக்களுக்கும், சிறப்பாகக் குழுக்களுக்கும் இந்தத் தியானங்கள், வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த இறைபணியாளர்களுக்கும் இவர்களை அழைத்தவர்களுக்கும் எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாம் இறைவனோடு நெருங்கிச் செல்லவும், மனித நேயத்தில் வளரவும், நீதிக்காக உழைக்கவும், ஏழைகளுடன் பகிர்ந்துகொள்ளவும், பகைவருடன் ஒப்புரவாகவும் இந்தத் தவக்காலப் பக்தி முயற்சிகளும், தியானங்களும், வழிபாடுகளும் நமக்கு உதவி செய்வனவாக!

**பொதுநிலையினர் ஆண்டு**

புனித யோசவ்வாஸ் ஆண்டை இவ்வருடத்திலும் நாம் கடைப்பிடிப்பதோடு, புனித யோசவ்வாஸ் தன் பணிவாழ்வில் முக்கியப்படுத்தி, ஊக்குவித்த பொதுநிலையினரை மையப்படுத்தி நமது மேய்ப்புப்பணித் திட்டங்களை வகுத்திருக்கின்றோம். நமது மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டுத் தீர்மானங்களுக்கு அமைவாக ஒவ்வொரு பங்குகளும் தமது பங்கு மேய்ப்புப்பணித் திட்டங்களை உருவாக்கியுள்ளன. இத்திட்டங்களை பங்குகளில் பிரமாணிக்கமாக நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

பொதுநிலையினர் மட்டில் திருநிலையினர் கொண்டிருக்கவேண்டிய அணுகுமுறை குறித்து இரண்டாம் வத்திக்கான் சங்கம் தெளிவாக விளக்கியுரைக்கின்றது:

'அருள்பணியாளர்கள் திருச்சபையில் பொதுநிலையினர் கொண்டுள்ள மேன்மையையும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு அவற்றை மேம்படச் செய்ய வேண்டும். பொதுநிலையினரின் முன்மதியுள்ள அறிவுரையை விருப்புடன் அவர்கள் பயன்படுத்துவார்களாக! திருச்சபையின் பணிப்பொறுப்புக்களை அவர்களிடம் நம்பிக்கையோடு ஒப்படைத்து அவர்கள் சுதந்திரத்தோடு செயல்புரிய வாய்ப்பு அளிக்க வேண்டும்.'' ('திருச்சபை' என்ற கொள்கைத் திரட்டு, எண். 37)

"….. மேலும் தாங்களாகவே பணிகளை ஏற்று நடத்த அவர்களை ஊக்குவிக்க வேண்டும். பொதுநிலையினர் பரிந்துரைக்கும் திட்டங்களையும், கருத்துக்களையும், ஆவல்களையும் தந்தைக்குரிய அன்புடன் கிறிஸ்துவின் மனநிலையோடு தனிப்பட்டவிதமாய் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்த மண்ணக நகரிலே அனைவருக்குமே உரித்தான சுதந்திரத்தை அருள்பணியாளர்கள் மதிப்புடன் ஏற்று ஒப்புக்கொள்ள வேண்டும்'' ('திருச்சபை' என்ற கொள்கைத் திரட்டு, எண். 37) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருஆட்சியாளரோடு பொதுநிலையினர் உடன் உழைக்க வேண்டும் என்பதையும் திருச்சங்கம் வலியுறுத்துகின்றது:

"திருஆட்சியாளரோடுகூட எங்கு பொதுநிலையினர் உடனிருந்து உழைக்கவில்லையோ, அங்கு திருச்சபை உண்மையாகவே நிறுவப்படவுமில்லை, முழுமையாக வாழவுமில்லை. மனிதர் நடுவே கிறிஸ்துவின் நிறையடையாளமாகத் துலங்கவும் இல்லை'' (திருச்சபையில் நற்செய்தி அறிவிப்புப் பணி. எண் 21).

எனவே இப்பொதுநிலையினர் ஆண்டில் தலத்திருச்சபையில் பொதுநிலையினரின் உரிமைகள், கடமைகள் தொடர்பாகவும், அவர்களின் அழைப்பு, பணி, உருவாக்கம் தொடர்பாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திருத்தப்பட்ட திருப்பலி மற்றும் திருச்செபமாலைச் செபங்கள்**

உரோமன் திருவழிபாட்டுத் திருப்பலி நூலில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று திருச்செபமாலைச் செபங்களிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காலத்தின் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்பட்டுள்ள இத்திருத்தங்களை ஏற்றுக்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துமாறு அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இலங்கை நாட்டின் திருத்தூதரான தூய யோசவ்வாஸ் அடிகளாரின் பரிந்துரை நமக்குக் கிடைப்பதாக! நமது மறைமாவட்டத்தின் பாதுகாவலியாகிய மடு அன்னை நம்மோடு பிரசன்னமாக இருந்து தாய்க்குரிய பாசத்தோடு நம்மை வழிநடத்துவாராக.

இப்படிக்கு,
கிறிஸ்துவில் உங்கள்மேல் பற்றுள்ள,
ஆயர் பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ
மன்னார் மறைமாவட்ட ஆயர்

## மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2018

### மார்ச்

07. கோமரசன்குளம் கல்வாரி திருத்தல பாத யாத்திரை ஆரம்பம்.
09. கோமரசன்குளம் கல்வாரி திருத்தல பாத யாத்திரை நிறைவும் திருப்பலியும்.
16. ஓலைத்தொடுவாய் கர்த்தர் ஆலய பாத யாத்திரையும் திருப்பலியும்.
19. தூய சூசையப்பர் மரியாவின் கணவர் பெருவிழா - வேப்பங்குளம், இலுப்பைக்கடவை, காத்தான்குளம், தாழ்வுபாடு, வளன்நகர்.
- மறைமாவட்ட முன்னையநாள் அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை மற்றும் ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசப்பு ஆண்டகை அவர்களின் பெயர் கொண்ட திருவிழா.
23. பறப்புக்கடந்தான் கர்த்தர் ஆலய பாத யாத்திரையும் திருப்பலியும்.
- கோமரசன்குளம் பங்கு சிலுவைப்பாதை
26. திருத்தைல மந்திரிப்பு கூட்டுத்திருப்பலி புனித செபஸ்ரியார் பேராலயம் மாலை 5.00 மணி 7.30 மணி குருக்களுக்கான திருமணித்தியாலம் - ஆயர் இல்லம்

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

## அமல உற்பவ கன்னி மரியாளின் சமூக மற்றும் கல்விப்பணிகளுக்கான அமைப்பு (IMSESO)

மன்னார் மறைமாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி. எஸ். ஜெயபாலன் குரூஸ் அடிகளாரின் வழிகாட்டலுடன் IMSESO எனப்படும் நிறுவனத்தினால் மனித உரிமைகளுக்கான 06 மாத கால Diploma in Human Rights கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளன. இக்கற்கைநெறியில் இணைய விரும்புவோர் தங்கள் பெயர்களை 30.03.2018ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ, எமது அலுவலகத்தில் பதிவு செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**கல்வித்தகமைகள் :**

க.பொ.த.உ/ தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு :-**

- இக்கற்கைநெறி சனிக்கிழமைகளில் மட்டும் இடம்பெறும்.
- விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரை பெற்றுக்கொள்ள முடியும்.
- ஆண், பெண் இரு பாலாரும் பங்குபற்றலாம்.
- வயதெல்லை கிடையாது.

**தொடர்புகளுக்கு :-** இயக்குனர், IMSESO, முருங்கன் பிட்டி, முருங்கன். T.P. 023-3239440/ 077-8874221.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால்

## யூட் மாஸ்டர் கௌரவிக்கப்பட்டார்



வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் கடந்த 23.12.2017 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற VIII வது வர்ண இரவு (Colours Night) கௌரவிப்பு நிகழ்வில் திரு. யூட் பிகிறாடோ (யூட் மாஸ்டர்) அவர்கள் விளையாட்டுத்துறையின் வளர்ச்சியில் அரும்பாடுபட்டவர் என விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் நீண்ட காலம் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் பிரதி அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன் 10 வருடங்களுக்கு மேலாக மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட அணியில் தலைவராக செயற்பட்டு பல வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்துள்ளார். அதுமட்டுமல்லாது மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராகவும், மன்னார் மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் தலைவராகவும், மன்னார் YMCA நிறுவனத்தின் தலைவராகவும் நீண்ட காலம் சேவையாற்றியுள்ளார். இவரது தலைமைத்துவத்தின்கீழ்தான் மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனமும், மன்னார் மாவட்ட மெய்வல்லுனர் சங்கமும் இலங்கை தாய்ச்சங்கத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டன. அது மட்டுமல்லாது மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவராகவும் திகழ்ந்துள்ளார். மாவட்டத்தில் இயங்கும் முக்கிய மூன்று சங்கங்களிலும் தலைவராக தெரிவுசெய்யப்பட்டு அதன் ஆரம்ப கர்த்தாவாக சிறப்பான சேவையாற்றியுள்ளார்.

அது மட்டுமல்லாது உதைபந்தாட்ட நடுவராகவும், மெய்வல்லுனர் நடுவராகவும் அந்தஸ்துப்பெற்று சிறப்பாக மத்தியஸ்தம் வகித்தார். 2002ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற 14வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் மஸ்தியஸ்தராகக் கடமைபுரிந்துள்ளார். இவர் தலைமைச்சங்க பிரதிநிதிகளுடன் சிறந்த உறவைப் பேணி மன்னாரின் விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பான சலுகைகளையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

இவரால் உருவாக்கப்பட்ட மாணவர்களே இன்று சிறந்த தலைமைத்துவப் பணிகளில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் காணப்படுகின்றனர். இவ்வாறாக தன்னை பொதுச்சேவையில் முழுமையாக அர்ப்பணித்து, மன்னார் மாவட்டம் இன்று விளையாட்டுத்துறையில் பிரகாசிக்க அன்று அத்திவாரமிடப்பட்டவர். சிறந்த ஆளுமையும் நேர்மைத்தன்மையும், உதவிபுரியும் தன்மையும், பிறரைப் புரிந்துகொள்ளும் தன்மையும் மனிதத்தன்மையும் கொண்ட ஒரு உத்தமருக்கு வடமாகாணம் சிறந்த விளையாட்டுத்துறைக்குரிய விருதை வழங்கியிருப்பது சாலப்பொருத்தமானதே. இவரால் இன்று மன்னார் மகிழ்ந்து பெருமையடைகிறது. இவரது பணி மேலும் சிறக்க இறையாசீர் வேண்டுவதுடன் மன்னார் சமூகம் சார்பில் மீண்டும் வாழ்த்துகின்றோம்.

## உண்மை உறைக்கும்

கமிலஸ்




## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

# சட்டத்தைக் கையிலெடுக்கவோ தண்டனை வழங்கவோ தனி மனிதனுக்கு உரிமை இல்லை

## அம்பாறைச் சம்பவங்கள் குறித்து மட்டக்களப்பு ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை



அம்பாறைச் சம்பவங்கள் நீதிக்கு ஒவ்வாதவை. சட்டத்தை கையிலெடுக்கவோ தண்டனை வழங்கவோ தனிமனிதர்களுக்கு உரிமை கிடையாது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றேன். சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் அனைவரும் சட்டத்தின்முன் நிறுத்தப்பட வேண்டும் என மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை தெரிவித்தார்.

அம்பாறை சம்பவங்களைப்பற்றி ஆராய்வதற்கான கூட்டமொன்று ஆயரின் மட்டக்களப்பு பணிமனையில் ஆயரின் தலைமையில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், சாதாரணமான வாழ்க்கையில் மனிதர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள், தப்பான அபிப்பிராயங்கள் தோன்றுவது இயல்பு. இதே ஒரு நிலைதான் அம்பாறை உணவகத்திலும் ஏற்பட்டுள்ளது. இதனை வைத்துக்கொண்டு உணவகத்தை நடத்துபவர்களை சில அடாவடிக்காரர்கள் பயமுறுத்தி பணியவைத்ததாக பத்திரிகையின் செய்திகள் வெளிக்காட்டுகின்றன. அதே பத்திரிகையின் செய்தியில் உணவுக்கு அப்பாற்பட்ட திரவங்கள் கொத்துறொட்டியில் கலக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவை இரண்டுமே வெறுமனே செய்திகள்தான். இவைகளை பொறுப்பு வாய்ந்தவர்கள் யாருமே உண்மையென ஊர்ஜிதம் செய்யவில்லை. அப்படி ஒரு சம்பவம் ஏற்பட்டால் அதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிட்டு நீதியை நிலைநாட்டுவதே முறையான செயல். இவை எதுவுமே அங்கு இடம்பெறவில்லை.

அவைகளை ஒரு புறமாகத் தள்ளிவிட்டு, அதன் பின்னணியில் நடந்த சம்பவங்கள் யாவும் பாரதூரமானவை. மனித விழுமியங்களுக்கு அப்பாற்பட்டவை. கடைகளை உடைப்பது, முஸ்லிம்களின் பள்ளிவாசல்களை உடைப்பது, முஸ்லிம்களை தாக்குவது என்பவைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. சாப்பாட்டுக்கடையில் தவறான சம்பவம் நடைபெற்றிருந்தால் அது அந்தக் கடையோடு நின்றிருக்கவேண்டும். பள்ளிவாசலை நோக்கி பரம்பல் அடைவதற்கு என்ன காரணம்? இதற்குப் பின்னணி என்ன? என்பதை அரசு கண்டறிந்து வெளிப்படுத்தவேண்டும். முஸ்லிம்கள் தாக்கப்பட்டு இருக்கின்றார்கள். ஒரு வணக்கஸ்தலத்தில் உடமைகள் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. அங்கிருந்த முஸ்லிம்களுக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் அவர்கள் அங்கிருந்து தப்பி ஓடியிருக்கிறார்கள். இவைகள் யாவுமே அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் ஆகும். இவ்வளவு அனாச்சார செயல்கள் நடந்தேறுவதற்கு நூற்றுக்கணக்கானோர் திரண்டே வந்திருக்கின்றார்கள்.

இவ்வளவு நடக்கும்வரை பொலிசார் வாய்மூடி கைகட்டி மௌனியாய் இருந்திருக்கிறார்கள். பொலிசாரால் அவற்றை தடுத்திருக்க முடியும். ஏன் அவர்கள் அதைச் செய்யவில்லை? பொலிசார் சட்டத்தை நிலைநாட்ட வேண்டியவர்கள். பொதுமக்களையும் அவர்களின் உடமைகளையும் பாதுகாக்க வேண்டியது அவர்களது பிரதானமான கடமை. அப்படியிருந்தும் அவர்கள் ஏன் இதில் தலையிடாது ஒதுங்கி இருந்தனர் என்பதும் பொலிசாரின்மேல் சந்தேகத்தைத் தோற்றுவிக்கின்றது. இதில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் விசாரணைக்கு உட்படுத்தவேண்டும். அதனோடு சம்பந்தப்பட்ட சான்றுப் பொருட்களைக் கைப்பற்றி விசாரணை அறிக்கையை அரசு வெளியிட வேண்டும். பிழைவிட்டவர்களையும் துணை நின்றவர்களையும் தப்பிப்போகவிடக்கூடாது. இது அரசினது கடமை என்றார்.

# சிறப்பாக நடைபெற்ற கச்சதீவுத் திருவிழா



வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் மேதகு யஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் காலி மறைமாவட்ட ஆயர் மேதகு ரேமன் விக்கிரமசிங்க ஆண்டகை ஆகியோரால் காலை திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. முதன்முறையாக ஆராதனைகள் சிங்கள மொழியிலும் நடைபெற்றன.

பெப்ரவரி 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகியது. இம்முறை இந்தியாவில் இருந்து தேக்கு மரத்திலான புதிய கொடிமரம் கொண்டுவரப்பட்டு கொடியேற்றப்பட்டது. இந்தியாவில் இருந்து 1,920 பக்தர்களும் இலங்கையில் இருந்து சிங்களம் மற்றும் தமிழ் பக்தர்கள் என 6,500 பக்தர்களும் கச்சதீவுக்கு சென்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் சிங்கள பக்தர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# போதைப்பொருள் வியாபாரத்திற்கு எதிரான வேலைத்திட்டத்திற்கு தலைமை வகிக்கத் தயார்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை



போதைப்பொருள் வணிகத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகத் தராதரம் பார்க்காது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை அடிப்படையாகக்கொண்டு சகல திருச்சபைகளையும் மையப்படுத்தி ஒழிப்புக் குழுவொன்றை அமைக்க வேண்டும். அக்குழுவின் தலைமையை ஏற்பதற்குத் தான் தயாராக உள்ளதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு பிரதேசத்தில் கடந்த பெப்ரவரி 25ஆம் திகதி அன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில், போதைப்பொருள் விற்பனை எப்போதுமில்லாதவாறு தற்போது அதிகரித்து வருகின்றது. அதனால் சிறுபிள்ளைகளும் அப்பழக்கத்திற்கு உட்பட்டு வருகின்றனர். போதைப்பொருள் வர்த்தகத்தில் பல தரத்திலுள்ளவர்களும் சம்பந்தப்படுகின்றனர். கோடிக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கும் திருட்டு வியாபாரமாகவும் அது உள்ளது. அந்த வியாபாரத்தால் நாட்டின் எதிர்கால சந்ததியினர் சீரழிவதைத் தவிர்க்க முடியாது.

ஆகவே குறித்த வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். எனினும் குறித்த வியாபாரத்துடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்து சிறையில் அடைக்கின்றபோதும் அவர்கள் விரைவில் விடுதலையாகிவிடுகின்றனர். அதனால் அவர்கள் சுதந்திரமாக தமது வியாபாரத்தைத் தொடர்ந்தும் மேற்கொள்கின்றனர்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# துயர் பகிர்கின்றோம்

### பொன்சியன் அடிகளாரின் அன்புத் தந்தை

மன்னார் வட்டக்கண்டல் காத்தான்குளம் கிராமத்தைச் சேர்ந்தவரும் அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்தவரும் தேசிய கல்வி நிறுவகத்தின் விரிவுரையாளருமாகிய அருட்திரு. பொன்சியன் (அமதி) மற்றும் கார்மேல் சபை அருட்சகோதரி நிதர்சனா ஆகியோரின் அன்புத் தந்தையான திரு. டொன்சுவாம் சூசையப்பு அவர்கள் கடந்த 21.01.2018 அன்று இறைபதமடைந்தார்.

### புனிதக்குமார் அடிகளாரின் அன்புத் தாயார்

யாழ். மறைமாவட்டக் குருவும் உடுவில் பங்குத்தந்தையுமாகிய அருட்பணி. ஏ. புனிதகுமார் அடிகளாரின் அன்புத் தயார் ஆ. லில்லி அக்னஸ் அவர்கள் கடந்த 07.02.2018 அன்று இறைபதமடைந்தார்.

### இரட்ணராஜ் அடிகளாரின் அன்புத் தந்தை

அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி. டே. இரட்ணராஜ் அடிகளாரின் அன்புத் தந்தையும், அருட்பணி. டேமியன் அடிகளாரின் சகோதரருமாகிய திரு. சூசை டேவிட் அவர்கள் 16.02.2018 அன்று இறைவனடி சேர்ந்தார்.

### சரத் ஜீவன் அடிகளாரின் அன்புத் தாயார்

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த காலம்சென்ற சரத்ஜீவன் அடிகளாரின் அன்புத் தாயார் திருமதி. மரியாம்பிள்ளை கசில்டா மங்களநாயகி அவர்கள் கடந்த 12.03.2018 அன்று இறையடி சேர்ந்தார்.

***இவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் இறைபணியாளர்களுக்கும் அவர்தம் உறவுகளுக்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். இறந்தவர்களின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதி அடையச் செபிக்கின்றோம்.***

# அருட்சகோதரி மரியகொறற்றி இறைபதம்

திருச்சிலுவைக் கன்னியர் துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோதரி மரியகொற்றி பஸ்ரியாம்பிள்ளை அவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி இறைபதமடைந்தார். இவர் யாழ்ப்பாணம் கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

அன்னாரின் திருவுடல் யாழ் கடற்கரைவீதி திருச்சிலுவைக் கன்னியர் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 26ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் புனித மரியன்னை தேவாலயத்தில் இடம்பெற்ற இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து யாழ் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அருட்சகோதரி மரியகொற்றி அவர்கள் திருச்சிலுவைக் கன்னியர்களின் இலங்கை மாகாண முதல்வராகப் பணிபுரிந்தவர். இதைவிட கொழும்பு பொறள்ளையில் அமைந்துள்ள தமிழ் குருக்களுக்கான தங்குமிட இல்லத்திற்கு பொறுப்பாக இருந்தபோது யுத்த சூழ்நிலைக் காலத்தில் வடக்கு கிழக்கு தமிழ் குருக்களுக்கு பேருதவியாகச் செயற்பட்டவர். அன்னாரின் ஆன்மா அமைதிபெறச் செபிப்போம்.

# சர்க்கஸ் காட்சியைப் பார்க்க திருத்தந்தை நுழைவுச் சீட்டு வழங்கினார்

உரோம் நகரில் நடைபெறும் ஒரு சர்க்கஸ் விளையாட்டுக் காட்சியைக் (வட்ட அரங்கு வேடிக்கையைக்) கண்டுகளிக்க, 2,100 வறியோருக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நுழைவுச் சீட்டு அனுப்பியுள்ளார் என்று பேராயர் கொன்ராட் கிராயேஸ்கி அவர்கள் அறிவித்துள்ளார்.

மெட்றானோ என்ற நிறுவனத்தினர் நடத்திவரும் இந்த சர்க்கஸ் காட்சியைக் காணும் வறியோருக்கு, காட்சியின் முடிவில் இரவு உணவும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சவால்கள் நிறைந்த சூழலில், உடல் பயிற்சி, கலைநயம் இவற்றை வெளிப்படுத்தி, சர்க்கஸ் கலைஞர்கள் செய்யும் சாகசங்கள் நமக்கு பெரும் உந்துசக்தியாக அமைகிறன என்று அண்மையில் திருத்தந்தை வழங்கிய பொது மறைக்கல்வி உரையில் கூறியது குறிப்பிடத்தக்கது.

# ஏழைகளுக்காக அருட்பணியாளர்கள் சமையல்

ஏழைகளுக்கு உதவுவதற்கு நிதி திரட்டும் நோக்கத்தில், மும்பையில் அருள்பணியாளர்கள் குழு ஒன்று, தங்களின் பங்குத்தள மக்களுக்கு உணவு தயாரித்துக் கொடுத்துள்ளது. ஏழைகள் மற்றும் சமூகத்தில் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களுக்கு உதவிவருகின்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு ஆதரவு வழங்கும் நோக்கத்தில், மும்பை கர்தினால் ஒஸ்வோல்ட் கிரேசியஸ் ஆண்டகை அவர்கள், தனது மும்பை உயர்மறைமாவட்டத்தில் ஏழைகளுக்கு உதவுவதற்கு ஆதரவு வழங்கி வருகிறார்.

ஆலயங்களில் காணிக்கை போடுகின்றவர்கள் குறைந்துவருவதை முன்னிட்டு, ஏழைகளுக்கு உதவுவதற்கு புதிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்துமாறு தனது மும்பை உயர் மறைமாவட்டத்தின் ஒவ்வொரு பங்குத்தளத்தையும் கர்தினால் அவர்கள் கேட்டுக்கொண்டார். இதனால் மும்பையில் அருட்பணியாளர்கள் குழு ஒன்று உணவு தயாரித்து வழங்கியுள்ளது.

மேலும் உரோம் சான் எஜிதியோ பிறரன்பு அமைப்பு, கடந்த கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவன்று, இத்தாலியில் அறுபதாயிரம் ஏழைகளுக்கும், உலகெங்கும் மேலும் இரண்டு இலட்சம் ஏழைகளுக்கும் மதிய உணவு வழங்கியுள்ளது.

தவக்கால சிறப்புக் கட்டுரை



# உண்மைத்தவம் என்றால் என்ன?



## விவிலிய மற்றும் திருச்சபையியல் பார்வை



### முன்னுரை

கிறிஸ்துவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறைபொருளில் பங்கெடுத்து மீட்பின் மக்களாக உய்வடைய நாம் மனமாற்றம் பெறுமாறு திருச்சபை அழைப்பு விடுக்கின்றது.

இம்மனமாற்றத்திற்காக நாற்பது நாட்களை ஏற்படுத்தித் தவக்காலம் எனத் திருச்சபை அழைக்கிறது. கிறிஸ்தவ வாழ்வு எல்லாக் காலங்களிலும் தவத்தை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றாலும், இச்சிறப்புக் காலத்தில் சிறப்பான முறையில் தவங்கள் செய்திடத் திருச்சபை வலியுறுத்துகிறது. பழைய ஏற்பாட்டில் யோனாவின் அருளுரை கேட்டு நினிவே மக்கள் தவம் செய்தது போலவும் (யோனா 3:1-10), இயேசுபிரான் தம் பணிவாழ்வைத் தொடங்குமுன் நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்தது போலவும் (மத் 4:2) நாம் நோன்பு செய்திடத் திருச்சபை வகை செய்துள்ளது.

பழைய ஏற்பாட்டில் மனமாற்றம் சடங்குபூர்வமான செயல்களுடன் தொடர்புகொண்டிருந்தது. உண்ணா நோன்பு, கோணி உடுத்திக்கொள்ளல், சாம்பலில் உட்கார்ந்திருத்தல், அழுதல் ஆகியவை இச்சடங்குகளாகும். “தாவீது உண்ணா நோன்பு மேற்கொண்டு இரவெல்லாம் தரையில் படுத்துக்கிடந்தார்” (2 சாமு.12:16). நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி, எல்லாரும் நோன்பு இருக்க முடிவு செய்தார்கள். நினிவே அரசன் தன் அரியணையை விட்டிறங்கி அரச உடையைக் களைந்துவிட்டு, சாக்கு உடை உடுத்திக்கொண்டு சாம்பல்மீது உட்கார்ந்தான் (யோனா 4:5,6). இஸ்ரயேல் மக்களின் வழிபாட்டில் பாவம் பற்றிய மனம் வருந்துதல் அழுகையாகக் கலந்திருந்தது.

இவ்வகைச் சடங்குகளில் ஆழமான மனமாற்றம் இருக்க வேண்டும் என அடிக்கடி வலியுறுத்தப்பட்டாலும், பெரும்பாலும் இவை பாவம் குறித்த ஒரு சிறு மனம் வருந்துதலாகவும் நடந்த நிகழ்வுகளின் விளைவுகளினின்று தப்புவதற்கான விருப்பமாகவும் மட்டுமே இருந்தன. கடவுளுடன் புது உறவை ஏற்படுத்தவோ, நீதியின் வழியில் நடக்கவோ வேண்டும் எனும் உணர்வு அவ்வளவாக இருந்ததில்லை.

ஆனால் இறைவாக்கினர்கள் மனமாற்றத்திற்காகக் கொடுத்த அழைப்பில் இதயபூர்வமான மாற்றத்தை வலியுறுத்தினர். “இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்” (யோனா 2:12-13). மனமாற்றத்திற்கான இத்தகு அழைப்பு மனிதனின் இருப்பையும், கடவுள் முன்னால் அவனுடைய நிலைப்பாட்டையும் வலியுறுத்தியது. இத்தகு அழைப்பு கடவுளுடன் உள்ள உறவை வலியுறுத்தியது. வரலாற்று நூல்கள் இஸ்ரயேல் எனும் இனத்தின் மனமாற்றத்தை வலியுறுத்தின. ஆனால் இறைவாக்கினர் நூல்கள் தனிப்பட்ட நபர்கள் கடவுளுக்கெதிரான கீழ்ப்படிதலற்ற வாழ்வை விட்டுவிட்டு கடவுளை நம்பிட அழைப்பு விடுத்தன. முக்கியமாக எரேமியா எசேக்கியா நூல்கள் இக்கருத்தை வலியுறுத்தின (எரே4:1, 16:3, 36:3, எசே 18:21-28, ஓசே6:1-6).

இறைவாக்கினரின் இத்தகைய அழைப்பு திருமுழுக்கு யோவானின் போதனையில் எதிரொலிக்கிறது. அவரது போதனைப்படி மனமாற்றத்திற்கான காரணம் இறையாட்சியின் வருகையாகும் (மத் 3:2). இயேசுபிரான் இவ்வழைப்பை மீண்டும் உறுதிப்படுத்தினார் (மத் 4:17). அது சீடத்துவத்திற்கான அழைப்பாகவும் மாறியது. இது நாம் குழந்தைகளாக மாறுவதற்கான அழைப்பகவும் (மத் 18:3) எல்லாவற்றையும் விட்டுவிடுவதற்கான அழைப்பாகவும் (லூக் 14:33) அமைந்தது.

திருத்தூதர்கள் இவ்அழைப்பை மீண்டும் உறுதிப்படுத்தினர் (திப 3:19,26:20). பிற இனத்தாருக்கான போதனையில் இம்மனமாற்றம் தாங்கள் தொழுதுவந்த கடவுளை மறந்து உண்மைக் கடவுளையும் இயேசுவையும் ஏற்றுக்கொள்வதாகவும் அமைந்தது. அது இருளிலிருந்து ஒளிக்கு வருதலாகும் (திப 26:18). தெசலோனிகேயரைப் பொறுத்தவரை இது சிலைகளை விட்டுவிட்டு உண்மையான, வாழும் கடவுளுக்கு ஊழியம்புரியக் கடவுளிடம் திரும்பி வருதல் ஆகும் (1 தெச 1:9).

மனமாற்றத்தையும் அதனை அடையாளப்படுத்தும் தவத்தையும்பற்றி திருவிவிலியம் மேற்கண்ட கருத்துக்களைக் கொண்டுள்ளது. இத்தகு கருத்துக்களின் ஒளியில் திருச்சபை மேலும் பல கருத்தாக்கங்களைத் தருகின்றது. இப்பின்னணியில் தவம் குறித்து நாம் சற்றுச் சிந்திக்கலாம்.

### தவத்தின் இலக்கணம்

தவம் என்பது கிறிஸ்தவ அருள்வாழ்வின் இயக்காற்றலாகிய மனமாற்றத்தின் பரிமாணம் ஆகும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் பாவத்தையும், தீமையையும் எதிர்த்து நிற்கும் மனப்பான்மை அல்லது நற்பண்புதான் தவம் எனலாம். கிறிஸ்துவ அருள்வாழ்வு திருச்சபை வாழ்வுடன் பின்னிப் பிணைந்தது. எனவே தவம் எனும் நற்பண்பு அருள்சாதனக் கொண்டாட்டத்துடன் நெருங்கிய தொடர்புகொண்டதாக உள்ளது. (பழைய ஏற்பாட்டின் சடங்கு முறைகளும் இங்ஙனம் இருந்தன எனக் கண்டோம்).

ஒரு காலத்தில் விவிலியம் கூறும் மனமாற்றம் தவம் என்று மட்டுமே பார்க்கப்பட்டது. தவம் தனி நபர் சம்பந்தப்பட்டதாகவும் பாவத்திற்கான வெறுப்பாகவும் அதற்கான பரிகாரமாகவும் பார்க்கப்பட்டது. தவம் என்பது ஒருவரின் கடந்தகாலப் பாவத்திற்கான வருந்துதலாகவும் பாவத்திற்குப் பரிகாரம் செய்யும் முயற்சியாகவுமே அருள்வாழ்வு கருதியது.

தவம் என்பது நீதி மற்றும் பிறரன்பு ஆகிய நற்பண்புகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்பட்டது. கடவுளோடு உள்ள உறவு, அடுத்திப்போருக்கான நம் கடமை ஆகியவை வலியுறுத்தப்பட்டன. தற்காலச் சிந்தனை இத்தகைய கருத்துக்களை உள்ளடக்கினாலும் புதிய ஆழமான விளக்கங்களையும் தருகிறது. தற்கால அருள்வாழ்வுச் சிந்தனையாளர்கள் தவத்தைச் சமுதாயக் கடமைகளுடன் இணைத்துப் பார்க்கின்றனர். தவம் என்பது எப்போதோ ஒருமுறை மட்டும் நடக்கிற அல்லது அவ்வப்போது மட்டும் நடக்கவேண்டிய செயலன்று. தனிப்பட்ட மற்றும் திருச்சபை சார்ந்த பொறுப்பை ஒருவரின் செயற்பாடுகள் பிரதிபலிக்க வேண்டும். ஆவியின் வழிகாட்டுதலில் கிறிஸ்தவின் சாயலில் நாம் வளர வேண்டும். இத்தகைய கண்ணோட்டம் கிறிஸ்துவத் தவத்திற்கு முக்கியத்துவம் நல்குகின்றது.

அருள்வாழ்வில் வளர்ச்சி என்பது பவம் பற்றிய உணர்வைக் கொண்டதாக இருக்கிறது. இது நம் தனிப்பட்ட பாவம் பற்றியது மட்டுமன்று, மற்றவர்களின் பாவத்தையும் பற்றியதாகும். அத்துடன் சமூகத்தில் மலிந்துள்ள தீமையைக் குறித்த உணர்வும் இதில் உள்ளடங்குகிறது. மேலும் கடவுளின் அன்பை உணர்தல், மற்றவர்களுடன் நமக்குள்ள உறவுகளை உணர்தல் ஆகியவை நம்மை வெட்க உணர்விற்கும் அச்சத்திற்கும், குற்றப்பழி உணர்வுக்கும் தள்ளலாகாது, மாறாக பாவத்தையும், நம்மிடத்திலும் சமுதாயத்திலும் இருக்கும் தீமையையும் செயலூக்கத்துடன் எதிர்க்கும் நோக்கத்தைத் தரவேண்டும்.

நம் பாவத்திற்கோ அல்லது அடுத்தவரின் பாவத்திற்கோ பரிகாரம் செய்வது என்பது ஒருவர் தன்னையே தண்டிப்பதோ அல்லது கடவுளுக்கு ஒரு நேர்ச்சைக்கடன் செலுத்துவதோ அன்று, மாறாக ஒருவரின் கடமைகளையும், தூய வாழ்விற்கான அழைப்பையும் இதயப் பூர்வமாக ஏற்றுக்கொள்வது, இதில் தொடரும் தடைகளை ஏற்றுக்கொள்வது, இக்கடமைகளையும் அழைப்பையும் நிறைவேற்ற நன்முயற்சி எடுப்பது. இதில் மற்றவர்களின் கடமைகளைப் பகிர்ந்துகொள்வதும் அடங்கும்.

பழைய காலங்களில் இது நோன்பிருத்தல், புலால் உண்ணாமை அல்லது மற்ற ஒறுத்தல் முயற்சிகளாகப் பார்க்கப்பட்டன. தற்கால அருள்வாழ்வு தவத்தின் தனிநபர் சார்ந்த மரபுகளை உள்ளடக்கிக் கொண்டே அதனை விரிவாக்கி அடுத்திருப்போருடனான உறவுகளையும் கடவுளுடனான உறவுகளையும் மற்றவர்கள் மட்டில் நமக்குள்ள பொறுப்புக்களையும் வலியுறுத்துகின்றது. பழைய காலங்களில் பரிகாரச்செயல்கள்பற்றி அதிகம் பேசப்பட்டது. தற்போது அடுத்தவருக்கு நாம் செய்த தீங்கினை விடுவிப்பது குறித்தும் பேசப்படுகின்றது.

### சங்க ஏடுகளும் திருத்தந்தையர் மடல்களும்:

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப்பிறகு தவத்திற்கும் சமூக நீதிக்கும் இடையே உள்ள தொடர்பு மிகுதியாய் வலியுறுத்தப்படுகிறது. திருவழிபாடுபற்றிய இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு தவக்காலம்பற்றிக் கூறுகையில் திருமுழுக்கு மனமாற்றத்தையும் தவத்தின் சமூகப் பரிமாணத்தையும் வலியுறுத்துகிறது. “தவக்காலம் இரு பண்புகளைக் கொண்டுள்ளது. திருமுழுக்கை நினைவிற்குக்கொணர்தல் அல்லது இதற்கென ஆயத்தப்படுத்துதல் ஒப்புரவாதல் ஆகியவையே இப்பண்புகள் (திருவழிபாடு 109).

தவக்கால ஒப்புரவு முயற்சிகள் அகம் சார்ந்தவையாகவும் தனிமனிதர் சார்ந்தவையாகவும் மட்டுமிராமல் புறம் சார்ந்தவையாகவும் சமூகப் பண்புடையவையாகவும் இருக்க வேண்டும். நாம் வாழும் காலத்திற்கும் வேறுபட்ட மண்டலங்களுக்கும், நம்பிக்கை கொண்டோரின் நிலைமைகளுக்கும் ஏற்ற ஒப்புரவு முயற்சிகளை ஆதரிக்க வேண்டும் எனவும் அந்த ஏடு கூறுகிறது (திருவழிபாடு 110).

திருத்தந்தை 6ஆம் பவுல் வெளியிட்ட பெனித்தேமினி எனும் மடல் மனமாற்றத்தின் சமூகப் பரிமாணத்தையும் தவத்திற்கும் உலகின் முன்னேற்றத்திற்கும் இடையேயான தொடர்பையும் வலியுறுத்துகிறது. மத்தியகால மற்றும் திரிதெந்தின் சங்க போதனைகளான ஒறுத்தல் தன்னல மறுப்பு ஆகியவை குறித்து இம்மடல் பேசினாலும் தவமுயற்சிகளைச் சமூகச் செயற்பாடாகவும் காண்கிறது.

தவம் என்பது நம்பிக்கையைக் காத்தல், தன் வாழ்வின் நிலைக்கேற்ற கடமைகளைச் செய்தல், தன் பணியில் ஏற்படும் துன்பங்களைத் தாங்குதல், வையக வாழ்வின் சோதனைகளைப் பொறுமையுடன் தாங்குதல் ஆகியவற்றில் அடங்கியிருக்கிறது என இம்மடல் கூறுகிறது (ஆதி 2-3). மேலும் நோயினாலும், ஏழ்மையினாலும் துர்அதிர்ஷ்டங்களாலும் பாதிக்கப்பட்ட திருச்சபையின் உறுப்பினர்கள், அல்லது நீதிக்கான ஆர்வத்தின் காரணமாகத் துன்புறுத்தப்பட்டோர் தங்கள் துயரங்களைக் கிறிஸ்துவின் பாடுகளுடன் இணைப்பதிலும் தவம் அடங்கியுள்ளது. இதன்மூலம் தவத்திற்கான கட்டளையை நிறைவேற்றுவது மட்டுமன்று சகோதரர்களுக்கும், தங்களுக்கும் அருள்வாழ்வைப் பெற்றுத்தர இயலும். அவ்வருள் வாழ்வு நற்செய்தி போதிக்கும் பேறுபெற்ற நிலையாகும் எனவும் இம்மடல் கூறுகிறது (ஆத 3-B).

திருத்தந்தை 6ஆம் பவுல் பரிபூரண பலன்கள் குறித்த புதுக்குருத்துக்களையும் இந்துல் ஜென்கியரும் தோக்திரினா- Indul gentiarum Doctrina எனும் மடலில் தந்துள்ளார். அதில் பாவ நீக்கம் குறித்த புதுவிளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. கடவுளுடன் உள்ள உறவைப் புதுப்பித்தலும், பாவத்தினால் வலுவிழந்துபோன தனிமனித மற்றும் சமூக மதிப்பீடுகளைப் புதுப்பிக்கச் செய்தலும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளன (எண் 2-3).

திருத்தந்தை 2ஆம் ஜோன்போலும் தம் உரைகளிலும் மடல்களிலும் இத்தகு கருத்துக்களை நல்கியுள்ளார். இவை அனைத்திலும் தவம் என்பது திருச்சபையின் சமுதாயம் குறித்த போதனைகளுடனும், சமுதாயப் பணிகளுடனும் பார்க்கப்படுகிறது.

### தவமும் ஒப்புரவு அருட்சாதனமும்

அருள்வாழ்வின் பரிமாணமாகிய தவம் எனும் பண்பை மன்னிப்பு வழிபாடு மற்றும் ஒப்புரவு அருள்சாதனச் சூழலில் நன்கு புரிந்துகொள்ளலாம். ஒப்புரவு அருள்சாதனம் என்று பெயரிட்டு அழைப்பதே அதன் உறவுத்தன்மையையும் சமூகப் பண்பையும் வலியுறுத்துவதற்குத்தான். மனமாற்றம் என்பது ஒரு தொடர்செயல் எனவும் இது அன்றாடக் கிறிஸ்தவ வாழ்வு மற்றும் சமூகப்பொறுப்பு அகியவற்றின் ஒரு பகுதி எனவும் ஒப்புரவு அருள்சாதனம் வலியுறுத்துகிறது.

ஒப்புரவு அருள்சாதனம் சமூக நீதியையும் வலியுறுத்துகிறது. இது திருச்சபைசார்ந்த பொறுப்பையும் வலியுறுத்துகிறது. இவ்வாறு ஒப்புரவு அருள்சாதனம் மற்றும் மன்னிப்பு வழிபாடு திருச்சபையின் நற்செய்திப்பணி மற்றும் வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்புகொண்டுள்ளன. ஒப்புரவு அருள்சாதனத்தைத் தனிமனிதர் தூய்மையாக்கலாக மட்டும் பார்த்தலாகாது. இது திருவழிபாட்டுக்காலச் சுழற்சியுடன் பார்க்கப்பட வேண்டும். ஆகவே ஒப்புரவு அருள்சாதனம் கூறும் தவமும் திருச்சபையின் ஒட்டுமொத்த வளர்ச்சியுடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்பட வேண்டும்.

### முடிவுரை

தவத்தின் அடையாளமாக யூதர்கள் மூன்று காரியங்களை எண்ணியிருந்தனர். தர்மம் செய்தல் (லேவி 23:22, இச 24:19-22) செபித்தல் (விப 20:3,திபா 63:6-8), நோன்பு இருத்தல் (1 சாமு 7:6, யோவே 1:14, யோனா 3:5-9, லேவி 16:29-34, செக் 8:19, நீதி 2:26,2 குறி 20:3-4,1 சாமு 31:13, 2சாமு 1:12). இயேசுபிரான் இம்மூன்று பண்புகளையும் குறித்துப் புதுவிளக்கமளித்தார். அவை தர்மம் செய்தல் (மத் 6:2-4), இறை வேண்டல் செய்தல் (மத் 6:5-6), நோன்பு இருத்தல் (மத் 6:16-18) ஆகியன. இவை வெளிவேடக்காரரின் செயல்கள்போல் இருத்தலாகாது என வலியுறுத்தினார் இயேசு.

இதன்மூலம் தவத்தின் உண்மையான நோக்கத்தை அவர் தெளிவுபடுத்தினார். திருச்சபையின் இறையியல் சிந்தனையில் இந்நோக்கம் ஆழமாகப் பார்க்கப்பட்டு திருச்சபை நலன், சமுதாய நலன் ஆகிய கண்ணோட்டங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. “பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும், தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும்... அன்றோ நான் விரும்பும் நோன்பு!” என இறைவாக்கினர் எசாயா மூலம் உரைத்த ஆண்டவர் (எசா 58:7) இயேசுபிரான் மூலமும் திருச்சபை மூலமும் உண்மைத் தவத்தைச் சமூக அக்கறையுடன் கொள்ளவும் சமூகநீதியுடன் கொள்ளவும் இன்றும் அறைகூவல் விடுக்கிறார்.

*- அருள்பணி. ஏ. இரபேல் - திண்டிவனம்.*


**ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்**

காலத்திற்குப்
பொருத்தமான
ஆக்கங்களை
சுருக்கமாகவும்,
இறுக்கமாகவும்
மன்னாவுக்கு
எழுதி அனுப்புங்கள்.



தரம்கண்டு
பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவைக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு



மன்னார் மறைமாவட்டத்தின் பொதுநிலையினர் பேரவையின் செயலாக்கப் பணிக்குழுவின் உத்தியோகபூர்வ தெரிவு கடந்த 03.02.2018 சனிக்கிழமை காலை 09.30 மணிக்குக் குடும்பம், பொதுநிலையினர் பணிக்குழு மையத்தில் இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. அ. விக்ரர் சோசை அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த அருட்பணி. அந்தோனி பாக்கியம் அடிகளார் பணியாளரின் மனநிலை, பணியாளர் தெரிவு போன்றவற்றிற்கான தெளிவு மற்றும் ஆற்றுப்படுத்தல் உரை வழங்கினார். மன்னார் மறைமாவட்டக் குடும்பம், பொதுநிலையினர் பணிக்கான இயக்குனர் அருட்பணி. ச. தேவறாஜா கொடுதோர் அடிகளார் பொதுநிலையினர் பேரவையின் யாப்பினை வாசித்து விளக்கினார்.

அதன்பின் பணியாளர்களுக்கான தெரிவு நடைபெற்றது. முதலில் செயலாளராக மன்னார் பேராலயப் பங்கைச் சேர்ந்த திரு. எஸ். சதீஸ் தெரிவுசெய்யப்பட்டார். தொடர்ந்து இடம்பெற்ற தலைவருக்கான தெரிவில், யாப்பின்படி பொதுநிலையினர் பேரவையின் தலைவரை நியமனம் செய்வது மன்னார் மறைமாவட்ட ஆயரையே சாரும் என்ற அடிப்படையில், கட்டைக்காடு பங்கின் மணற்குளத்தைச் சேர்ந்த திரு. ஏ. பிலிப்புப்பிள்ளை அவர்களை நியமிப்பதாக மன்னார் ஆயர் அனுப்பியிருந்த செய்தியை குருமுதல்வர் தெரியப்படுத்தினார்.

அதன்பின் இடம்பெற்ற தெரிவுகளில் பதில் தலைவராக வவுனியா இறம்பைக்குளம் பங்கைச் சேர்ந்த திரு. செந்தில் றூபன் அவர்களும், பதில் செயலாளராக வங்காலைப் பங்கைச் சேர்ந்த திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களும், பொருளாளராக பண்டிவிரிச்சான் பங்கைச் சேர்ந்த திரு. அ. ஜெயசீலன் வாஸ் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டார்கள். அத்தோடு மறைக்கோட்டங்களுக்கான இரண்டு பிரதிநிதிகள் ஒவ்வொரு மறைக்கோட்டத்திலுமிருந்து தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இந்த அமைப்பின் ஆன்மீக வழிகாட்டியாகவும், இயக்குனராகவும், மன்னார் மறைமாவட்டக் குடும்பம், பொதுநிலையினர் பணிக்கான இயக்குனரே இருப்பார் எனவும் குருமுதல்வர் அறிவித்தார்.

# அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வன்முறைகள் தொடர்பாக மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவை விடுக்கும் அறிக்கை


அண்மைக் காலங்களில் இந்த நாட்டில் மதங்களுக்கிடையில், இனங்களுக்கிடையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் இந்த நாட்டு மக்கள் அனைவரையும் மீண்டும் ஒரு தடவை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. 'நல்லாட்சி அரசாங்கம்' என்று தன்னைச் சொல்லிக்கொள்கின்ற இன்றைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை இன்னும் அதிக ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பிட்ட இடங்களில் நடைபெற்ற இந்த வன்முறைச் சம்பவங்களால் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் முறுகல் நிலையும் பதட்ட நிலையும் ஏற்பட்டுள்ளன. இந்த நாடு மீண்டும் ஒரு இருண்ட யுகத்திற்குள் சென்றுவிடுமோ என்ற அச்சமும் ஆதங்கமும் நல்மனம் கொண்ட அனைவர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை தொடர்பாக மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவையினராகிய நாம் எமது ஆழ்ந்த கவலையையும் அக்கறையையும் வெளிப்படுத்தும் முகமாக இந்த அறிக்கையை வெளியிடுகின்றோம். அனைத்துவிதமான இன, மத வன்முறைகளையும் நாம் கண்டிப்பதோடு இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் மீண்டும் இந்த நாட்டில் ஏற்படாமல் இருக்க அனைவரும் முயற்சிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைக்கின்றோம்.

உலகத்தில் இருக்கக்கூடிய நான்கு முக்கிய மதங்களைக் கொண்ட இந்த நாட்டில் மத வன்முறைகளும், இன வன்முறைகளும் பல்லாண்டுகளாகத் தொடர்ந்துகொண்டு இருப்பது மிகவும் கவலை அளிக்கும் ஒரு யதார்த்தமாகும். ஒவ்வொரு மதத்திலும் கூறப்பட்டுள்ள நல்விழுமியங்களைக் கடைப்பிடித்தால் இந்த நாடு வேற்றுமையில் ஒற்றுமை காணும் இடமாகவும், அமைதிப் பூங்காவாகவும் திகழும் என்பது திண்ணம்.

மன்னார் மாவட்டத்திலும் வடமாகாணத்தின் ஏனைய பகுதிகளிலும் அண்மைக் காலங்களில் கிறிஸ்தவ சமயத் திருச்சுருபங்கள் மற்றும் இந்துசமயப் புனிதச்சிலைகள் இனம்தெரியாதோரால் உடைக்கப்பட்டுள்ளன. இத்தகைய சம்பவங்களால் இறைநம்பிக்கையாளர்களின் மனங்கள் பெரிதும் புண்படுத்தப்பட்டுள்ளன. இதைவிட கிறிஸ்தவ இந்து, பௌத்த சுருபங்கள் மற்றும் சிலைகள் சட்டத்திற்கு முரணான வகையிலும், ஏனைய மதத்தவர்களின் மனங்களைப் புண்படுத்தும் வகையிலும் வைக்கப்பட்டுள்ளன. இந்நடவடிக்கைகளால் சமயங்களுடையில் முறுகல் நிலையும், சந்தேக மனப்பான்மையும், இடைவெளியும் அதிகரித்து வருகின்றன.

அண்மையில் அம்பாறையிலும் கண்டியிலும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் இன வன்முறையின் உச்சத்தை மீண்டும் ஒரு தடவை இந்த நாட்டிற்கும் உலகத்திற்கும் காட்டியுள்ளது. அப்பாவி மக்களின் வீடுகள், வியாபார நிலையங்கள் தாக்கி அழிக்கப்பட்டதோடு



வணக்கஸ்தலங்களான பள்ளிவாசல்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. ஒருசில தனிநபர்களுக்கிடையில் ஏற்பட்ட சிறு பிரச்சினை ஒரு இனத்திற்கு எதிரான திட்டமிட்ட தாக்குதல்களாக விரிவடைந்தமை ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துகிறது. தம்மை மதப்பற்றாளர்கள் அல்லது இனப்பற்றாளர்கள் எனக்கூறிக்கொள்ளும் ஒருசிலரின் தீவிரப்போக்குகளே இத்தகைய மத, இன வன்முறைகளுக்கு காரணமாக இருக்கின்றன. தமது மதத்தை, தமது இனத்தை தாம் அதிகம் நேசிப்பவர்கள் என நினைத்துக்கொள்ளும் இவர்கள்தான் உண்மையில் அந்த மதத்திற்கும் இனத்திற்கும் எதிரானவர்கள். இத்தகையவர்களால்தான் அந்த மதமும் இனமும் அவமானத்திற்கும் சங்கடத்திற்கும் உள்ளாகின்றன.

இத்தகையை வன்முறைகளுக்குக் காரணமானவர்களை இனங்கண்டு சட்டத்தின்முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசாங்கத்தைக் கோரிநிற்கின்றோம். ஏற்பட்ட உயிர் உடமை இழப்புக்களுக்கு உரிய நிவாரணங்களைக் காலம் தாழ்த்தாது வழங்குமாறும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.

இன, மத வன்முறைகளைத் தோற்றுவிக்கின்றவர்கள் மட்டில் அவதானமாக இருக்கும்படி அனைத்து மக்களையும் கேட்டுக்கொள்வதோடு, வீணான வதந்திகளுக்கும், பொய்ப்பிரச்சாரத்திற்கும் இரையாகாமல் கவனமாக இருக்குமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நாம் அனைவரும் நம்மோடு வாழும் ஏனைய இன, மத மக்களை சகோதரர்களாக ஏற்று அன்பு செய்வோமாக. அவர்களின் உரிமைகளை நிலைநாட்ட ஆவன செய்வோமாக. இன, மத நல்லிணக்கத்தை நிலைநாட்ட நாம் அனைவரும் நம்மை அர்ப்பணிப்போமாக.

**- மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவை**

## நாட்டின் இன்றைய சூழ்நிலை தொடர்பாக

# கத்தோலிக்க ஆயர் பேரவையின் அறிக்கை


இலங்கை நாட்டில் கிளர்ந்துள்ள இன்றை நிலை குறித்து நாம் தெளிந்த அறிவுடன் எதிர்காலத்தை முன்னுணர்ந்து செயற்பட வேண்டும். அதேபோல், இறந்த காலத்தில் ஏற்பட்ட சம்பவங்களைக் கருத்திற்கொண்டு, மனிதாபிமானம் நிறைந்தவர்களாயும், புத்தித்தெளிவுள்ளவர்களாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

பல்வேறுபட்ட இனங்கள் மற்றும் மதத்தவர்கள் பரந்து வாழும் எம் நாட்டில், ஒற்றுமையாக வாழவேண்டும் என வெளிநாட்டவர்கள் எமக்குச் சொல்லித்தரத் தேவையில்லை. அவை எமது மதங்களின் மதிப்பீடுகளிலும், கொள்கைகளிலும் வெளிக்காட்டப்படும் படிப்பினைகளாகும். எனவே, நாட்டின் நிகழ்கால நிலைக்குறித்து கிளர்ச்சிகளை செய்வதற்கென்றே தாகத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கு மேலும் கிளர்ச்சியை, தீயைப் பற்றியெரியச் செய்ய வாய்ப்புக்களை நாம் உருவாக்கிக் கொடுக்கக்கூடாது என்பதை நாம் கருத்திற் கொள்ளவேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் நாட்டுக்கும் மற்றும் மதத்திற்கும் கேட்டை, அவமானத்தை வருவிப்பதோடு, அவற்றிற்குச் செய்யும் துரோகமாகவும் அமைகின்றன. எம் நாட்டின் மதத்தலைவர்கள் அரசியல் தலைவர்களிடமும், எல்லாவிதமான அமைப்புக்களையும் கேட்டுக்கொள்வது மிகவும் பொறுமையுடனும், பொறுப்புடனும் செயற்பட்டு பயணிக்க வேண்டிய காலம் இது என்பதைப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும் என்பதே. அதற்காக அனைவரினதும் ஒத்துழைப்பையும், ஆன்மீக ரீதியிலான செபத்தையும் இறையாசீரையும் வேண்டி நிற்கின்றோம்.

## சிரியாவில் வன்முறைகள் நிறுத்தப்பட

# திருத்தந்தை அழைப்பு



சிரியா நாட்டில், தமாஸ்கு நகருக்கு அருகில், ஏறத்தாழ ஒரு வாரமாக இடம்பெற்ற கடும் குண்டுவீச்சு தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் இறந்துள்ளனர். இந்த வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்பட்டு மனிதாபிமான உதவிகள் தடையின்றி வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உலகத் தலைவர்களைத் திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

சிரியாவில் இடம்பெறும் கடும் தாக்குதல்களால் துன்புறும் மக்களுக்காக மூவேளைச் செப உரைக்குப்பின் அந்நாட்டிற்காகச் செபிப்போம் என்று சொல்லி, வளாகத்தில் கூடியிருந்த முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட திருப்பயணிகளுடன் சேர்ந்து திருத்தந்தை அன்னை மரியிடம் செபித்தார். சிரியாவில் குறிப்பாக அந்நாட்டின் கௌற்ரா கிழக்குப் பகுதியில் சண்டை தீவிரமடைந்துள்ளது. அந்நாட்டில் கடந்த ஏழு ஆண்டுகளாக நடக்கும் சண்டை மிகவும் வன்முறை நிறைந்ததாக உள்ளது. இச்சண்டையில் சிறார்கள், பெண்கள், வயதானவர்கள் போன்ற நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகியுள்ளனர்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# இந்தியக் கிறிஸ்தவர்களின் ஒற்றுமை

கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை முன்னிட்டு, இந்தியாவின் வெவ்வேறு கிறிஸ்தவ சபைகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் 200 பேர் கலந்துகொண்ட கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அக்கருத்தரங்கு, 'மோதல் முதல் ஒன்றிப்பு வரை' என்ற தலைப்பில் நடைபெற்றது. அதில் பேசிய டெல்லிப் பேராயர் அனில் கூட்டோ, இந்தியாவில் உள்ள சிறுபான்மை கிறிஸ்தவ சமூகத்தினர் ஒன்றிணைந்து வாழவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

கத்தோலிக்கத் திருஅவையில் புதுப்பித்தலை ஏற்படுத்தும் நோக்கில் மாட்டீன் லூதர் ஆரம்பித்த சீர்திருத்த முயற்சியின் 500 ஆண்டு நிறைவு இவ்வாண்டில் சிறப்பிக்கப்படுவதைக் குறிப்பிட்டுப் பேசிய பேராயர், கிறிஸ்தவ சபைகளிடையே சரியான புரிதல் இல்லாத இந்தியா போன்ற நாடுகளில், கிறிஸ்தவ மக்களிடையே ஒற்றுமை இருக்க வேண்டியது கட்டாயமானதென உரைத்தார். 130 கோடி மக்கள் தொகையினர் வாழும் இந்திய நாட்டில் 2 கோடியே 70 இலட்சம் பேர் மாத்திரமே கிறிஸ்தவர்கள் என்னும்போது, சிறுபான்மையினரான அவர்களிடையே ஒற்றுமை என்பது மிகவும் அத்தியாவசியமானது.

அதேவேளையில், பாக்கிஸ்தானிலும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை முன்னிட்டு, வேறுபட்ட கிறிஸ்தவ ஒன்றிப்புக் குழுக்கள் ஒன்றிணைந்து செபவழிபாட்டை நடாத்தி, இந்தியா, பாக்கிஸ்தான் நாடுகளுக்கிடையே அமைதி நிலவவேண்டுமெனச் செபித்துள்ளனர். இந்தியா, பாக்கிஸ்தான் என்ற பிரிவினை ஏற்பட்டு எழுபது ஆண்டுகளைக் கடந்துவிட்டபோதிலும், நல்லிணக்கம் ஏற்படுவதென்பது சாத்தியமே எனும் கருத்தும் வெளியிடப்பட்டது.



# மனநலம் காப்போம் !

## தேன்மொழி நிரோஷன் எழுதும்

### சமூக உளவியல் தொடர் - 4

# எண்ணங்களைச் சீரபடுத்துவோம்....!

இன்று நாம் ஒவ்வொருவரும் எமது தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்குடன் ஓட்டமாக ஓடிக்கொண்டிருக்கிறோம். இவ்வாறு இந்தக் காலவோட்டத்திலே பல்வேறு தடைகளை, சவால்களை, போட்டிகளை அவற்றிலும் வெற்றிகளை, தோல்விகளைச் சந்தித்தவண்ணமே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இந்த நாளாந்தப் போராட்டங்களுக்கெல்லாம் அடி ஆதாரம் எம் மனதிலிருந்து எழுகின்ற எண்ணங்களே எனலாம்.

நாளாந்தம் மனிதனுக்கு 60,000 எண்ணங்கள் தோன்றுகின்றன என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அப்படியெனில் வாழ்நாள் முழுவதும் எத்தனை எண்ணங்களோடு போராடவேண்டி உள்ளது? எண்ணங்கள் என்று கூறும்போது நாம் சிந்தனைகளை எண்ணங்களாக பொருள் காண்பதுண்டு. ஆனால் இவ் இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. எவ்வாறெனில் எண்ணங்கள் என்பன எமது நினைவுகள் மற்றும் புலன் உறுப்புக்களால் நாம் பெறும் புலக்காட்சிகளின் துணையுடன் மூளை பெறும் தூண்டுதலுக்கேற்ப தன்னிச்சையாகக் கட்டுப்பாடின்றி நிகழ்வது. ஆனால் சிந்தனை என்பது எமது விழிப்புணர்வோடு நிகழும் எண்ணங்கள். அதாவது தானாகத் தோன்றுவது அன்றி திசைப்படுத்தப்பட்டு அமையும் எண்ணங்கள் என்றும் கூறலாம்.

ஒவ்வொரு எண்ணங்களும் மூளையில் ஆயிரக்கணக்கான நியுரோன்களின் கூட்டுச் செயற்பாட்டினால் வெளிப்படுவன. இதனால் நாம் சிந்திக்கும்போது மூளையின் உயிர்ச்சக்தி வெளிவிடப்படுகின்றது. அத்தனை எண்ணங்களும் வெறும் எண்ணங்களாகவே தோன்றி எண்ணங்களாகவே அழிந்து விடுகின்றனவா? அல்லது எண்ணங்கள் நேரான சிந்தனைகளாக மாறி அவை செயல்வடிவம் பெற்று எமது மூளையின் உயிர்ச்சக்தியை அதிகரிக்கச் செய்கின்றதா? என்பது நம்மால் ஆராயப்பட வேண்டிய ஒன்று. மாறாக எமது மனமானது வெறும் தேவையற்ற எண்ணங்களால் நிறைக்கப்படும்பொழுது ஒரு விடயத்தை ஆழமாக்கி சிந்திப்பதற்குரிய வலுவை மூளை இழந்து விடுகின்றது. மேலும் மூளை இலகுவில் களைப்படைந்தும் விடுகின்றது.

இந்த எண்ணங்களும், சிந்தனைகளும்தான் மனித வாழ்வின் அத்திவாரமாக இருக்கின்றன. இந்த அத்திவாரம் ஒழுங்கானதாக இல்லாமல் அழிவுக்குரியதாக இருந்தால் மனித இருப்பு என்ற கட்டடமும் அழிந்துபோய்விடும். இந்த அளவுக்கு எமது எண்ணங்களின் சக்தி எமது நாளாந்த வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை நாம் யாரும் சிந்திக்காமல்தான் எமது எண்ணங்களையும், சிந்தனைகளையும் கண்டபடி அலைய விட்டுக்கொண்டிருக்கின்றோம். நாம் விழிப்புநிலையில் இருக்கும் ஒவ்வொரு நொடியும் எமக்கு எத்தனையோ நல்ல அத்தோடு கெட்ட எண்ணங்கள் வந்து போவதுண்டு. அதிகமாக நாங்கள் எவ்வாறான எண்ணங்களால் ஆட்கொள்ளப்படுகின்றோமோ அவ்வாறே எங்கள் வாழ்க்கையும் அமைந்திருக்கும். நாம் எதை நினைக்கின்றோமோ அதுவாகவே ஆகிவிடுகின்றோம் என்றும் கூறப்படுகின்றது.

எமது எண்ணங்களின் பிரதிபலிப்புத்தான் நாம். அதாவது எமது எண்ணங்களும் கண்ணாடியும் ஒன்றுதான். கண்ணாடி எம்மை பிம்பமாகப் பிரதிபலித்துக் காட்டுகின்றது. அதேபோல எமது எண்ணங்களும் நான் யார்? எனது வாழ்க்கை என்ன? என்பதைக் காட்டும். இது மறுக்கமுடியாத உண்மை. ‘‘பூமியில் இருப்பதும் வானத்தில் பறப்பதும் அவரவர் எண்ணங்களே’’ என கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகள் கூறுகின்றன. எமது வாழ்க்கை எமது எண்ணங்களால் சீர்ப்படவும் முடியும், சீரழியவும் முடியும் என்பதே இதன் விளக்கமாக எடுத்துக்கொள்ளலாம். மனிதனது மனதிலே தோன்றும் எண்ணங்களை நேர்மறையான எண்ணங்கள் மற்றும் எதிர்மறையான எண்ணங்கள் என வேறுபடுத்திப் பார்க்கலாம். இவ்விரண்டிற்கும் எமது வாழ்க்கைச் சம்பவங்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இவற்றால்தான் நாம் நன்றாக வாழ்வதும் நலிவடைந்து போவதும் தீர்மானிக்கப்படுகிறது எனலாம்.

## எதிர்மறையான எண்ணங்கள்

இன்று எமது ஒத்திசைவற்ற வாழ்க்கைக்கோலங்கள், முரண்பாடுகள், பகையுணர்வுகள், பிரிவுகள், பிழையான புரிதல்களுக்கெல்லாம் காரண கர்த்தா எமது எதிர்மறையான எண்ணங்களே. எம்மில் எமக்கு நம்பிக்கை இல்லை, பிறரிலும் எமக்கு நம்பிக்கை இல்லை. நான் எண்ணுவதுபோலதான் மற்றவர்கள் இருக்கிறார்கள் என்று எமது எண்ணங்களுக்கெல்லாம் கறுப்பு வண்ணம் தீட்டி தேவையற்ற பிழையான புரிதல்களை மனக்கதவாக மாட்டி, சந்தேகப்பார்வைகள், பொய்யான போர்வைகளை அதற்குப் பூட்டாகப் பூட்டி, உடல் நலத்தோடு உளநலத்தையும் இழந்து மூலைக்குள் முடங்கிக்கிடக்கின்றோம்.

‘‘ஒவ்வொரு மனிதர்களும் உலகத்தை மாற்றவேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் ஒருவர்கூடத் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டுமென நினைப்பது இல்லை’’ என லியோ டாலஸ்டாய் குறிப்பிடுகிறார். மற்றவர்கள் எம்மைப்பற்றி அப்படி நினைக்கிறார்கள், அவர்களது பார்வை பிழையாக இருக்கிறது, அவர்களால்தான் நாம் இப்படி இருக்கிறோம், என்று



அனைத்திற்குமே மற்றவர்களைச் சாட்டிக்கொண்டிருந்தால் நான் எதற்கு? எனக்கு கடவுளால் வழங்கப்பட்ட அறிவு, திறமைகள், ஆற்றல்கள் எதற்கு? என் வாழ்வு எதற்கு?

மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட தனியாள் வேறுபாடுகள் உண்டு, தனித்திறன்களும் உண்டு. முன்னேறும் வழிகள் என்னோடே எனக்கு முன்பே இருக்க, நான் இன்னும் மற்றவரை குறை கூறிக்கொண்டு திரிந்தால் என் வாழ்வின் இலக்குகளை அடைவது எப்படி? எம்மிடம் உள்ள ஆற்றல்கள் திறமைகளை இவ்வாறே நான் பயன்படுத்தாது மற்றவரைக் குறைகூறுவது முற்றிலும் தவறு.

நாம் அனைவருமே வெற்றியடையத்தவறிய சந்தர்ப்பங்களையே எப்போதும் நினைவிற்கொண்டு வேதனையின் விளிம்புக்கு சென்று வருந்துகிறோமே தவிர ஏன் இத்தகைய தோல்வி ஏற்பட்டது என்பதுபற்றிச் சிந்திப்பது இல்லை. இதனால் சிலர், ‘‘நான் உதவாதவன், ராசி இல்லாதவன், நான் எடுக்கும் காரியம் கை கூடாது, என்னால் முடியாது’’ என்று எங்களுக்கு நாங்களே வேலி அமைத்து விடுகின்றோம். இவ்வாறான எதிர்மறை எண்ணங்கள் எம் வாழ்வைச் சீரழிக்கும் அளவிற்கு வலிமை பொருந்தியன. எதிர்மறை எண்ணங்களால் ஒருவர் மன நோயாளியாகக்கூட ஆகமுடியும்.

என்னை நான் நம்பாமல் ஏற்றுக்கொள்ளாமல் இருத்தல், மூடிய மனதோடு யாரோடும் எதையும் பகிர விரும்பாமை, பிரச்சினைகளை பெரிதாக்குவது, மாற்றத்தை ஏற்க மறுப்பது, அறியாமை இருளில் இருப்பது, உண்மை அறிந்தும் பொய்மையை நாடுவது போன்ற விடயங்களைக் களைந்துவிட்டால் மட்டுமே எதிர்மறை எண்ணங்களை அழிக்கமுடியும். ஆபிரகாம் மாஸ்லோவின் கருத்துப்படி ஒவ்வொருவரும் அவரவரது திறன்கள் ஆற்றல்களுக்கேற்ப பாதை அமைத்துக்கொண்டு அவ்விலக்கை அடையும் வழியில் முழு முயற்சியாக பயணிப்போமானால் இவ்வாறன எதிர்மறை எண்ணங்கள் செயற்பாடுகளிலிருந்து தப்பிவிட முடியும். அதைவிடுத்து அரைகுறை முயற்சியுடன் எங்களில் உள்ள பிரச்சினைகளைக் கண்டு தீர்க்காது அடுத்த வீட்டில் என்ன நடக்கிறது? யார் என்ன செய்கிறார்கள்? என்று பார்த்துக்கொண்டு இருந்தால் எதிர்மறை எண்ணங்கள் என்னும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு எமது வாழ்க்கை பயனற்றதாகி விடுகிறது.

## நேர்மறை எண்ணங்கள்

நேர்மறையான எண்ணங்கள் எப்போதும் வாழ்வை நேரான பாதையில் மட்டுமே வழிநடத்திச்செல்லும். இவ் எண்ணங்கள் வாழ்வின் சவாலான தொடமுடியாத எட்டமுடியாத பக்கங்களை எல்லாம் தொட்டு அனுபவிக்கவைக்கக்கூடிய வலிமை வாய்ந்தன. உறுதியானதும், நேர்மயமானதுமான எண்ணங்கள் மலையையும் நகர்த்தவல்லன என்றும் கூறலாம். எங்கள் திறமைகள், உடற் தகமைகள், அறிவுத்திறன்கள் என்பவற்றைக் காட்டிலும் எம்மிடம் இருக்கும் நேரான எண்ணங்கள்தான் வெற்றிக்குக் காரணமாக இருக்கின்றன. பரீட்சையில் தோற்கக்கூடாது என்ற எண்ணத்தில் பரீட்சைக்கு முகம் கொடுப்பதிலும், சித்தி அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் முகம்கொடுப்பதிலும் வருகின்ற முடிவுகள் வேறு. இதனைச் சில வரலாற்று உதாரணங்களுடாகவும் நோக்கலாம். அதிகம் கல்வித்தகைமைகளோடும், உடற்தகைமைகளோடும் இருப்பவர்களைக்காட்டிலும் பின்தங்கியவர்களாக இருப்பவர்கள், யாராலும் எதிர்பார்க்கப்படாதவர்கள் வரலாற்றில் சரித்திரம் படைத்திருப்பதைக் காணலாம்.

தோமஸ் அல்வா எடிசன் ஆயிரம் தடவைகள் தோற்றாலும் விடாமுயற்சியுடன் அந்த பரிசோதனையை மேற்கொள்ளாதிருந்தால் புதிய கண்டுபிடிப்புக்கள் நிகழ்ந்திருக்குமா? திரும்ப திரும்ப செய்வதுதான் வெற்றிக்கு வழியே தவிர முடியாது என்று பாதியில் விட்டுவிட்டு ஓடுவது வெற்றியைத் தராது’’ என்று பதிலளித்தார். மேலும், ‘‘நூறுமுறை தோற்ற ஒருவர் நூற்றி ஓராவது தடவை வெற்றிபெற முடியும் என்பது எனது அனுபவத்தினூடாகக் கண்ட உண்மை’’ என்றும் ஒருதடவை பதிலளித்திருக்கிறார். இவரது வாழ்க்கைச் சரித்திரம் சுவாரசியமானது. இவர் சிறுவயதில் ஒருமுறை காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். அதனால் அவர் எட்டு வயதில்தான் பள்ளியில் சேர்ந்தார். பள்ளியிற் சேர்ந்த மூன்று மாதங்களில் ஆசிரியரது தண்டனை காரணமாக தாயாரால் பள்ளிப்படிப்பை இடைநிறுத்தினார். இருப்பினும் அவரது தாயிடம் இருந்த நேரான எண்ணம் மற்றும் நேர்மறையான ஊக்கப்படுத்தல் காரணமாகக் கல்வியைத் தொடர்ந்தார். தனது ஆராய்வூக்கத்தினால் பல ஆராய்ச்சிகளையும் செய்தார். இவ்வாறிருக்கும்போதுகூட அவரது ஒரு பக்கக் காது விபத்துக் காரணமாகக் கேட்கும் ஆற்றல் அற்றதாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இருபத்தேழு ஆண்டுகளாகச் சிறைவாசம் அனுபவித்த கறுப்பு மலர் நெல்சன் மண்டேலா சிறைக்குள் தனது உடல் இருந்தாலும் தனது எண்ணங்களையும், சிந்தனைகளையும் சிறைப்படுத்தாமல் சிறைக்குள்ளிருந்தே பல சாதனைகளைச் செய்தவராகத் தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியானார். இவ்வாறு பல சாதனையாளர்கள் இப்பட்டியலிலே இருக்கிறார்கள். இச்சாதனையாளர்கள் தமக்கு ஏற்பட்ட தோல்விகள், அவமானங்கள் துரதிஷ்டங்களைக்கண்டு மூலையில் முடங்கி விடவில்லை. சோதனைகளையும் சாதனைகளாக்கினார்.

‘‘எண்ணிய முடிதல் வேண்டும், நல்லவே எண்ணல் வேண்டும், திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும’’, என்ற மகாகவி பாரதியின் கருத்தும் இச்சாதனையாளர்களின் சாதனைகளுக்குப் பலம் சேர்க்கிறது.

எமது சமூகத்திலும் இன்று எத்தனையோ சாதனையாளர்கள் எம் கண்முன்னால் வாழ்ந்து வருகின்றார்கள். எம் நாட்டுப்போரின் அவலத்தால் அவயவங்களை இழந்து இன்று மாற்றுத் திறனாளிகளாக எம்மத்தியில் எம்மைவிட மகிழ்ச்சியான வாழ்வு வாழ்ந்துவரும் இவர்களும் சாதனையாளர்களே. தங்களது அங்கங்களை இழந்தாலும் அந்த அங்கங்களின் சக்தியைவிடப் பலமடங்கு சக்தியை அவர்கள் தங்களது நேர்மயமான எண்ணங்களால் உருவாக்கி இன்று அவர்கள் எமக்கு ஆறுதல் சொல்லவும் நேர்மனப்பாங்குகளை உருவாக்கவும் செய்கிறார்கள். இதில் கவலை என்னவென்றால் இம்மாற்றுத்திறனாளிகளிடம் இருக்கும் அந்த அபார சக்தியில் அரைவாசிகூட எம்மவரிடம் இல்லாது போகிறது. காரணம் நேரான எண்ணங்கள் என்பது எண்ணி எடுக்கும் அளவுக்குக்கூட தோன்றுவதற்கே கடினமாகிவிட்ட நிலை!

இந்த நேர்மறையான எண்ணங்கள் அடிப்படையில் சுய ஆற்றலில் ஒருவர் கொண்டிருக்கும் நம்பிக்கை, விடாமுயற்சி, சுயஎண்ணக்கரு என்பவற்றினால் கட்டியெழுப்பப்பட வேண்டியவை என்பது உளவியலாளர்களது கருத்தாகும். அதனடிப்படையில் சுயஆற்றலில் நம்பிக்கை வைப்பதற்கு என்னிடமுள்ள திறன்கள் எனக்குத் தெரிந்திருக்க வேண்டும். எவ்வாறான திறன்களை நான் கொண்டிருக்கிறேன்? என்னால் எவ்வாறான சூழ்நிலைகளைச் சமாளிக்க முடியும்? இத்திறமைகளைக் கொண்டு என்னால் எவ்விடத்திலும் இயங்க முடியும் என்னும் எண்ணமே - சுயஆற்றல் நம்பிக்கை. இந்தச் சுயஆற்றல் நம்பிக்கை ஒருவரிடம் இருக்கும்போது நேர்மறை எண்ணங்கள் தானாகவே வரக்கூடும் என்பது உளவியலாளர் அல்பேர்ட் பண்டூராவின் கருத்தாகும். ஒருவருடன் வெகு நாட்கள் பகையாக இருக்கிறேன். எப்படியும் இவருடன் மீண்டும் உறவாட என்னால் முடியும் என நம்பும் ஒருவரால் அதை நிச்சயமாகச் செய்ய முடியும்.

## விடாமுயற்சி

சிலரைப் பார்த்தால் எத்தனை தோல்விகளைச் சந்தித்தாலும் அசராமல் அடுத்த முயற்சியில் இறங்கத் தயாராயிருப்பார்கள். ஏற்கனவே உள்ள தோல்வியில் உள்ள பிழைகளைப் பழுதுபார்த்துக்கொண்டு ஓர் புதிய திருப்பத்துடன் புதிதாக இன்னொரு முயற்சியில் ஈடுபட முயல்வார்கள். என்னால் முடியும், நான் செய்து முடிப்பேன், என்று தன்னம்பிக்கையுடன் முயற்சிப்பவர்கள் இவர்கள். இதனைத் திருவள்ளுவர், ‘‘ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றி தாளாது உயற்றுபவர்’’ என்கிறார். அதாவது மனம் தளராது தாமதிக்காது முயற்சி செய்பவர் தமக்குத் தடையாக இருக்கும் விதியையும் தோல்வி அடைய செய்வார் என அழகாகக் குறிப்பிடுகின்றார்.

## சுய எண்ணக்கரு

ஒருவர் தனது வாழ்வில் மேம்பாடடைய விரும்பினால் அவர் தன்னைப்பற்றிக் கொண்டுள்ள சுய எண்ணக்கரு உயர்வாக இருக்க வேண்டும் என உளவியலாளரான கார்ல் றோஜேர்ஸ் கூறுகின்றார். அதாவது ஒருவர் தன்னை எப்படியானவராக தான் உணர்கின்றார் என்பதே சுய எண்ணக்கரு ஆகும். என்னைப்பற்றி நான் உயர்வாக எண்ணும்போதுதான் எனது எண்ணங்களும் நேரானதாக அமையும். நான் கெட்டிக்காரி, நான் திறமையானவள் என்று எண்ணிச் செயற்படும்போது நாளுக்குநாள் எம்மை அறியாமலே எமது திறமைகளும் உயரக்கூடும். இவ்வாறான முறைமைகளே நேர்மயமான எண்ணங்களுக்கு வழிவகுக்கும்.

மகிழ்ச்சி, ஆரோக்கியம் மற்றும் வெற்றிகரமான வாழ்க்கை போன்ற நல்ல விடயங்களை எம் வாழ்வில் பெற்றுக்கொள்வதற்கான ஒரு சிறந்த அணுகுமுறை நேரான எண்ணங்களேயாகும். தற்போது எம்மிடம் எமது மனதை அடிக்கடி ஆட்கொள்ளும் எண்ணங்களாக எவை இருக்கின்றன என்பதைப் பகுத்தாராய்ந்து எதிர்மறையான எண்ணங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு நேர்மறையான எண்ணங்களால் சூழப்பட்டு வாழத் தொடங்குவோம். எமது நேர்மறையான எண்ணங்கள் எமது வாழ்க்கையை வளப்படுத்த உதவும் வண்ணங்களாக இருக்கின்றன. இவ்வெண்ணங்கள் எமக்கு வாழ்வில் பல வெற்றிகளையும் சிறப்புக்களையும் தரும். உடல் ஆரோக்கியத்தோடு உளஆரோக்கியத்தையும் மேம்படுத்தும். ஒளிமயமான எதிர்காலத்தை இன்பமாக அனுபவிக்க உதவும். எமது எண்ணங்களைச் சீர்ப்படுத்துவோம்.

‘‘மனதிலுறுதி வேண்டும்? வாக்கினிலே இனிமை வேண்டும். நினைவு நல்லது வேண்டும், நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்’’ – பாரதி

(மனநலம் தொடரும்)

# மீட்பரின் பாடுகள்

## அருட்திரு. A. பீட்டர் அபீர் அடிகளார்

“அவர் இகழப்பட்டார்; மனிதரால் புறக்கணிக்கப்பட்டார்” என்ற எசாயாவின் இறைவாக்கினை வாழ்ந்து காட்டியவர் நம் ஆண்டவர் இயேசு (எசா 53:2). இயேசுவின் பாடுகள்பற்றி நான்கு நற்செய்திகளுமே விரிவாகத் தருகின்றன. நீதிமான் துன்புறுத்தப்பட்டு வேதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றான் என்ற பொதுவான போதனையை நாம் பழைய ஏற்பாட்டில் காண்கிறோம் (காண். தொ.நூ 37:39-41, தானி 3:6,2 மக் 7).

கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழும் பக்தியுள்ள யூதர் எப்படித் துன்புறுத்தப்படுகின்றனர் என்பதை தானியேல் 3, மற்றும் 6ஆம் அதிகாரங்கள் தெளிவாகக் கூறுகின்றன. இத்தகைய பழைய ஏற்பாட்டுப் பின்னணியில் நற்செய்தி நூல்களின் ஆசிரியர்கள் இயேசுவின் பாடுகளைப்பற்றி எழுதுகிறார்கள். இருப்பினும், இக்கருத்தை புதிய ஏற்பாடு வித்தியாசமாகக் காண்கிறது. இயேசு என்ற வரலாற்று நாயகர் துன்புறுத்தப்படுகிறார். அந்த இயேசுதான் கடவுளின் மகன் என்பவர், இறைத்தன்மை கொண்ட அந்தக் கடவுளின் மகனே பாடுபடுகிறார் என்று நற்செய்தி நூல்கள் விவரிப்பதன் மூலம் பழைய ஏற்பாட்டிலிருந்து வேறுபடுகின்றன. குறிப்பாகச் சொல்லப்போனால் “ஒரு மீட்பரின் பாடுகள்” என்ற வித்தியாசமான கண்ணோட்டத்தில் நற்செய்திகள் இயேசுவின் பாடுகளைத் தருகின்றன.



### (அ) “மெசியாவின் மரணம்”

மெசியாபற்றிய மறைபொருள்தான் மாற்கு நற்செய்தியில் மேலோங்கி நிற்கிறது. நாசரேத்து இயேசுதான் உலகை மீட்க வந்த கடவுளின் மகன் என்ற செய்தி இந்நற்செய்தியின் ஆரம்பம் முதலே கோடிட்டுக் காட்டப்பட்டிருப்பினும் (1,11,24,5,7,9,7) புனித பேதுருவின் அறிக்கையில் அது முக்கியத்துவம் பெறுகிறது (8,29). கடவுளின் மகனான இயேசுதான் மெசியா என்ற நிலை அவரது பாடுகள் மரணத்தோடு அதிகம் தொடர்புடையதாகக் காட்டுகிறார் மாற்கு (காண் 8: 31-33). இக்கருத்தை வலியுறுத்தும்வண்ணம் இயேசு தம் சாவுபற்றி, அதைச்சார்ந்த பாடுகள்பற்றி ஒருமுறை மட்டுமல்ல, மூன்றுமுறை அறிவிக்கிறார் (9:9-13,31,10:32-45). இறுதியாக, இந்த மெசியாபற்றிய மறையுண்மை இயேசுவின் பாடுகள், இறப்பில் தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது, “இம்மனிதர் உண்மையாகவே இறை மகன்” என்று நூற்றுவர் தலைவர் அறிவிப்பில் இதைத் தெளிவாகக் காண்கிறோம் (15:39).

மாற்கு நற்செய்தியின்படி இயேசுவின் பாடுகள் மூன்று முக்கிய போதனைகளைக் கோடிட்டுக் காட்டுகின்றன:

(1) நீதிமான் துன்புறுத்தப்படுவான் (14:18,34,15:24,29,34,15:23,36).

(2) நீதிமானாகிய இயேசுவின் பாடுகள் பலருடைய மீட்புக்கு ஈடாக உள்ளன (10:45).

(3) இறைமகன் இயேசுவின் அதே பாடுகளை அவரது சீடர்களும் ஏற்கவேண்டும் (8:31-38 9:31-35,10:32-45,13:9-11).

இத்தகைய காரணங்களினால்தான் இயேசுவின் பாடுகளுக்கு பிலாத்தைக் குற்றவாளிக்கூண்டில் ஏற்றுவதைவிடுத்து மனந்திரும்ப வாய்ப்பு இருந்தும் முரட்டுக்குணத்தால் மனந்திரும்புதலைப் புறக்கணித்த யூதர்களைப் பொதுவாகச் சாட்டுகிறார் மாற்கு (15:6-15,29-32).

### (ஆ) எல்லோருமே குற்றவாளிகள்

மாற்கைத் தொடர்ந்து மத்தேயுவும் இயேசு கடவுளின் மகன் என்ற உண்மையையும் (16:16,26,23:27,40,43,54) அவரது பாடுகள் பாவப்பரிகாரமாக உள்ளன என்ற இறையியலையும் (26:28,27:51-53) விரிவாகவே வலியுறுத்திக் காட்டுகிறார். இருப்பினும், இயேசுவின் பாடுகளில் யூதர்களின் பங்குபற்றி மாற்கு நற்செய்தியாளரிடமிருந்து மத்தேயு சற்றே வேறுபடுகிறார். இயேசுவுக்கு எதிராக இருந்தவர்களை “மக்கள் கூட்டம்” என்று வருணிக்கிறார் மாற்கு (15:8). ஆனால், இவர்களை, “எல்லா மக்களும்” என்பதைச் சுட்டிக்காட்ட விழைந்த மத்தேயு, இயேசுவின் பாடுகள் மரணத்தோடு இறந்தோரின் உயிர்ப்பையும் இணைத்துக் காட்டுகிறார் (27:25).

மத்தேயுவும் மாற்குவும் இயேசுவின் பாடுகள்பற்றிய ஒரு முக்கிய இறையியலை வெளிப்படுத்துவதில் மிகவும் ஒத்துப் போகின்றனர். யூதச்சங்கமும் உரோமையரும் இயேசுவை விசாரிக்கின்றனர் (மத் 57-68, மாற் 14:53-65), இயேசு கோவிலை இடிக்கத் தூண்டுகிறார் என்ற சமயக்குற்றம் சாட்டப்படுகிறது (மாற் 14:58, மத் 26:61), இயேசு “யூதரின் அரசன்” என்று கூறியதாக பொய்க்குற்றம் வேறு (மாற் 15:9,மத் 27:11). யூதரோ அல்லது உரோமையரோ இயேசுவைக் காப்பாற்றவில்லை. மாறாக, யூதருக்கு அஞ்சி அவர்கள் வழியில் இயேசுவை விட்டுவிடுகிறார் பிலாத்து (மாற் 15:15,மத் 27:26). மக்களால் ஏளனத்துக்கும் நகைப்புக்கும் உள்ளான இயேசு (மாற் 15:33-42, மத் 27: 45-50) “என் கடவுளே” என்று கூக்குரலிட்டு இறக்கிறார் (மாற் 15:34 மத் 27:46). இவ்வாறு மனுமகன் பாடுகள் படவேண்டும், பலருக்கு மீட்பாகத் தமது உயிரை அளிக்க வேண்டும் என்று இருவருமே தெளிவுபடுத்துகின்றனர் (மத் 16:21-28,17:22-23,20:17-19 மாற்8:31,9:31,10:33).

ஆக இயேசு ஒரு துன்புறும் மெசியா என்ற கருத்து இவர்கள் இருவரிலும் மேலோங்கி நிற்கிறது. “அவர் இறைமகனாயிருந்தும், துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைப் பெற்றுக்கொண்டார்” (எபி 5:8) என்ற வகையில் இயேசுவை இவர்கள் படம்பிடித்துக் காட்டுகின்றனர்.

### (இ) நலம் விரும்பும் நாயகன்

பாடுகள்பற்றிய பாரம்பரியக் குறிப்புகளையும் மாற்குவின் மரபையும் சார்ந்து லூக்கா மரபையும் சார்ந்து லூக்கா எழுதுகிறார். இருந்தாலும் தனது தூய்மையாக்கும் அந்தச்சூழலில் இயேசுவின் மட்டில் யூதசமுதாயத்தில் இருந்த இரு வேறுபாடான கருத்தை லூக்கா புகுத்துகிறார்: பொதுமக்கள் இயேசுவின் போதனையைக் கேட்பதில் ஆர்வம் காட்ட (19:48), மக்கள் தலைவர்கள் அவரை ஒழித்துவிட வழிதேடினர் (19:47).

இதே கருத்தை பாடுகள்பற்றிய நிகழ்ச்சிகளிலும் லூக்கா வலியுறுத்துகிறார். அதுவும் தலைமைக்குருக்களும் மறைநூல் அறிஞர்களுமான யூதச் சமயத்தலைவர்கள்தான் இயேசுவுக்குப் பிரதான எதிரிகள் என்பதை லூக்கா தெளிவாக்குகிறார்.

யூதாசு இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் கருவியாக மாற்றப்பட்டதற்குக் காரணம் இந்தச் சமயத்தலைவர்களின் சதித் திட்டமே (22:2). அப்படிக் காட்டிக்கொடுக்கும்போது அங்கிருந்தவர்கள் இந்தச்சமயவாதிகளே (22:52). அதைத் தொடர்ந்து, தலைமைச்சங்கத்தின் முன்புதான் முதல் விசாரிப்பு நிகழ்கிறது (22:61-71). இந்த விசாரிப்பில் தாம் இறைமகன்தான் என்று இயேசு நேரடியாகக் கூறவில்லையானாலும், அப்படிக் கூறியதாக அவர்மேல் வெளிப்படையாகக் குற்றம் சாட்டுபவர்களும் இச்சமயவாதிகளே (22:71). இவர்களின் எதிர்ப்பை மேலும் பல காடங்களில் லூக்கா வெளிப்படுத்தத் தவறவில்லை (காண் 23:2,4.14-15.22.25).

மாறாக பொதுமக்களின் நன்மனத்தை லூக்கா தெளிவுற வெளிப்படுத்துகிறார். தலைவர்களின் சதியைக் கூறிய அதேவரியில் இயேசுவுக்கு மக்களின் ஆதரவு இருந்தது என்றும் குறிப்பிடுகிறார் (22,2). அக்கிரமப் பாடுகளைக்கண்டு பெண்கள் அழுதனர் என்பதோடு (23, 27), ஆட்சியாளர்கள் எள்ளி நகையாடும்போது, இம்மக்கள் இவற்றைக் கண்டு “நின்றார்கள்” என்ற லூக்காவின் வரிகள் குறிப்பிடத்தக்கன (23:35). இயேசுவும் அவரது நற்செய்தியும் சுயநலவாதிகளான இச்சமயவாதிகளுக்கு ஏற்புடையதாக இல்லையென்றாலும் எளியமனம்கொண்ட பொதுமக்கள் யாவருக்கும் மீட்பாக அமைகிறது என்ற இறையியல் போதனையை லூக்கா இங்கே வலியுறுத்துகிறார். அதனால்தான் பாடுகள்படும் இயேசுவை, துன்புறும் மனிதராக அன்று, மாறாக, நன்மனம் கொண்ட நாயகனாக, மெசியாவாகக் காட்டுகிறார் (22:15,51,23:34,42-43,46). இதேபாதையில் அவரது சீடர்களும் நடந்து செல்லவேண்டுமென்று லூக்காவின் போதனையானது திருத்தூதர் பணிகள் என்ற தமது நூலில் இயேசுவின் பாடுகள் வழியில் ஸ்தேவான், பவுல் இவர்களின் பாடுகளை எழுதித் துன்பம் என்பது கிறிஸ்தவர்களின் வாழ்வில் மறுக்க முடியாத நியதி என்று வெளிப்படுத்துகிறார் (திப 9:4-5,20:22-26).

### (ஈ) பாடுகளின் நற்செய்தி

யோவான் தமது நற்செய்தி நூலில், ஒத்தமைப்பு நற்செய்திகளில் காணக்கிடைக்கும் குறிப்புகளையே அதிகம் அளித்திருப்பினும், பாடுகள் பற்றிய அவரது கண்ணோட்டம் முற்றிலும் வேறானது.

### (1) இதோ! மாபெரும் அருங்குறி

யோவான் நற்செய்தியை அருங்குறிகளின் நூல் என்றும் (1-12) பாடுகளின் நூல் என்றும் (13-20) இரு பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். இருப்பினும் பாடுகளின் நூல் உண்மையில் “பாடுகள்-மரணம்” என்ற மாபெரும் அருங்குறியை உள்ளடக்கி உள்ளது. இந்த நற்செய்தியில் காணக்கிடைக்கும் எல்லா அருங்குறிகளும் இந்த மாபெரும் அருங்குறியோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது மட்டுமல்லாமல், அவை யாவும் இயேசுவின் பாடுகள் - மரணத்தை நோக்கிப் பயணம் செய்கின்றன என்றுகூடச் சொல்லலாம்.

“மானிட மகன் இம்மண்ணிலிருந்து உயர்த்தப்படும்” (12:32) இம்மாபெரும் அருங்குறியே எல்லா அருங்குறிகளுக்கும் மேலானது. இன்னும் சொல்லப்போனால் யோவான் நற்செய்தியின் கண்ணோட்டத்தில் இந்நற்செய்தியின் மற்ற அருங்குறிகள் யாவும் இயேசுவின் பாடுகள் என்ற இறுதி அருங்குறியின் தயாரிப்புக்களாகத்தான் இருக்கின்றன. “தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை” என்றுரைத்த இயேசு (15:13)அந்த அன்பின் அடையாளமாக மட்டுமல்ல, மனித மீட்பின் அருங்குறியாக அவரது பாடுகள் அமைந்துள்ளன. வார்த்தை மனுவுருவான இயேசுவில் இறைவனும் மனிதனும் இணைகின்றனர் என்பதற்கு அவரது பாடுகள் மரணம் ஒரு மாபெரும் அருங்குறி (19:34).

### (2) வெற்றி நாயகன் இயேசு

“கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறிபோல்” (எசா 53,7) பாடுகளின்போது இயேசு வாய்திறவாது சென்றார் என்ற ஒத்தமைப்பு நற்செய்தியாளர்களின் பார்வைக்கு முற்றிலும் மாறாக, சிலுவைப்பாதையில் வீறுநடை போட்டு நிமிர்ந்துசென்ற வெற்றிவீரராக இயேசுவைக் காட்டுகிறார் யோவான்.

இயேசுவை ஒழித்துக்கட்டிவிட எருசலேம் அதிகாரிகள் பலமுறை திட்டமிட்டனர் (5:16-18,7:10-19,25,32,8:37,59,10:22-39,45-57) இத்தகைய எதிர்ப்பிலும், “நான் என் உயிரைக் கொடுக்கிறேன், என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக்கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கிறேன்” (10:17-18) என்று தனது நிலையை இயேசு தெளிவுபடுத்துகிறார். இயேசுவும் தந்தையும் ஒன்றாயிருக்கின்றனர் (17:11). ஆதலால், “இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும்” (மாற் 14:37) என்ற செபத்திற்கே இடமில்லை. மாறாக, பாடுகள் என்ற துன்பக் கிண்ணத்திலிருந்து குடிப்பதே அவரது வாழ்வின் எல்லா நோக்கமும் (18,11) இந்நேரத்துக்காகவே அவர் காத்திருந்தார் (12,27).

நடக்கவிருக்கும் எல்லா நிகழ்ச்சிகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வீரனாக, “நீ செய்ய வேண்டியதை விரைவில் செய்” என்று யூதாசுக்குக் கட்டளையிடும் இயேசு (13:27) கைது செய்ய வந்தவர்களிடம், “நான்தான் அந்த நாசரேத்து இயேசு” என்று மூன்று முறை மார்தட்டிக்கூறும் வெற்றி வீரராகத் தோன்றுகிறார் (18:4). “வாளை உறையில் போடு” என்று பேதுருவுக்கு அறிவுரை கூறுவதிலும் பாடுகள் என்ற பயத்தில் பலவீனப்படாத இயேசுவைக் காண்கிறோம் (18:11). “என் ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல, அரசன் என்று நீர் சொல்கிறீர், உண்மையை எடுத்துரைப்பதே என் பணி” என்றெல்லாம் பிலாத்து முன்னிலையில் கூறிய இயேசு குற்றவாளிக்கூண்டில் நிற்கும் கைதியாக அன்று, மனித பலவீனத்துக்குக் கட்டுப்படாத

சுதந்திரவாதியாக இயேசுவைக் காட்டுகிறார் யோவான். யோவான் காட்டும் பாடுகளின் இயேசு இறுதியில் “எல்லாம் நிறைவேறிற்று” என்ற வார்த்தைகள் மூலம் தனது பணி முடிந்தது என்ற அமைதியில் தன் உயிரை விடுகிறார். யோவான் காட்டும் இயேசுவின் வெற்றித் தன்மையைப்பற்றி விவிலிய அறிஞர் ரேமண்ட ப்ரௌன் அழகாகக் கூறுகிறார்: “பாடுகள் கால மாற்குவின் இயேசு கடவுளின் கண்களில் வெற்றி வீரராகவும், லூக்காவின் இயேசு விசுவசிக்கும் சீடர்களின் கண்களில் வெற்றி வீரராகவும் காணப்படுகின்றனர். ஆனால், யோவான் காட்டும் இயேசு அனைத்து கண்களுக்கும் வெற்றி வீரராகக் காணப்படுகிறார்” (காண். R.E, ப்ரொன், The Death of the Messiah, I (Anchor Bible, Reference Library, London:1994)/ 35.

“பாஸ்காவின் செம்மறியாக” (1:29) அறிமுகப்படுத்தப்பட்ட இயேசு, தனது நண்பர்களுக்காகவும், தமது ஆடுகளுக்காகத் தனது உயிரை அளிக்கிறார் என்றும் யோவான் காட்டுகிறார் (காண். 10:11-18,15:12-15,19:14,36).


### முடிவுரை

இரத்தம் சிந்திய ஆட்டுக்குட்டி (திவெ 12,11) ஒரு போராடும் ஆட்டுக்குட்டி (திவெ 5,6) என்று திருவெளிப்பாடு ஆசிரியர் அளிக்கும் வருணணை யோவான் காட்டும் பாடுகளின் இயேசுவுக்கு முற்றிலும் பொருந்துவதாக அமைகிறது. எத்தனை இடர்பாடுகள் நேரிடினும் துவண்டுவிடாமல் துணிந்து செல்கின்ற உறுதித் தன்மையும், எத்தகைய சோதனையும் கடவுளின் கட்டுப்பாட்டை மீறமுடியாதது என்ற நம்பிக்கைச் செய்தியையும் யோவான் இங்கே தருகிறார்.

பணம், பதவி அதிகாரம் படைத்தவர்களால் நன்மனம் படைத்தோர் துன்புறுத்தப்படலாம், அடக்கி ஒடுக்கப்பலாம், ஆனால் கடவுள் எளியோரின் பக்கம் இருக்கிறார் என்ற நம்பிக்கை எந்த உலக அதிகாரத்தையும் வீழ்த்திவிடும் என்று கூறுகிறார் இயேசு. இந்த இயேசுவின்மேல் பற்றுக்கொண்டோர், “என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக்கொள்வதில்லை” என்று தலைநிமிர்ந்து சொல்லலாம் (10:18).

ஆதலின் “கடவுளிடமிருந்து பிறக்கும் அனைத்தும் உலகை வெல்லும், உலகை வெல்லுவது நம் நம்பிக்கையே” என்ற வார்த்தைகள் (1 யோவா 5:4) பாடுகள்பற்றிய யோவானின் இறையியலைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் தருகிறது. இயேசுவின் பாடுகளைத் தியானிக்கும் இக்காலத்தில் ஒரு இலட்சியத்திற்காக நாம் பாடுகள் படுவதற்காக அஞ்சக்கூடாது என்பது தெளிவாகிறது. அத்துடன் உண்மைக்காகவும் நேர்மைக்காகவும் துன்பப்பட நாம் வெட்கப்படவும் கூடாது என்று பாடுகளின் இயேசு நமக்குத் தெளிவுறுத்துகிறார். அவர்வழி நடந்து, வாழ்விற்காக வீழ்ச்சியுற்றாலும் வெற்றி அடைவோம் என்ற நம்பிக்கையில் நாம் என்றும் வாழ்வோம்.


## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!



மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவைச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். நன்றி!

- மன்னா நிர்வாகம்.

# புனித வாரச் சிந்தனைகள்



## குருத்து ஞாயிறு

### பாடுகளின் ஞாயிறு

**முன்னுரை:**

பாசமிகு சகோதர, சகோதரிகளே!

குருத்து ஞாயிறு! புரட்சியின் பூபாளக் கீதம் இசைக்கும் புனித ஞாயிறு! மகிழ்ச்சியோடு குருத்துக்களைக் கரங்களில் ஏந்தி 'ஓசான்னா!' என்று ஓங்காரம் பாடினாலும் இதில் மறைந்திருக்கும் மறைபொருள் துன்பம் என்னும் துயரக் கடல்தான். அலைகளும் மலைகளும் துணிச்சல் மத்தியில் துரும்புகள்தான். இரும்புக் கவசமிருந்து இறுக்கமாகப் பற்றிப்பிடித்தாலும், கொள்கைப்பிடிப்புள்ளவனுக்கு ஆழிப்பேரலைகூட ஆனந்த இராகம்தான்.

எருசலேம் என்பது ஆண்டவர் இயேசுவுக்குப் புதிய இடமல்ல. அது புனிதமான இடம், ஆண்டவரது இல்லம் என்பதை ஒவ்வொரு இதயத்துடிப்பிலும் புரிந்தவர் இயேசு. ஆனால் இன்று புதிய அனுபவத்திற்காக, மனிதத்தைக் கொள்ளையிட்டுத் தின்றுவிட்டு, புனிதர்கள்போல் நடித்தவர்களை இனம்காட்ட இனம்புரியாத எண்ணத்தோடு எருசலேம் நுழைகிறார் இயேசு.

இயேசுவோடு இந்தப் பவனியில் நாம் பங்கெடுப்போம். குருவோடு இணைந்து குருத்துக்களைக் கரங்களில் ஏந்தி வாழ்த்துப்பா பாடி, இயேசு அனுபவத்தை நமதாக்க எருசலேமுக்குப் போவோம்! அனைவரும் வாருங்கள்!

### குருத்தோலைகள் மந்திரிப்பு

**முன்னுரை:**

'புனிதம்' என்ற வார்த்தையில் புதைந்திருக்கும் அர்த்தங்கள் ஆயிரமாயிரம். புனிதமான இடங்களும் பொருட்களும் கறைப்பட்டுவிடக் கூடாது. அது இறை பிரசன்னத்தைப் பெற்றுத்தர வேண்டும். அன்று ஒலிவமரக் கிளைகள், அமைதியின், அஹிம்சையின் அரசர், புனிதத்தின் புனிதரை வரவேற்க, வாழ்த்துப் பயன்படுத்தப்பட்டது. ஆம்! நாம் பிடித்திருக்கும் குருத்தோலை சிலுவைப்போருக்கு அல்ல புனித வாழ்வுக்கு அழைத்துச்செல்ல வேண்டும். நம்மைத் தியாகம் நிறைந்த தியாகச் செம்மல்களாக மாற்றம் செய்ய வேண்டும்.

இப்போது அருட்தந்தை அவர்கள் குருத்தோலைகளை மந்திரித்து புனிதப்படுத்துகிறார். நம்மையும் புனிதப்படுத்த தூய்மையான மனநிலையோடு பங்கெடுப்போம்.

### குருத்தோலைப் பவனி

**முன்னுரை:**

பவனிகள் அர்த்தமிழந்து போவதால் பவனிகளுக்குக்கூட இன்று கட்டுப்பாடுகள்! பவனிகளின்போது கட்டவிழ்த்துவிடப்படும் தீவிரவாதங்களால் அமைதிப்புறா சுட்டுவீழ்த்தப்படுகிறது. நெருக்கடிகளும், நெருடல்களும் அமைதியை இழக்கச்செய்கின்றன. ஆனால் இயேசு உண்மையை வெளிப்படுத்த, உரிமையை நிலைநாட்ட, உலகிற்கு உயிர்கொடுக்க அச்சமின்றிப் புறப்படுகிறார். அவரது இலட்சிய வேகத்தோடும், விவேகத்தோடும் நாமும் இப்பவனியில் பயணம் செய்வோம்.

### இறைவார்த்தை வழிபாடு

**முதல் வாசகம்:** எசாயா 50:4-7

**முன்னுரை:**

உலகை உருமாற்ற வேண்டுமென்று நினைப்பவர் உருக்குலைந்தே ஆகவேண்டும். பணியாளனுக்குத்தான் பாரங்கள் அதிகம்! ஆனால் அது வெற்றியின் பாலங்கள். வாழ்வு கொடுக்கவந்த இயேசுவுக்கு அவமானங்களே விண்ணில் பறக்கும் விமானச் சிறகுகள். துன்பம் அது தூரத்து இன்பத்தைக் காட்டும் துருவங்கள் என்று கூறும் துன்புறும் ஊழியனின் வீரத்தைக் கேட்டு வாழ்வாக்குவோம்.

**இரண்டாம் வாசகம்:** பிலிப்பியர் 2:6-11

**முன்னுரை:**

விட்டுக்கொடுத்தவர்கள் எல்லாம் கெட்டுப் போனவர்கள் இல்லை. கெட்டுப்போனவர்கள் எல்லாம் விட்டுக்கொடுத்தவர்கள் இல்லை. தாழ்ச்சியோடு வாழ்ந்தால் நம்மை மதிக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தோடு வாழ்ந்து வருகிறோம். ஆனால் தாழ்ச்சியின் புகழ்ச்சியில் புனிதம் புலருகிறது, உயர்வு பிறக்கிறது, உலகம் கொண்டாடுகிறது என்று கூறும் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

**நற்செய்தி வாசகம்:** மாற்கு 14:1-15:47

**முன்னுரை:**

பதவி உயர்வுக்காகவும், பணம் சம்பாதிப்பதற்காகவும் சாதாரண அற்ப மனநிலையோடு உயிரையே பறித்துவிடுகிறான் மனிதன். உடன்பிறப்பைக்கூட வேற்றினத்தான்போல வேற்றுமை பாராட்டுகிறான். நண்பர்கள்போல் நயமாகப்பேசி நயவஞ்சம் செய்யும் வஞ்சகர்கள் கூட்டத்தில்கூட நெஞ்சுரத்தோடு பணி செய்யும் பண்பை எடுத்துக்கூறும் நற்செய்திக்குச் செவிமடுப்போம்.

## பெரிய வியாழன்

### நம் ஆண்டவர் இயேசுவின் இறுதி உணவு விழா

**முன்னுரை:**

இறை இயேசுவில் பாசமிக்க இறைமக்களே! இயேசுவின் இறுதி இரவு உணவு நமது வாழ்வின் இறுதிவரையிலும் உறுதியாய்க் கொண்டாடப்படவேண்டிய உயர்ந்த நிகழ்வு. உள்ளத்திலிருந்து உள்ளதை எல்லாம் பகிர்ந்தளித்தவர் இயேசு. உண்மை புதைக்கப்பட்டபோது உண்மையை உலகறிய செய்தவர் இயேசு. பட்டினியோடு படுக்கைக்குச் செல்லும் பாமரர்களுக்கு தன்னை உணவாகக் கொடுத்தார். இந்த உலகத்தில் வாழக்கூடிய வாழ்வு சாட்சிய வாழ்வாக, சான்று வாழ்வாக அமையவேண்டும். அப்போதுதான் வாழ்வின் அர்த்தங்கள் புரியும், அடையாளங்கள் வெளிப்படும். இயேசு அன்பின் உச்சத்தை உயிர்கொடுத்து வெளிப்படுத்தினார். நற்கருணையை அடையாள முறையில் மட்டுமல்ல அர்ப்பணத்தின் அடையாளமாக, தியாகத்தின் தரிசனமாகத் தாரைவாத்துத் தந்தார். பற்றாக்குறை என்பது பற்றற்றவர்களின் வெற்று வார்த்தைகள். பகிராமையே பாவங்களின் பாதுகாவலன் என்று பகிரங்கமாகச் சாட்டினார் இயேசு. எனவேதான் தன்னைச் சிதைத்து உடைத்து உலகின் உணவாக மாறினார். உலகம் மாறவும் அழைப்பு விடுவிக்கின்றார். பணிக்குருத்துவத்தை ஏற்படுத்தி திருத்தூதர்களைத் தூண்டுகிறார். எனவே பசித்தவர்களுக்கு உணவாக, பட்டினி கிடப்பவர்களுக்கும் பாதுகாவலர்களாக வாழ்வோம் என்ற மனப்பக்குவத்தோடு பக்தியாகப் பங்கெடுப்போம்.

இவ்வரலாற்று நிகழ்வு நான்கு பெரும் பகுதிகளைக்கொண்டது. மூன்று முக்கிய மறை உண்மைகளை வெளிப்படுத்துகின்றது.

1. சீடர்களின் பாதங்களைக் கழுவியது - பிறரன்புப் பணியின் வெளிப்பாடு.
2. நற்கருணையை ஏற்படுத்தியது - அர்ப்பணம், தியாகத்தின் வெளிப்பாடு.
3. குருத்துவத்தை நிறுவியது - இறையாட்சிப் பணி தொடர இயேசுவின் உன்னத அழைப்பு.

இன்றைய வழிபாட்டின் நான்கு முக்கிய பகுதிகள் :

1. இறைவார்த்தை வழிபாடு
2. பாதம் கழுவும் பணிவுமிகு சடங்கு
3. நற்கருணை வழிபாடு
4. நற்கருணைப் பவனி

இவ்வழிபாடுகளில் பக்தியோடு பங்கெடுப்போம், வாழ்வை மாற்றுவோம், இயேசுவாக மாறுவோம்!

### முதலாம் பகுதி:
### இறைவார்த்தை வழிபாடு

**முதல் வாசகம்:** விடுதலைப் பயணம் 12:1-8, 11-14

**முன்னுரை:** சுதந்திர வாழ்வைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்புகிறவர் கடவுள். அடிமைவாழ்வு அகராதியில் இருக்கக்கூடாது என்பது கடவுளின் அக்கறை. எனவே விடுதலை வாழ்வை விரும்பி நேசிக்கிறார் இறைமகன். விடுதலை வாழ்வு கொண்டாடப்பட வேண்டியது. அது நினைவுகூறப்பட்டுக் கடவுளுக்கு நன்றிசொல்ல வேண்டிய நல்ல விழா! நன்றியின் விழா என்று கூறும் வாசகத்தைக் கேட்டு வாழ்வாக்குவோம்.

**இரண்டாம் வாசகம் :** 1 கொரிந்தியர் 11:23-26

**முன்னுரை:** சென்ற இடமெல்லாம் நன்மையே செய்த இயேசு தன்னையே தரணிக்காகத் தானம் செய்து வெற்றியை வென்றெடுக்கிறார். தோல்வியில் வெறுப்புற்ற மக்களுக்கு வெற்றிவிழாக் கொண்டாடத் தன்னையே உணவாகச் சிதைத்துக் கொடுக்கிறார். வழிபாட்டோடு இயேசுவின் தியாகத்தை விட்டுவிடாமல் நம் வாழ்வோடு இணைத்து வாழ்வை மாற்ற வரம்வேண்டி வாசகத்தைத் தியானிப்போம்.

**நற்செய்தி வாசகம் :** (யோவான் 13:1-15)

**முன்னுரை:** இயேசுவின் பணிவு பாராட்டப்படுவதற்காக அல்ல, அவரது பாடுகளில் பங்கெடுப்பதற்காக. அவருடைய தாழ்ச்சி புகழ்ந்து பாடுவதற்காக மட்டுமல்ல. நமது பாடுகளில் பணிவோடு நடந்துகொள்வதற்காக. குருத்துவம் சொகுசாக வாழ்வதற்காக அல்ல. சவால்களைச் சந்தித்துப் பணிபுரிய. நற்கருணை நல்லெண்ணத்தோடு நாளும் நம்மை உடைப்பதற்காக என்னும் உயிரோட்டம் தரும் உண்மைகளைப் புலப்படுத்தும் இறைவார்த்தைகளை நமதாக்குவோம்.

### இரண்டாம் பகுதி:
### பாதங்களைக் கழுவும் பணிவான நிகழ்வு

**முன்னுரை:** காலில் விழுவதைப்போல, காலை வாரிவிட்டு வேடிக்கைப் பார்ப்பது இன்று வாடிக்கை நிகழ்வாகிவிட்டது. காலைக் கழுவி விடுவதைப்போல நடித்துவிட்டு, நழுவிச் சென்றுவிடுகிறார்கள் பலர். காலில் விழுந்து காரியத்தைச் சாதித்துவிட்டு, அவரையே அடக்கம் செய்து விடுகிறார்கள் சிலர். ஆனால் காலில் விழுவது காரியத்தைச் சாதிப்பதற்காக அல்ல, சமத்துவ உலகம் படைப்பதற்காக, கறைப்பட்டுப்போன உள்ளங்கள் தூய்மை அடைவதற்காக, காயப்பட்ட நெஞ்சங்களுக்குக் கட்டுப்போடுவதற்காக என்ற கட்டளையைத் தருகிறார் இயேசு.

பந்தியில் அமர்வது அல்ல, பணிவிடை புரிவதே பணிவு என்று சொன்ன இயேசு பாதங்களையே கழுவி, முத்தமிட்டு முன்மாதிரி காட்டுகிறார். இத்தகைய நிகழ்வுகள் இறந்தாலும் வரலாற்றில் இடம்பிடிக்கும் இனிமைமிகு நிகழ்வுகள். நாமும் அன்பால் பிறரை அரவணைத்து, பாசம் என்னும் பணிவான முத்தங்களால் அணைபோட்டு, மற்றவர்களின் காலடிகளைக் கழுவும் பணிவுமிக்கவர்களாக, பணியாளர்களாக வாழச் சபதமெடுப்போம்.

### மூன்றாம் பகுதி:
### நற்கருணை வழிபாடு

**முன்னுரை:** அன்பு செய்யத் துடிக்கும் உள்ளத்தோர் அன்பை வெளிப்படுத்த வேண்டுமென்ற வெறியோடும், வேட்கையோடும் செயல்படுவார்கள். வாய்ப்புகள் கிடைக்கும்போதெல்லாம் வார்த்தைகள் வழியாகவும், செயல்கள் வழியாகவும் அன்பை வாரி வழங்குவார்கள். அன்பை அள்ளிக் கொடுக்கிறபோதுதான் இதயம் துள்ளி விளையாடுகிறது. அன்பைப் பரிமாறிக்கொள்கின்றபோதுதான் பிறப்பின் அர்த்தத்தையே அனுபவிக்க முடிகிறது. இயேசுவின் ஆழம்காணமுடியாத, நிபந்தனையற்ற அன்பு அவருடைய நற்கருணையில் கனிந்து காணப்படுகிறது, இனிந்து வெளிப்படுகிறது.

கிறிஸ்தவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, நங்கூரமாக விளங்கும் நற்கருணையை உட்கொள்கிற நாம் நடமாடும் நற்கருணை ஆலயங்களாக வாழ வழிபாட்டில் பங்கெடுப்போம்.

### நான்காம் பகுதி:
### நற்கருணை பவனி

**முன்னுரை:** தனிமையாகவும், குழுவாகவும் இயேசு புறப்பட்டுச்சென்று செபிப்பதும், செயல்படுவதும் வழக்கமான ஒன்று. பல இடங்களில் இயேசுவின் பயணங்கள், பணிகள், போதனைகள் எல்லாமே புரியாத புதிராகவே இருந்தன. மலையில் இயேசுவின் உருமாற்றம் புதிய சமூகத்திற்கு முன்னோடி, முன்னேற்பாடு. முயற்சியின் முதிர்ச்சி என்பதைக்கூட புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் பாடுகளின் பவனி துவங்குகிறது என்பதன் அடையாளமாக இயேசு திருத்தூதர்களோடு கெத்சமனித் தோட்டத்திற்குப் புறப்படுகிறார். இப்பவனியில் பங்கெடுக்கும் நாம் அனைவரும் ஆண்டவரின் அறைகூவலுக்கும், அவரது குரலுக்கும் செவிமடுக்க வேண்டும். நம்மைச் சிதைத்து, ஏழைகளின் நண்பர்களாக வாழ முடிவெடுத்துப் பவனியில் பாடுகளை ஒப்புக்கொடுத்துத் தொடர்வோம், தொடுவோம் வானத்தை!

என்னோடு விழித்திருந்து செபிக்க உங்களால் முடியவில்லையா? என்ற இயேசுவின் கேள்விக்குப் பதில் கொடுக்க நள்ளிரவுவரை இறைவேண்டலில் நட்புறவில் இணைவோம். இறை அருளைப் பெறுவோம்.

**ஆண்டவர் இயேசு மனுக்குலத்தை மீட்டது தம் முழு வாழ்வால் என்றாலும், தம் பாடுகள், மரணம் மற்றும் தனது உயிர்ப்பால் நம் எல்லோரையும் சிறப்பாக மீட்டுள்ளார்.**


**உலகம் முழுவதையும் உலுக்கி சீர்படுத்திச் செம்மையுறச் செய்கின்ற இந்த மாபெரும் நிகழ்வுகளை அருள் அடையாளங்கள் வழியாகக் கொண்டாடிப் பயனடைய திருச்சபை தம் மக்களை ஏழு வாரங்கள் தயார் செய்கின்றது.**

**வாழ்வும் - வழிபாடும் இணைந்து செல்லும் இணைகோடுகள். நமது வாழ்வே வழிபாடாகவும், வழிபாடு - வாழ்வாகவும் மாற வேண்டும். இத்தகைய வாஞ்சையோடு இந்தச் சிந்தனைகள் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. இவற்றை நீங்கள் புனிதவார வழிபாடுகளிலும் பயன்படுத்தலாம். அதைவிட தனிப்பட்ட முறையில் வாசித்து அந்த நாளுக்குரிய வழிபாட்டின் உட்பொருளை ஆழமாக விளங்கிக்கொள்ளலாம்.**

# புனித வாரச் சிந்தனைகள்

## திருப்பாடுகளின் வெள்ளி








**முன்னுரை**

சத்திரத்தில் இடம் கிடைக்காத இயேசு சரித்திரத்தில் இடம் பிடித்தது எரிச்சலைக் கொடுத்தது. எனவே எரித்து சாம்பலாக்க வேண்டுமென்று சபதமெடுத்தனர். ஆனால் சரித்திரத்தையே மாற்றி அமைத்தார் இயேசு. வரலாற்றை வரையறுத்து வைத்திருந்தவர்கள் மத்தியில் புதிய வரலாற்றை உருவாக்கினார். எனவே கல்லறை கட்டி அடையாளம் தெரியாமல் அழித்துவிட பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். ஆனால் மேற்கோள்களைக் காட்டி மேன்மையோடு நடந்துகொள்கிறார் இயேசு.

கருவறையில் இருந்தபோது கலகம். கல்லறையிலும் கலகமா? பிறப்பில் வரலாறு பிறந்தது. இறப்பில் இருந்த இடமோ, வாழ்ந்த தடமோ இல்லாது செய்ய வேண்டுமென்று செயல்பட்டவர்கள் வாயடைத்து நின்றார்கள். ஏனென்றால் இறப்பில்தான் இறவாக்காவியம் உருவானது. காலம் கலகத்தை உருவக்கியது. வரலாறு காலத்தை இரண்டாகப் பிரித்தது.

சிரித்தவர்கள் சிந்தித்தார்கள். சிதைத்தால் சிற்பமாகி விடுவார் என்று அஞ்சினார்கள். எனவே புதைத்துவிட புதிய யுக்திகளைச் சக்தியாகப் பயன்படுத்திப் பார்த்தார்கள். எதுவுமே பயனளிக்கவில்லை. வாழ்வு கொடுக்கவந்த இயேசுவின் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இயேசுவின் இறப்பு இயற்கையாக வந்தது அல்ல. இறைவனின் திட்டம் நிறைவேறுவதற்காக நிறைவேற்றப்பட்ட திருச்சட்ட நிறைவு. எனவே நாம் கண்ணீர் வடித்து கலங்கி ஆதங்கப்பட வேண்டிய நாள் அல்ல. ஆத்திரப்பட்டு அவசர முடிவுக்கு வரவேண்டிய நிகழ்வும் அல்ல. அமைதியாக ஆண்டவரோடு நம்மை இணைத்துப் பார்க்கவேண்டிய வெற்றியின் நாள். இயேசுவின் சாவு, சமாதிகட்ட நினைத்தவர்களுக்குச் சவுக்கடி கொடுத்தது. இயேசுவின் சித்தம் என்று சொல்லி நித்தம் வருந்தி வாழத்தேவையில்லை. ஏனென்றால் இயேசுவின் இறப்பில் சிறப்பான எதிர்காலம் பிறந்தது. எதிர்த்தவர்கள் ஏமாந்துபோனார்கள். எள்ளி நகையாடியவர்கள் ஆடிப்போனார்கள். எரிக்கப் பார்த்தவர்கள் எரிந்துபோனார்கள். எனவே இயேசுவின் இறப்புக்கு அஞ்சலி செலுத்தாமல் ஆராதனை செய்வோம்! ஆதங்கப்படாமல் ஆனந்தப்படுவோம்! அழுவதையும், விழுவதையும் நிறுத்திவிட்டு நிம்மதி அடைவோம்! ஆனந்தகீதம் பாடி ஆர்ப்பரிப்போம்! ஆர்ப்பாட்டங்களை அடியோடு அழித்து, அர்த்தமுள்ள வாழ்வு வாழ வரம் வேண்டுவோம். துன்பமின்றி இன்பமில்லை, வேதனையின்றி சாதனையில்லை. முயற்சிகள் இன்றி வெற்றிகள் இல்லை. மொட்டு இதழ்களை விரித்தால்தான் மலர்கள் மலர்கின்றன. நாம் நம்மைச் சிதைத்தால்தான் புதுவாழ்வு மலரும் என்ற எரியும் எண்ணங்களோடு இத்திருவழிபாட்டில் பங்கெடுப்போம்.

### முதல் பகுதி:
### இறைவார்த்தை வழிபாடு

**அ. முதல் வாசகம்: எசாயா 52:13,53:12**

**முன்னுரை:**

பணி வாழ்வு என்பது எதையும் எதிர்பார்க்காமல் செய்வது. பணி என்பது சம்பாதிப்பதற்காகவும், சுய ஆசைகளைச் சாதிப்பதற்காகவும் இல்லை. மாறாக இலட்சியங்கள் நிறைவேற, இலட்சங்களுக்கோ, இலஞ்சங்களுக்கோ அடிமையாகாமல் அயலானுக்கு அன்புப்பணி செய்வதேயாகும். அதில் வருவது வருமானம் அல்ல, அவமானம்! ஆனால் பணியாளனுக்கு அவமானம் என்பது அரைக்கச்சை: அவலங்கள் என்பது இடைக்கச்சை என்று கூறும் வாசகத்தைக் கேட்டு பணி செய்து வாழ்வோம்.

**ஆ. இரண்டாம் வாசகம் எபிரேயர் 4:14-16,5:7-9**

**முன்னுரை:** அடிமையின் பணி இழிவானது அல்ல, விழிப்பானது. ஒளியின் வாழ்வுக்கு அழைத்துச் செல்வது. எனவே அடிமைநிலைக்குத் தாழ்ந்து வந்து வாழ்வு தந்தார் இறைவன். தாழ்ந்து வந்து பணி செய்பவர்கள் பிறருக்கு வாழ்வு கொடுப்பதால் வாழ்த்தப்படுகிறார்கள். இறைவனிடமிருந்து உயர்ந்த வாழ்வைப் பெறுகிறார்கள் என்று கூறும் அருள்மொழிகளை அமைதியுடன் கேட்போம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு:

**முன்னுரை:**

பாசமிக்கவர்களே! இன்று நாம் பத்து முக்கிய கருத்துக்களுக்காக இறைவேண்டல் செய்கிறோம். திருச்சபையும் நம்மோடு சேர்ந்து இறைவேண்டல் செய்கிறது.

முதலில் இறைவேண்டலில் மையக்கருத்து அறிவிக்கப்படும். பின்னர் சற்றுநேரம் அமைதியாகச் செபித்த பிறகு குருவானவர் மன்றாட்டைச் சொல்வார். பதிலுரையாக அனைவரும் இணைந்து "ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்" என்று பாடுவோம் (சொல்லுவோம்). நாமும் உருக்கத்தோடு செபிப்போம்.

### இரண்டாம் பகுதி:
### திருச்சிலுவை ஆராதனை

**முன்னுரை:**


சகோதர சகோதரிகளே! இன்றைய திருவழிபாட்டின் இரண்டாம் பகுதியான திருச்சிலுவை திருஆராதனை நடைபெற உள்ளது. மடமையாகக் கருதப்பட்ட சிலுவை மாட்சிமை நிறைந்ததாக மாறியது. இழிவாகக் கருதப்பட்ட சிலுவை இறுதி மீட்பை தரும் பேரின்பமாக மாறியது.

கண்ணெடுத்துப் பார்க்காமல் ஒதுக்கப்பட்ட சிலுவை, கரங்கள் எடுத்து கும்பிடும் அடையாளமாக மாறியது. அழிவென கருதப்பட்ட சிலுவை, வாழ்வின் சிலுவையாக வடிவெடுத்தது, வாழ்வு கொடுத்தது. ஆம்! சிலுவைகள் வாழ்வின் சிகரங்கள்! துன்பங்கள் வாழ்வின் இன்பங்களின் ஊற்று என்ற எண்ணங்களோடு இத்திருச்சிலுவை ஆராதனையில் அர்த்தமுள்ள விதத்தில் பங்கெடுப்போம்.

### மூன்றாம் பகுதி :
### திருவிருந்து

இயேசுவின் இறப்பை இன்று நாம் நினைவு கூர்வதால் திருப்பலி திருவருட்சாதனம் நிறைவேற்றுவதில்லை என்றாலும், இறை மனித உறவில் சங்கமிக்க திருச்சிலுவை இன்று திருவிருந்தைப் பகிர்ந்துகொடுக்க அழைக்கிறது. இறப்பில்தான் உயிர்ப்பு பிறக்கிறது என்ற நம்பிக்கையோடு திருவிருந்தில் பங்குகொள்வோம்.

# தவக்காலத் தயாரிப்புச் சிந்தனை









உலகைப் படைத்த இறைவன், தன் சாயலிலேயே மனிதனைப் படைத்தார். ஆனால், சாத்தானின் சோதனையால் மனிதன் வாழ்வில் பாவம் என்ற கறை படிந்தது. ஆனால், மனிதன்மேல் மாறாத அன்புகொண்டிருந்த இறைவன், மனித இனத்தை மீட்கவும், சாத்தானின் சூழ்ச்சிக்கு முடிவு கட்டவும் முதுபெரும் தந்தையர் வழியாகவும், இறைவாக்கினர் வழியாகவும் பேசினார். மனிதனோ தொடர்ந்தும் பாவத்தினால் அழிந்துகொண்டிருந்த வேளையில், அவர்களைச் சாத்தானிடம் இருந்து காக்கவும், தன் மாறாத அன்பை உறுதிசெய்யவும் இறைவன் தன் மகனையே இவ்வுலகுக்கு அனுப்பினார். அவ்வாறு அனுப்பப்பட்ட இறைமகனாம் இயேசுவின் மேலும், அவரை அனுப்பிய இறை தந்தைமேலும் நம்பிக்கை கொள்பவர்களுக்கு நிலையான வாழ்வு எனும் பரிசினை இறைவன் வழங்கினார்.

ஆனால், இறைமகன் இயேசுவையும் அவரது போதனைகளையும் ஏற்றுக்கொள்ளாத மக்கள், அவருக்குச் செவிசாய்க்காத இருளின் மக்கள், அவரையே சிலுவைச்சாவுக்குத் தீர்ப்பிட்டுச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். நம் முன்னவர்களால் நாம் பாவம் எனும் நோயில் விழுந்திருந்தாலும், அவர் பட்ட காயங்களால் நாம் நலம்பெற, அவர் இரத்தத்தினால் நாம் தூய்மைபெற, நம் பாவ இயல்புகளை விடுத்து ஒறுத்தல்களைச் செய்து அதனூடாக இறைமகன் இயேசு நம்மீது கொண்டுள்ள ஆழமான அன்பை அறிந்துகொள்ள நாம் அவரை அன்புசெய்ய, நம் வாழ்வு சிறக்க தவக்காலத்தின் மேன்மை எமக்கு வழிகாட்டுகின்றது.

இயேசுவின் பொதுவாழ்வு மூன்று ஆண்டுகளாய் இருந்தாலும், குருத்தோலை ஞாயிற்றுக்கிழமை அன்று நாம் நினைவுகூரும் இயேசுவின் எருசலேம் திருப்பயணம், தொடரும் பிலாத்துவின் அரண்மனை நிகழ்வுகள், கல்வாரி நோக்கிய சிலுவைப்பாதை போன்ற பல நிகழ்வுகள் தவக்காலத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. சுருங்கச் சொல்லின், வெற்றி ஆரவாரத்தோடு, இயேசுவைக் கழுதைமேல் ஏற்றித் தாவீதின் மகனே ஓசான்னா! எனத் தொடங்கிக் கல்லறை அடக்கம்வரை தொடரும் நிகழ்வுகள்தான் அவையாகும்.

தவக்காலம் என்றால் என்ன என்பதற்குப் பல கோண விடைகளுண்டு. அதாவது இந்நிகழ்வுகளை அறிவுக்கண்ணோடு மட்டும் பார்த்து, அந்த இடத்திலேயே மறந்துவிடாது, உணர்வுபூர்வமாக உணரவைக்கும் காலமே தவக்காலமாகும்.

அதுபோலவே, இறைசாயலாகப் படைக்கப்பட்ட நாம், நமது வாழ்வினை இயேசுவின் வெளிப்பாட்டோடு வாழ்கின்றோமா என்பதை அறியும் காலம் தவக்காலமாகும். இறைவன் கட்டளைக்கு ஏற்ப வாழத்தவறிய வேளைகளில், அதனூடாக நாம் இழந்த அருட்கொடைகளை மனதுக்குள் ஆய்வு செய்து இழந்தவற்றை மீண்டும் பெறுவதற்கு முயற்சி எடுக்கும் காலமே தவக்காலமாகும். இவை அனைத்திற்கும் மேலாக நாம் பாவத்தோடே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். அப்படிப்பட்ட எங்களை மீட்கப் பிறந்த இயேசுவை துன்பப்படுத்தி, அவமானப்படுத்தி, இரத்தம் சிந்த வைத்து, கள்வரின் அடையாளமான சிலுவையில் அறைந்து கொல்லப்பட்ட அதே இயேசுவோடு ஒன்றிக்க உதவும் காலமே தவக்காலமாகும்.

ஏன் தவக்காலம் 40 நாட்களை உள்ளடக்குகின்றது? நம் தந்தையாகிய கடவுள் தம் மக்களைக் காக்க, விடுதலைப் பயணத்துக்கு 40 ஆண்டுகளை எடுத்துக்கொண்டார் என்றும், எலியா 40 பகலும் 40 இரவும் நடந்து ஒரேபு மலையை அடைந்தார் என்றும் கூறப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் இயேசு பாலைநிலத்தில் 40 நாட்கள் தவம் இருந்தார் எனத் தொடர்கின்றது.

எனவே, நாமும் இயேசுவின் பாடுகளைத் தியானித்து, உணர்ந்து, அப்பட்டறிவுகளின் ஊடாக வாழ்வை அமைக்கவே 40 நாட்கள் தரப்பட்டுள்ளன. மேலும், தவக்காலத்தை முழு மனதாகச் சிந்திப்பவர்கள் யாராக இருந்தாலும் இயேசுவின் சிலுவைப் பயணத்துக்கு ஒரு விடை தருவார்கள். அது ஒருவருக்கு ஒருவர் வேறுபடலாமே தவிர, பதில் இல்லாதவர்கள் எவரும் இல்லை. அப்பதிலுக்கு ஏதுவான வாக்கியத்தை இயேசுவின் சிலுவைப் பயண வார்த்தைகளில் இருந்து எடுத்து வாழ்வோம்.

தவக்காலத்தில் ஏழைகளுக்கு உதவுங்கள், இறைவனை மனம் உருகி வேண்டுங்கள், தவம் இருங்கள், திருச்சபை வழங்கும் ஆன்மீகக் கடமைகளை நிறைவேற்றுங்கள்.

# நோன்பிருப்பது எப்படி?
# தவக்காலச் சிந்தனை

அருட்தந்தை ம. றெஜீஸ் இராஜநாயகம்




பிறருக்குத் தீர்ப்பிடுவதைத் தவிருங்கள்
அவர்களில் வாசம் செய்யும் இயேசுவில் மகிழுங்கள்.
வெளிப்படையான இருளைத் தவிருங்கள்
உண்மை ஒளியில் மகிழுங்கள்.
தோல்வி மனப்பான்மையைத் தவிருங்கள்
நல்லார்வ நலத்தில் மகிழுங்கள்.
நோய் பற்றிய சிந்தனைகளைத் தவிருங்கள்
இறைவனது குணமாக்கும் வல்லமையில் மகிழுங்கள்.
மாசுபடுத்தும் வார்த்தைகளைத் தவிருங்கள்
தூய்மையாக்கும் வார்த்தைகளில் மகிழுங்கள்.
கோபத்தைத் தவிருங்கள்
பொறுமயில் மகிழுங்கள்.
கவலையைத் தவிருங்கள்
இறைவனது பராமரிப்பில் மகிழுங்கள்.
தணியாத அழுத்தத்தைத் தவிருங்கள்
இடைவிடாத செபத்தில் மகிழுங்கள்.
எதிர்மறைகளைத் தவிருங்கள்
உடன்பாடுகளில் மகிழுங்கள்.
முறைப்பாடுகளைத் தவிருங்கள்
பாராட்டுக்களில் மகிழுங்கள்.
எதிப்புணர்ச்சியைத் தவிருங்கள்
சமரசத்தில் மகிழுங்கள்.
கசப்புணர்ச்சியைத் தவிருங்கள்
மன்னிப்பில் மகிழுங்கள்.
மனக்கவலையைத் தவிருங்கள்
நம்பிக்கையில் மகிழுங்கள்.
"நான்" என்பதைத் தவிருங்கள்
மௌனமாக இதயத்தில் மகிழுங்கள்.



# புனித வாரச் சிந்தனைகள்

## புனித இரவில் பாஸ்காத் திருவிழிப்பு





**பொது முன்னுரை:**

அன்புமிக்க இறைமக்களே! மனதிலே ஏதோ இனம்புரியாத புதுவகையான மகிழ்ச்சி நமக்கு. இன்றுபோல் என்றும் இருக்க வேண்டுமே என்ற எண்ணம். ஏனென்றால் உயிர்ப்புதான் முடங்கிக் கிடந்த சீடர்களை முன்னேற வைத்தது. அடங்கி அஞ்சி நின்ற சீடர்களுக்குப் புது நம்பிக்கையைக் கொடுத்தது, நல்லெண்னங்களை வளர்த்தது. நற்செயல்கள் செய்யவும், நற்செய்தி அறிவிக்கவும் ஆற்றலைக் கொடுத்தது. இந்த இரவு இறுமாப்புக்களையும், இறுக்கமான மனநிலைகளையும் உடைத்த இரவு. உண்மையும், உறவும் உயிர்த்த இரவில் நாம் அனைவரும் கூடிநிற்கின்றோம். உலகம் இருளின் சக்திகளோடு சமரசம் செய்யக்கூடாது என்பதற்காக ஒளியாக உயிர்பெற்றெழுந்தார் இயேசு. நாமும் ஒளிகளைக் கரங்களில் ஏந்தி நிற்கின்றோம். இந்த உயிர்ப்பின் ஒளி உள்ளங்களில், இல்லங்களில், இதயங்களில், உறவுகளில் ஒளிர செபித்து இன்றைய திருவழிபாட்டில் பங்கெடுப்போம்.

## முதல்பகுதி: ஒளி வழிபாடு

**அ. புதியத் தீயைப் புனிதப்படுத்துதல்**

**முன்னுரை:** இருள் அகலவேண்டுமென்றால் ஒளி ஏற்றப்பட வேண்டும். காரிருள் விலகவேண்டுமென்பதற்காகப் பேரொளியாக, பேரருட்சுடராக வந்தவர் நம் ஆண்டவர் இயேசு. இதயங்களில் இருள் இருந்தால் விழிகளை மறைத்துக்கொள்கிறது. அருள் தீபம் அணைக்கப்படுகிறது. இதனால் வாழ்வும் அழிந்துபோகிறது. ஒளியை ஏற்றி மரக்காலின்மேல் வைக்கிறபோது மங்காமல், மறையாமல் ஒளி வெளிச்சத்தைக் கொடுத்து, எல்லாத் தடைகளையும் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. எனவே நமது பழைய இருள் என்ற தீயவாழ்வை மாற்றி, தீபத்தைப்போல புதிய வாழ்வு வாழ வரம்வேண்டி விழிகளில் ஒளியேற்றுவோம்.

**ஆ. பாஸ்காத் திரியைப் புனிதப்படுத்தல்:**

மெழுகும் திரியும் இணைந்து எரிவதுபோல நமது வாழ்வும், வழிபாடும் இணைந்து செல்லவேண்டும். நமது செபமும், செயலும் ஒன்றோடொன்று கலந்து செல்லவேண்டும். வாழ்வு கலைந்து செல்லாமல் இருக்கவேண்டுமென்றால் இறைவனோடு நாம் இரண்டறக் கலக்க வேண்டும்.

கடலையும் கட்டாந்தரையாக்கி கலங்கரை விளக்காக விளங்கியவர் இறைவன். அடிமைத்தனத்தில் அடிவாங்கிய மக்கள் வாழ்வில் நெருப்புத்தூண் வழியாகத் துணை நின்றவர் இறைவன். தன்னைக் கரைத்து உருக்கி உயிர் தந்து, உயிர்ப்பிலும் பங்கு தந்த ஆண்டவர் இயேசுவைப்போல அர்ப்பணத்திலும், அயராப் பணியிலும், அன்பு வாழ்விலும் ஒளியாக, வழியாக வாழ்ந்துகாட்டுவோம் என்ற வாக்கோடு வழிபாட்டில் இணைவோம்.

**இ. பாஸ்காத் திரி பவனி:**

நமது வாழ்க்கைப் பயணங்கள் இன்று ஒரு பவனியாக மாறி வருகின்றன. எல்லாப் பவனிகளும் ஏதோ ஒரு பாடத்தைக் கற்றுத் தருகின்றன. பயிற்சிக்கும், படிப்பினைக்கும் நம்மை அழைத்துச் செல்கின்றன. ஏதோ ஒரு படிப்பினையைத் தந்தாலும் வாழ்வுக்கு அது படிக்கட்டுகளாக அமைவதில்லை. ஆனால் பாஸ்காத்திரிப் பவனி இயேசுவின் பணி வாழ்க்கையைப் பணிவாகக் கற்றுத்தரும் பவனி. இயேசுவின் மதிப்பீடுகளை உற்றுநோக்கி உள்வாங்கும் பவனி என்ற உள்ளத்தோடும் உள்ளன்போடும் இப்பவனியில் பயணம் செய்வோம்.

**ஈ. பாஸ்காப் புகழுரை:**

புகழ்உரை என்பது ஒருவரைப் புகழ்ந்து பாடுவது. இஸ்ரயேல் மக்கள் இறைவனைத் தேடியபோது, தேவைகளைப் புரிந்து மக்களையே தேடிச்சென்றார் இறைவன். இறைவன் மனிதனைத் தேடிச்சென்றதால் வானதூதர்களும் வாழ்த்துக்கீதம் பாடினார்கள். நாமும் பெரும் மகிழ்ச்சியோடும், பேருவகையோடும், பெருமிதத்தோடும் இப்பாடலைப் பாடுவோம். இறைவனின் உடனிருப்பையும் அவருடைய பராமரிப்பையும் உணர்ந்து இப்பாடலில் இணைவோம்.

## இரண்டாம் பகுதி:
## இறைவார்த்தை வழிபாடு:

பாசமிக்கவர்களே! இன்றைய திருவழிபாட்டின் இரண்டாம் பகுதியான இறைவார்த்தை வழிபாட்டில் பயணிக்க இருக்கிறோம். இறைவார்த்தை நமக்கு ஆறுதலையும், ஆதரவையும் தருகிறது. காயத்திற்குக் கட்டுப்போடும் அருமருந்தாகிறது. கட்டுப்பாடுகளைக் கற்றுத்தருகிறது. இறைவார்த்தை உயிருள்ளது: உயிர்ப்பின் நம்பிக்கையை ஆழப்படுத்தக்கூடியது. அடிமை வாழ்விலிருந்து உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டோம் என்ற வார்த்தைகளை வரிதவறாது கேட்டு வாழ்வாக்குவோம். முதலில் வாசகத்திற்கான முன்னுரை வாசிக்கப்படும். அதன்பின் வாசகம் அறிவிக்கப்படும். தொடர்ந்து பதிலுரைப்பாடல் பாடப்படும். இறுதியில் குருவானவர் அமைதியில் செபிக்க அழைப்பு விடுப்பார்.

**முதல் வாசகம்: தொடக்க நூல் 1:1-2:2**

**முன்னுரை:** இயற்கை இறைவனின் இதயத்துடிப்பின் வெளிப்பாடு. இயற்கை இறைவனின் இறைபிரசன்னத்தை வெளிப்படுத்துகிறது. இயற்கையின் வழியாக இறைவன் பல்வேறு அடையாளங்களைத் தந்து அருள்வரங்களையும் பொழிந்திருக்கிறார். ஆனந்த நடனமாடும் பறவைக் கூட்டங்கள்! ஆர்ப்பரித்து அக்களிக்கும் மீனின் ஒட்டகங்கள். தத்தித் தாவும் விலங்கினங்கள், தவழ்ந்து செல்லும் மயில்கள், தாராளமாகக் கனி தரும் தாவரங்கள், வானத்தை அலங்கரிக்கும் விண்மீன்கள், வளைந்து நெளிந்து நெகிழவைக்கும் செடி, கொடிகள், ஊர்வலம் நடத்தும் ஊர்வன, பவனி நடத்தும் பறப்பன எல்லாமே சிறப்பான படைப்புக்கள்! இறைசாயலாக, படைப்பின் சிகரமாகப் படைக்கப்பட்டவன் மனிதன். எல்லாவற்றின்மீதும் அதிகாரம் கொடுத்ததால் மாசுமறுவற்ற படைப்பை மாசுபடுத்திவிட்டான் மனிதன். வாழத்துடிக்கும், படைப்பைக் காக்கும் பணி நமது தலையாய பணி என்று கூறும் வாசகத்தைக் கேட்போம்.

**இரண்டாம் வாசகம்: தொடக்கநூல் 22:1-8**

**முன்னுரை:** என்னால் முடியாது என்பவன் முடங்கிப் போகிறான். இறைநம்பிக்கை உள்ளவன் முயற்சிக்கிறான், வாழக்கையில் முன்னேறுகிறான். இறைவனை உறுதியாய் பிடிப்பவனை உயர்ந்த இடத்தில் வைக்கிறார் இறைவன். சோர்விலும், சோகத்திலும் சொர்க்கத்திற்கே கொண்டுசெல்கிறார் இறைவன். உயிரை இழக்க நேர்ந்தாலும் நேசமாய் கரம்பிடித்து உயிர் கொடுக்கிறார். எந்தச் சூழலிலும் துணிச்சலைக் கொடுத்து துணை நிற்கிறார் இறைவன். ஆபிரகாமைப் பார்த்து தன் ஒரே மகனைப் பலியிடச் சொன்னபோது நம்பிக்கையோடு பலியிடத் துணிவதை நல்லெண்ணத்தோடு கேட்போம்.

**மூன்றாம் வாசகம்: விடுதலைப் பயணம் 14:15-15:1**

**முன்னுரை:** அரண்மனை கட்டி அரியாசனத்தில் அமர்ந்து சுகம் அனுபவிப்பவர் இறைவன் அல்ல. வானத்தில் வனாந்தரம் அமைத்து வாழ்பவரல்ல அவர். வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்கள் மத்தியில் சுமைதாங்கியாய் நிற்பவர் இறைவன். அழுகுரல் கேட்டு ஆனந்தப்படாமல் அணைப்பவரும், அன்பு செய்பவரும் இறைவன். பாரவோன் மன்னன் பாடுபடுத்தியபோது பக்கத்தில் இருந்து பாதுகாத்தவர் இறைவன். பாலைவனத்தில் பட்டினியோடு கிடந்த மக்களை சோலைவனத்திற்கு, பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டிற்கு அழைத்த இறைவனின் அன்பை அமைதியோடு கேட்போம்.

**நான்காம் வாசகம்: எசாயா 54: 5-14**

**முன்னுரை:** மனிதனுடைய அடிப்படை ஏக்கமே அமைதியோடும் மகிழ்ச்சியோடும் வாழவேண்டும் என்பதுதான். நாம் கவலைப்படாமல், கண்கலங்காமல் வாழவேண்டுமென்பது இறைவனின் திட்டம், சட்டம். இதைத் திட்டவட்டமாகத் தீர்மானித்துக் கூறியிருக்கிறார் இறைவன். நாம் முகவரி இழந்து, முகம் குப்புற விழும்போது முகவரி தருபவர் இறைவன். நாம் கைவிடப்படுகிறபோது கரங்களை இறுக்கமாகப் பிடித்து காக்கும் கரங்களாகச் செயல்படுபவர் இறைவன்.

உருவையும், கருவையும் இழந்து நிற்கும் எருசலேமைப் பார்த்து ஏங்கினாலும் எதிர்காலத்தில் துளிர்விடும், தூய்மை பெறும் என்று கூறும் வாசகத்தைக் கேட்டு இறைவனின் பார்வையில் நாம் விலையேறப் பெற்றவர்கள் என்ற எண்ணத்தோடு வாழ்வோம்.

**ஐந்தாம் வாசகம்: எசாயா 55:1-11**

**முன்னுரை:** வார்த்தையால் உலகத்தையே உருவாக்கியவர் இறைவன். இறைவார்த்தை இறந்தவர்களுக்கு உயிர் கொடுத்தது. சிறந்த மனிதர்களை உருவாக்கியது. நோயாளர்களைக் குணப்படுத்தியது. மனிதநேயம் கொண்ட மனிதர்களை உருவாக்கியது. இந்த வார்த்தைக்கு முழு வடிவம் கொடுக்கவேண்டுமென்றால் அது வாழ்வாக்கப்பட வேண்டும். சிதைக்கப்பட்ட நம் உள்ளங்களில் விதைக்கப்படும்போது நம்பிக்கை பெறுகிறோம், வல்லமை பெறுகிறோம் என்ற சிந்தனைகளோடு வாசகத்தைக் கேட்போம்.

**ஆறாம் வாசகம்: பாருக்கு 3:9-15,32-4:4**

**முன்னுரை:** இறையச்சமே ஞானத்தின் துவக்கம். ஞானம் நம்மை அரவணைக்கிறபோது ஆபத்துக்கள் நம்மை அணுகாது. உலக ஞானம் அழிவுக்கு இட்டுச்செல்லும். ஆண்டவரின் ஞானமோ ஆசீர்வாதங்கள் அனைத்தையும் கொண்டுவர வல்லது, நல்லது. ஞானமாகவே இருக்கும் இறைவன் ஞாலத்தைக் காத்து, படைப்பைப்பராமரித்து வருகிறார். நாமும் இறைஞானத்தைப் பெற்று இறைபயத்தோடு பயனுள்ள மனிதர்களாக வாழ வரம்வேண்டி வாசகத்தைக் கேட்டு சிந்திப்போம்.

**ஏழாம் வாசகம்: எசேக்கியேல் 36:16-28**

இறுகிப்போன மனிதர்களாக நாம் வாழக்கூடாது. உறுதிகொண்ட மாமனிதர்களாக வாழவேண்டும். இறுதிவரையில் இதயத்தில் ஈரமிருந்தால், இரக்கம் இருந்தால் நாமும் இறைவனைப்போல் ஆகமுடியும். அது நம்மை நிறை வாழ்வுக்கும், நிறைவான மகிழ்ச்சிக்கும் இட்டுச்செல்லும். நாம் மறைந்தாலும் இரக்கம் என்ற பண்பை இந்த உலகிற்கு விட்டுச்செல்ல முடியும் என்று கூறும் வாசகத்திற்குச் செவிகளைத் திறந்து வைப்போம்.

### சிறப்பு அழைப்பு

உயிர்ப்பின் நம்பிக்கையில் வாழும் அன்புநிறை இறைமக்களே! இப்போது வெறுமையாய் கிடந்த பீடம் அலங்கரிக்கப்பட்டு ஒளிகள் ஏற்றப்படுகின்றன. நாமும் இறைவனுக்கு முன்னால் அலங்கரிக்கப்பட்ட நடமாடும் ஆலயங்கள் என்ற உள்உணர்வோடு ''உன்னதங்களிலே'' என்ற வானவர் பாடலை இணைந்து பாடுவோம்.

''உன்னதங்களிலே'' என்ற பாடலைப் பாடும்போது மணிகள் ஒலிக்கும். மனங்களில் ஆனந்த ஒலிகள் கேட்கும். இதயங்களின் அமைதி பிறக்கும். நமது உள்ளங்கள் சிறகடித்து பறக்கும். வாழ்வு சிறக்கும். அன்புக்கு ஓர் ஆனந்தப் பாடல் பாடி இறைவனை இணைந்து வாழ்த்துவோம்.

**திருமுகம்: உரோ 6:3-11**

**முன்னுரை:**

துன்பமே வாழ்வாக இருக்க முடியாது. வாழ்வே துன்பமாக மாறவும் முடியாது. இன்பமும், துன்பமும் வாழ்வின் இருபெரும் துருவங்கள். ஆனால் துன்பம் நம்மை வாட்டுகிறபோது துணிச்சலோடு இருந்தால் அது இன்பத்தை இரு மடங்காகத் தந்துவிடுகிறது. இயேசுவின் இறப்பு வாழ்வின் மறுபிறப்பு. உன்னதமான உயிர்ப்பு இறப்பு அழிவு அல்ல: இழிவும் அல்ல: இறைவனின் இல்லிடம். உயிர்ப்பின் சாட்சிகளாக மாறி இறைமாட்சியில், இறை ஆட்சியில் பங்குபெற வரம்வேண்டி வாசகத்தைக் கேட்போம்.

## மூன்றாம் பகுதி
## திருமுழுக்குத் திருவழிபாடு

**முன்னுரை**

அன்புக்குரிய இறைமக்களே! இன்றைய திருவழிபாட்டின் மூன்றாம் பகுதியான திருமுழுக்கு நிகழ்விற்கு நாம் கடந்து செல்ல இருக்கிறோம். திருமுழுக்கு கடவுளின் அன்பு மக்களாகப் பிறக்கும் புதுப்பிறப்பை நமக்குத் தருகிறது. திருச்சபையின் உறுப்பினர்களாக நம்மை மாற்றுகின்றது. இறையரசின் உரிமை மக்களாக, அரச குருத்துவ திருக்கூட்டத்தின் உறுப்பினராக நம்மை சேர்க்கிறது. கிறிஸ்தவ வாழ்வின் நுழைவாயிலாக, அடித்தளமாக அமையும் திருமுழுக்குப் பெற்ற அனைவருக்காகவும், திருமுழுக்கு பெற இருப்போருக்காகவும், பெறாதவருக்காகவும் சேர்ந்து செபிப்போம்.

### புனிதர்களின் மன்றாட்டு மாலை

**முன்னுரை**

முழு மனிதனாக வாழ்ந்து புனிதத்தையும் கறைப்பட்டு விடாமல் கண்ணியமாய் காத்துக்கொண்டவர்கள்தான் புனிதர்கள். புனித மனிதர்களாக வாழவேண்டுமென்ற பிடிவாதத்தோடு இறைவனை இறுக்கமாக பிடித்தவர்கள் இவர்கள். கொள்கைப்பிடிப்போடு கொள்ளை ஆசைகளைத் துறந்து, அத்தனையையும் இழந்து அர்ப்பண வாழ்வுக்கும், மறைசாட்சியான சான்று வாழ்வுக்கும் சாட்சியாக வாழக்கூடிய புனிதர்களைப்போல நாமும் புவியில் பயணம் செய்யத் தூய்மையான மனநிலையோடு மன்றாட்டு மாலையை உணர்ந்து, இணைந்து பாடுவோம்.

### திருமுழுக்குத் தண்ணீருக்கு ஆசியளித்தல்:

**முன்னுரை:**

தண்ணீர் தாகத்தைத் தணிப்பதோடு, தரணிக்கு அடிப்படைக் காரணியாகவும் அமைகிறது. தீமையைத் தீக்கிரையாக்கி புதிய வாழ்வுதரும் ஆதாரமாகவும் அமைவது தண்ணீர். தூய்மையின் தூண்டுகோலாகவும், தூய ஆவியின் துணை, அவருடைய அன்பு அசைவாடுவது தண்ணீரில்தான் என்பதை இறைவார்த்தையும் இசைவுபடக் கூறியிருக்கிறது. தூய ஆவியானவரின் ஆற்றல் இத்தண்ணீரை ஆசீர்வதித்து அர்ச்சிக்க வேண்டுமென்று உருக்கமாக மன்றாடுவோம்.

### திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்தல்:

**முன்னுரை:**

அன்புமிக்கவர்களே! ஒன்றைப் புதுப்பித்து கொள்ளுகிறபோதுதான் புதிய ஆற்றல் பிறக்கிறது. எழுச்சியான எண்ணங்களும், ஆழமான அர்த்தங்களும், மகிழ்ச்சியான மாற்றங்களும் பிறக்கின்றன. அதுவும் வாக்குறுதிகளைப் புதுப்பிக்கும்போது உறுதிப்பாடும், நிலைப்பாடும் நிலைநிறுத்தப்பட்டு, நிரந்தரமாக்கப்படுகிறது. நாம் இயேசுவின் உரிமைக் குடிமக்கள், அவரது அன்புப் பிள்ளைகள் என்ற எண்ணங்களோடு நம் திருமுழுக்கைப் புதுப்பித்து, புதுவாழ்வைப் புகலிடமாக்குவோம்.

## நான்காம் பகுதி: நற்கருணை வழிபாடு

**முன்னுரை**

கல்வாரிப்பலிக் கொண்டாட்டத்தின் உச்சமாகவும் துச்சமாகவும் விளங்கும் நற்கருணைக் கொண்டாட்டத்திற்கு நாம் கடந்து செல்கிறோம். ஒவ்வொரு கல்வாரிப்பலிக் கொண்டாட்டத்திலும் நமது வாழ்வும் கொண்டாடப்பட வேண்டும். நாமும் நடமாடும் நற்கருணையாக நாளும் வாழவேண்டும். நம்மை உடைத்துப் பிறருக்கு உணவாகுவோம் என்ற எழுச்சிமிகு சிந்தனையோடு பங்கேற்று பலன்கொடுப்போம்.

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### பேராசை வேண்டாம்

வாழ்வில் விரும்புவது
வரவில்லையா?
வருந்த வேண்டாம்
வருவதை விரும்புவோம்!
வாழ்க்கை வசந்தமாகும்.

சோதனைகளும்
சாதனைகளாகும்
தடைக்கற்களும்
படிக்கற்களாகும்
மலைச்சுமைகளும்
மாலைச்சுமைகளாகும்.

வாழ்க்கை வசந்தமாகும்
அந்த வசந்தம் சுகந்தமாக
நறுமணம் பரப்பும்.
ஏனெனில்
வாழ்க்கை வாழ்வதற்கே
வருத்தப்பட அல்ல!

*- பென்ஜமின் சோமநாதர்
தெஹிவளை*

### தவக்காலச் சிந்தனை

LENT
என்றால் என்ன?
TALENT
என்றால் என்ன?

LENT காலத்தில்
ஆண்டவரையே நம்புவோம்,
ஆண்டவரையே
சார்ந்திருப்போம்!
ஆண்டவரிலேயே என்றும்
அகமகிழ்ந்திருப்போம்!

அப்போது
ஆண்டவரே அனைத்திலும்
அனைத்துமாக இருப்பார்.
அதுவே எமது TALENT
ஆகும்.

*- பென்ஜமின் சோமநாதர்
தெஹிவளை*

### நீ மீட்புப் பெறுவாய் ....!

இறைவனின் கொடையாக
மீண்டும் ஒரு தவக்காலம்!
உடைகளை அல்ல
உள்ளங்களைக் கிழித்து
இரக்கமுள்ள தந்தையிடம்
திரும்பிவரும் காலம்!


நிலைவாழ்வின்
தடங்களிலிருந்து
திசைமாறிய பாதங்கள்
தன்னிடம் திரும்பி
வருமா என்று
ஊதாரி மைந்தனின்
தந்தையைப்போல்
வழிமேல் விழிவைத்து
இறைவன் காத்திருக்கும்
அருளின் காலம்!

பாவச்சேற்றில் இருந்து
விடுதலை பெறவும்
சாத்தானின் பிடியில் இருந்து
விலகிச்செல்லவும்
ஊனியல்பின் இச்சைகளை
களைந்து எறியவும்
உத்தமராய் திருந்தி வாழவும்
அழைத்து நிற்கும் காலம்.

இயேசுவைச் சந்தித்து
மனம் மாறிய
சக்கேயுவைப்போல்
விழிநீர் சொரிந்து
பாதம் கழுவி
மன்னிப்புப்பெற்ற
மகதலா மரியாபோல்
இயேசுவோடு இறந்து
விண்ணரசை சுவீகரித்த
நல்ல கள்வனைப்போல்
என்னையும், உன்னையும்
அழைக்கும் காலம்!

திருப்பலிகள்,
சிலுவைப்பாதைகள்
ஒறுத்தல்கள், தானதர்மங்கள்
இவற்றைவிட
உன்னுடைய
மனமாற்றத்திற்காக
இறைவன் காத்திருக்கும்
காலம்!
எனவே உன்னை ஆய்வு
செய்து
ஊதாரித்தனம் களைந்து
உண்மையாய் மனம் மாறி
உண்மை இறைவனிடம்
திரும்பி வா
நீ மீட்புப் பெறுவாய்!

*இ. அ. அமலரட்ணம்,
200, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.*




### உள்ளத்தில் ஊனமாய்.....!

உயர்வான இலட்சியத்தை உள்ளத்தில் கொண்டு
உணர்வுகள் எல்லாம் உண்மையைக் கண்டு
உவப்புடன் சென்று உயர்கல்வி தொடர
உறுதியுடன் சென்ற உண்மையான உள்ளத்தின்
உணர்வுகளை ஒடுக்கி... உள்ளத்தை மடக்கி...
உருப்படி இல்லா அருவருப்பான செயலால்
உள்ளத்தில் எழுந்த உருவான எண்ணத்தால்
உயர்ந்த மலையேறி உன்னிப்பாய் பாய்ந்தான்... அவள்
உயர்ந்த இலட்சியத்தை உருவாக்கி வைத்ததால்
உயர்ந்த மலைக்கு உணர்வோடு சென்றாளோ....!
உயர்வான இலட்சியத்தை உள்ளத்தில் சுமந்தவள்
வெள்ளமாய் பாய்ந்து வெகுண்டெள வேண்டாமா...!
அவள் உள்ளமோ என்றும் ஊனமாய்....

*அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.*

## கொஞ்சம் சிரிங்க



**கணவன்:** என் மகனை டாக்ரராக்கியது தப்பாய்ப்போய்விட்டது?
**மனைவி:** ஏன் என்னாச்சு?
**கணவன்:** அறுவைச் சிகிச்சை பண்ண யாரும் வராததால் போரடிக்குது என்று எனக்கு ஏதாவது அறுவைச் சிகிச்சை பண்ணட்டுமா எனக்கேட்டு உயிரை வாங்கிறான்.

..................................

**டாக்டர்:** "நீங்கள் அதிகமாக சாராயம் குடிக்கிறீங்கள்...!"
**நோயாளி:** எப்படி டாக்டர் கண்டுபிடித்தீர்கள்?
**டாக்டர்:** உங்கள் இதயம் படக் படக் என அடிப்பதற்குப் பதிலாக மொடக் மொடக் என்று அடிக்கிறது!

..................................

**மதி:** நீ தினமும் இரவு எத்தனை மணிவரை படிப்பாய்?
**சுமதி:** தூக்கம் வரும்வரைக்கும்!
**மதி:** தூக்கம் எப்ப வரும்?
**சுமதி:** புத்தகத்தை கையில் எடுத்ததும்.

..................................

**தந்தை:** கம்பசுக்குப் போகும்போது பசங்களின் தொல்லையால் மகளிட்ட மிளகாய்ப்பொடி கொண்டுபோகச் சொன்னது தப்பாப் போச்சு...!
**நண்பர்:** ஏன்?
**தந்தை:** இப்ப பசங்க எல்லாம் இட்லியோட அவ பின்னால அலையிறாங்களாம்.

..................................

**சிஷியன்:** ஞானத்தை அடைய என்ன செய்ய வேண்டும்?
**குரு:** ஞானத்தின் கணவனை போட்டுத்தள்ள வேண்டியதுதான்.

**நிசாந்:** என்ன மாணிக்கம் எங்கட கறிச்சட்டி மாதிரி தலையில் வீங்கியிருக்கு.
**மாணிக்கம்:** இனிமேல் அடிக்க மாட்டேன்னு கையில் இருந்த உலக்கையால் அடித்து சத்தியம் பண்ணினா மனைவி.

..................................

**ஆசிரியர்:** மாணவர்களே! ஏன் கலியாணத்திற்கு ஆடு, மாடுகளை அழைப்பது இல்லை தெரியுமா?
**ஒரு மாணவன்:** கல்யாணம் ஆயிரங்காலத்துப் பயிர் அதான் ரீச்சர்....
**ஆசிரியர்:** அதற்கு இப்ப என்ன?
**ஒரு மாணவன்:** அவை ஆயரங்காலத்துப் பயிரை மேய்ந்துவிடுமே ரீச்சர்...

..................................

**காந்தர்:** என்ன தலையை விரிச்சுப்போட்டுக்கிட்டு ஆபீஸ் போறா?
**மனைவி:** லேற்றாப் போனா எங்க மனேஜர் பின்னிவிடுவாரு.

..................................

**மாணவன்:** சேர், என்னால வீட்ல இருந்து ஒழுங்கா படிக்க முடியவில்லை. அப்பாவும், அம்மாவும் ஒரே சண்டை.
**ஆசிரியர்:** யார்டா உன் அப்பன்?
**மாணவன்:** அதைக் கேட்டுத்தான் சேர் தினமும் சண்ட நடக்குது!

## மன்னா விளம்பரப் பலகை

வெற்றி பெறுவது எப்படி என்று யோசிப்பதைவிட, தோல்வி அடைந்தது எப்படி என்று யோசித்துப்பார். நீ கண்டிப்பாக வெற்றி பெறுவாய்.

பொய் சொல்லி தப்பிக்க நினைக்காதே. உண்மையைச் சொல்லி மாட்டிக்கொள்.... ஏனென்றால் பொய் வாழவிடாது உண்மை சாகவிடாது!

.......................

"வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஒரு வழி, அடுத்தவர்களின் வெற்றியை உங்களுடைய வெற்றியைப்போலக் கொண்டாட கற்றுக்கொள்ளுங்கள்"

.......................

உங்களை பலவீனர்கள் என்று சொல்லாதீர்கள். நீங்கள் ஆன்மாவால் செய்ய முடியாத காரியம் எதுவும் இல்லை.

"கண்பார்வை அற்றவன் குருடன் அல்ல.
தன் குற்றங்களை உணராதவனே குருடன்"

எல்லோரிடமும் அன்பைக் கொடுத்து ஏமாந்துவிடாதே! யாரிடமும் அன்பைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றிவிடாதே!!

.......................

சிக்கல்களை எதிர்கொள்ளும்போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.

.......................

இந்த உலகில் நாம் நம் கண்முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நாம் நேசிக்க இயலவில்லையென்றால் கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பைச் செலுத்த முடியும்.

கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே. அது உன்னைக் கொன்றுவிடும், கண்ணை திறந்து பார். அதை நீ வென்றுவிடலாம்.

## மருத்துவக் குணங்கள் நிறைந்த கற்றாழை







- சோற்றுக் கற்றாழை ஜெல்லை முகத்தில் தொடர்ந்து பூசுவதன் மூலம் இளம் வயதில் உண்டாகும் தோல் சுருக்கம் மறைந்து அழகு கூடும். அதிக நேரம் வெயிலில் அலைபவர்கள் முகத்தில் பூசிவந்தால் கருமை, கரும் புள்ளி ஏற்படாமல் காக்கும்.
- கற்றாழையின் சோற்றைத் தலையில் தேய்த்து அரைமணி நேரம் ஊறவைத்துக் குளிக்க தலையில் ஏற்படும் பொடுகு சிரங்கு குணமாகும்.
- கற்றாழையைத் தினமும் எடுத்துக்கொண்டால் தேவையற்ற கொழுப்பு கரைந்து உடல் மெலிவு ஆகும்.
- சோற்றுக் கற்றாழை மடலை இரண்டாகப் பிளந்து உள்ளே சிறிதளவு வெந்தயத்தை வைத்து மூடிவிடவும். இரண்டு நாட்கள் கழித்து ஊறிய அந்த வெந்தயத்தை எடுத்து தேங்காய் எண்ணெயில் போட்டு அதை தேய்த்துக் குளிக்க நரை முடியும் கறுப்பாகும்.
- மூட்டுவலி, கழுத்து வலியின்போது, வலி ஏற்பட்ட இடத்தில் கற்றாழையை நீளவாக்கில் வெட்டி, சூடு செய்து பற்றுப் போடுவதன் மூலம் நிவாரணம் கிடைக்கும்.
- வாடிச் சருகான கற்றாழை மடலை தீயில் கருக்கி, தேங்காய் எண்ணெயோடு கலந்து தீப்புண்களின்மீது பூசிவர விரைவில் புண் ஆறும். கற்றாழை மடலில் சிறுதுண்டு எடுத்து, இரண்டாகப் பிளந்து சோற்றுப் பகுதியை தீயில் வாட்டி உடல் பொறுக்கும் சூட்டில் அடிபட்ட இடத்தில் வைத்து ஒத்தடம் கொடுக்க வலி வீக்கம் மட்டுமல்ல இரத்தக் கட்டும் மாறும்.
- இச்செடியின் மடலில் உள்ள சோற்றை எடுத்து தண்ணீரில் நன்கு அலசி அதைச் சாப்பிட்டுவர குடல் புண், மூல நோய் மாறும். மலச் சிக்கல் தீரும்.
- தழும்புகள், வெயில் பாதிப்புகள், உலர்ந்த சருமம் என சரும நோய் எதுவாக இருந்தாலும் சிறிது கற்றாழைச் சாறை தினமும் தடவிவர நல்ல குணம் கிடைக்கும்.
- கற்றாழை சோறை தேங்காய் எண்ணெயுடன் காய்ச்சி தலைக்குத் தேய்த்துவர தலைமுடி நன்கு செழித்து வளரும். எண்ணெய் குளியல் செய்ய கண் குளிர்ச்சி மற்றும் சுக நித்திரை உண்டாகும்.
- கற்றாழை இலையிலிருந்து எடுக்கப்படும் 'ஜெல்' எனப்படும் 'கூழ்' சருமத்தின் ஈரத்தன்மையை (Moisture) பாதுகாக்கப் பயன்படுகிறது. இதன் தேவைக்கு இயற்கை சூழ்நிலையிலிருந்து கற்றாழைச் செடிகள் சேகரிக்கப்பட்டு பக்குவப்படுத்திய பிறகு மருந்துப்பொருட்களில் பயன்படுத்தப்படுகின்றது.
- எளிதாகக் கிடைக்கக்கூடிய இந்த மூலிகை ஏராளமான மருத்துவக்குணங்களைக் கொண்டது. தீய சக்திகள், கண் திருஷ்டி இவைகளை அண்டவிடாது என்ற நம்பிக்கையின் காரணமாக வீட்டின் முன்புறம் வளர்க்கப்படுகின்றன.

## சமையல் குறிப்பு

### *கோக்கனற் பைவ்*





#### தேவையானவை:

வறுத்த தேங்காய்ப்பூ - 10 மேசைக் கரண்டி
பசுப்பால் - 1 டம்ளர்
பால்மா லக்ஸ்பிறே - 3 மே.க.
வறுத்த கச்சான் முத்து - 4 மே.க.
ஒடித்த கறுவா - 1 மே.க.
கலறிங் - 1 தே.க.
மாஜரின் - 1 தே.க.
சீனி - தேவையான அளவு

#### செய்முறை :

தாச்சியில் மாஜரினை உருகவிட்டுக் கச்சான் முத்தைவிட்டு பொன் நிறமாகப் பொரித்து அப்படியே மாஜரினுடன் சேர்த்து வேறொரு பாத்திரத்தில் எடுத்து வைத்துக் கொள்க.

பசுப்பாலில் பால்மாவைக் கட்டிபடாமல் நன்கு கரைத்து சீனியும் சேர்த்து அடுப்பில் வைத்து கலவை தடித்து வரும்வரை இடைவிடாது துளாவ வேண்டும். கலவை நன்கு தடிக்கத் தொடங்கியதும் மாஜரினைப் போட்டுச் சேர்த்துக்கொண்டபின் கறுவா, பொரித்த கச்சான், பொன்நிறமாக வறுத்த தேங்காய்ப்பூ என்பவற்றையும் சேர்த்து இடைவிடாது கிளறிக் கலவை சட்டியில் ஒட்டாது திரளும் பதத்தை அடைந்ததும் கலறிங் சேர்த்து இறக்கிக் கொள்க.

இறக்கி வைத்த கலவையை ஒரு மாஜரின் பூசிய தட்டில் கொட்டி மாஜரின் பூசிய வாழை இலைத் துண்டால் நன்கு அழுத்தி ஒரு இஞ்சி தடிப்பாகப் பரவி அளவான துண்டுகளாக வெட்டி 3 மணி நேரத்தின்பின் ஒவ்வொரு துண்டுகளாக பிரித்தெடுத்து பக்கம் மாற்றி வெறோரு தட்டில் அடுக்கி வைத்து சிறிது நேரம் கழித்துப் பரிமாறலாம்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.188

## லூக்கா நற்செய்தி (அதிகாரம் 1 முதல் 24 முடிய)

உங்கள் விடைகளை ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 | | | 08 |
| | | | | | 09 | ❖ | 10 | | |
| | 11 | | ❖ | 12 | | 13 | 14 | | |
| 15 | 16 | | 17 | | | 18 | | 19 | ❖ |
| | ❖ | 20 | | | | 21 | 22 | | |
| | 23 | | | | ❖ | 24 | | | |
| 25 | | | 26 | 27 | 28 | | | | 29 |
| | ❖ | 30 | ❖ | 31 | 32 | 33 | | | 34 |
| | 35 | | | | | ❖ | | | |
| | | | | 36 | | ❖ | 37 | 38 | |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### வலமிருந்து இடம்

2. அவர் மேல்மாடியில் தேவையான ……….. கள் அமைந்த ஒரு பெரிய அறையைக் காட்டுவார்.
7. இயேசு அங்கிருந்து புறப்பட்டுத் தம் வழக்கப்படி ……… மலைக்குச் சென்றார்.
10. வேறொருவர் வந்து, ஐயா, இதோ உமது ………….........
14. மேலும் அவர்களிடம், "ஓய்வு நாளும் ….. மகனுக்குக் கட்டுப்பட்டதே" என்றார்.
16. அது ஒரு ……. விதைக்கு ஒப்பாகும்.
17. அதற்கு அவர், "நூறு …….. எண்ணெய்" என்றார்.
18. அவர் தம் …… மகனைப் பெற்றெடுத்தார்.
20. அவர் …… காட்டுகிற வேளையில் — வேண்டிக் கொண்டிருந்தனர்.
23. மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற …….. களால் காட்டுங்கள்.
24. ……. மிகு கற்களாலும் நேர்ச்சைப் பொருள்களாலும் — பேசிக்கொண்டிருந்தனர்.
25. அவருக்கு……… என்னும் பெயரிடுவீர்.
28. திருச்சட்டத்திலுள்ள ஓர் எழுத்தின் ……….. அழிவதைவிட விண்ணும் — எளிதாகும்.
35. குழந்தையும் வளர்ந்து ………. பெற்று ஞானத்தால் நிறைந்து — இருந்தது.
37. தாய்க்கு அவர் ஒரே …………

### இடமிருந்து வலம்

6. "ஐயா, உமக்குத் — அடியெடுத்து வைக்க நான் ……….. யற்றவன்.
11. மேலும் அவர், "நான் அரசனாக — கொண்டுவந்து என்முன் …….. கொலை செய்யுங்கள்" என்று சொன்னார்.
13. உள்ளத்தின் நிறைவையே ……… பேசும்.
21. அதற்கு அவர் தந்தையிடம் …....... இத்தனை ஆண்டுகளாக — வருகிறேன்.
26. கடைசிக் ……….. வரை நீங்கள் — உங்களுக்குச் சொல்கிறேன்.
29. உங்கள் பகைவரிடம் ……… கூறுங்கள்.
35. அப்போது விண்ணகத்திலிருந்து — அவரை ………. ப் படுத்தினார்.
36. அப்பொழுது அதுவே உமக்குக் கைம்மாறு …………..

### மேலிருந்து கீழ்

1. இரண்டு காசுக்கு ஐந்து ………க் குருவிகள் விற்பதில்லையா?
3. இயேசு அவரிடம், "நீர் சொன்னது ………." என்றார்.
4. திருக்கோவிலின் ……… நடுவில் கிழிந்தது.
5. ……….. ஒருவர் தற்செயலாய் அவ்வழியே வந்தார்.
8. செக்கரியா என்ற அதன் தந்தையின் பெயரையே அதற்குச் ……… இருந்தார்கள்.
9. இயேசு கையை நீட்டி — உமது …… நீங்குக!" என்றார்.
12. உங்கள் தலைமுடி எல்லாம் ……..…… எண்ணப்பட்டிருக்கின்றன.
19. ஆனால் அதன் தாய் — அதற்கு ……. எனப் பெயரிட வேண்டும் என்றார்.
20. வானதூதர் அவரிடம், "……… ஆவி உம்மீது வரும்."
21. அவர் அந்த ஆளை நோக்கி — நடுவராகவே …….. பிரிப்பவராகவோ — என்று கேட்டார்.
22. இதைக்கண்ட — ஆண்டவரே நான் — நான் ……… நீர் என்னைவிட்டு போய்விடும் என்றார்.
25. இயேசு மனிதரால் இயலாதவற்றைக் கடவுளால் செய்ய ……. என்றார்.
31. உமது உள்ளத்தையும் ஒரு ……… ஊடுருவிப் பாயும் என்றார்.
32. பேதுரு மறுமொழியாக நீர் கடவுளின் ……. என்று உரைத்தார்.
34. திரும்பக் கிடைக்கும் என எதிர்பார்க்காமல் ….…… கொடுங்கள்.

### கீழிருந்து மேல்

11 …………… காலம் வந்ததும் ஒரு பணியாளரை அவர் அனுப்பினார்.
15. அவர்களிடம், "என் இல்லம் இறைவேண்டலின் ……… என்று மறைநூலில் எழுதியுள்ளதே."
22. அக்காலத்தில் செக்கரியாவின் மகன் யோவான் ……..... நிலத்தில் வாழ்ந்து வந்தார்.
25. "நம்பிக்கையோடு மட்டும் ……….; அவள் பிழைப்பாள்" என்றார்.
27. லோத்து சோதோமை விட்டுப்போன — பெய்த ……… கந்தகமும் எல்லாரையும் அழித்தன.
29. அவருக்கு ……….. நடப்போருக்குத் —இரக்கம் காட்டி வருகிறார்.
30. ………. எலியேசரின் மகன்.
33. அக்காலத்தில் இஸ்ரயேலரிடையே ……… பெண்கள் பலர் இருந்தனர்.
36. நீர் ………. பார்த்துச் செயல்படாதவர்.
37. அவர்மீது தலைவர் ……… வைத்திருந்தார்.
38. இயேசு அவரைப்பார்த்து, இறந்தோரைப் பற்றிக் ……. வேண்டாம்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 186 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
A. சுலக்ஷனா,
எமில்நகர், மன்னார்.

**இரண்டாம் பரிசு:**
P. நிறோஜா,
சின்னப்பண்டிவிரிச்சான்,
மடு.

**மூன்றாம் பரிசு:**
K. அஜந்தன்,
கொக்குப்படையான்,
சிலாபத்துறை

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 74 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 65 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 186ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. ப. மேரி மொட்வீனா பீரிஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
2. அ. இராசநாயகம் சில்வா, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
3. A. அபிஷேக், கொக்குப்படையான், சிலாபத்துறை.
4. புஸ்பா சேவியர், உவர் மலை, திருகோணமலை.
5. S. வரதன் குரூஸ், லூக்கா வீதி, தாழ்வுபாடு.
6. நோ. சுவின்சிகா கூஞ்ஞ, பெரியபண்டிவிரிச்சான், மடு.
7. அ. பிரியதர்சினி சில்வா, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
8. ச. செலஸ்ரீனா, நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம்.
9. V. டிவைனா குரூஸ், லூக்கா வீதி, தாழ்வுபாடு.
10. அ. அ. ஆக்காஸ், கொக்குப்படையான், சிலாபத்துறை.
11. அமறின் அபிநிஷா, கொக்குப்படையான், சிலாபத்துறை.
12. றபேக்கா பற்றிக், 228/6, சின்னக்கடை, மன்னார்.
13. A. கில்டா, கட்டையடம்பன், மடு வீதி.
14. இமல்டா நிறோஜினி சில்வா, பெரியபண்டிவிரிச்சான், மடு
15. J. யேசுராணி லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
16. ஜோண் சந்தனராஜ் லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
17. என். சி. ஜெகஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
18. ரீட்டா மேரி, கன்னியர் மடம், பறப்பாங்கண்டல்.
19. சத்தியறாஜ் நிதியா, நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம்.
20. A. அன்சி டிக்ஷானி, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
21. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
22. ரெபேக்கா பற்றிக், 146, சின்னக்கடை, மன்னார்.
23. அ. றொஷான், எமில்நகர். மன்னார்.
24. டெபோறா மோகன்ராஜ், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
25. யே. ஜெலின்ரன் றோய், தோட்டவெளி, மன்னார்.
26. செ. அனுசியா கூஞ்ஞ, அரிப்பு மேற்கு, சிலாவத்துறை.
27. S. பறுநாந்து, சின்னக்கடை, மன்னார்.
28. ஜெ. டிலைக்சனா, புதுக்கமம், உயிலங்குளம்.
29. S. ஜெகன் சாலினி றோச், பள்ளிமுனை, மன்னார்.
30. செ. ஜென்சன் ஜீவறாஜா, புதுக்கமம், உயிலங்குளம்.
31. S. M. குலோஜினி மொறாய்ஸ், 1ம் வட்., வங்காலை
32. ஈ. நிஷாந்தினி கூஞ்ஞ, 8ம் வட்டாரம், பேசாலை.
33. யே. கமிலஸ்ரீனா, உயிர்த்தராசன்குளம், முருங்கன்.
34. A.J. ஆன் டனியலா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
35. சி. நோயல் கிறிஸ்ரி றோச், பள்ளிமுனை, மன்னார்.
36. தேவிகா பத்மராஜா, பெற்றா, மன்னார்.
37. J. ஆரணா லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
38. A. பீற்றர் பியன் மனோ, பள்ளிமுனை, மன்னார்.
39. மேரி பற்றிமா, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.
40. அல்பிறட் ஞானரெத்தினம், பள்ளிமுனை, மன்னார்.
41. A. சரோன் லூசியன், பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
42. F. ஜெப்றி ஆன் பிகிறாடோ, பள்ளிமுனை, மன்னார்.
43. R. மீரா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
44. R. அபிஷேக், பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
45. A.J. ஆன் அன்சிலா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
46. M. லில்லி பெற்றா, மன்னார்.
47. அ. கியூபட், நெடுந்தீவு, யாழ்ப்பாணம்.
48. ம. அக்னேஸ், இறம்பைக்குளம், வவுனியா.
49. அ. மிராண்டா, யாழ்ப்பாணம்.
50. S.A. டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.

## மாந்தை திருத்தலப் பெருவிழா .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

தென்பகுதியிலிருந்து வந்திருந்த சிங்கள மொழி பேசுகின்ற கத்தோலிக்க சகோதர, சகோதரிகளுக்காக சிங்கள மொழியில் மறையுரையும், இறைவார்த்தையும், நம்பிக்கையாளர் மன்றாட்டும் இடம்பெற்றன. திருப்பலி முடிவில் லூர்து அன்னையின் திருச்சுருப ஆசீரும் ஆயர் அவர்களால் வழங்கப்பட்டது. மாந்தைப்பங்கு இறைமக்களும், பங்குத்தந்தை அருட்பணி. ச. சீமான் மரியதாசன் அடிகளாரும் இத்திருவிழா நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தனர்.
இத்திருவிழாவையொட்டி ஆயத்த நாள் வழிபாடுகளை மறைமாவட்டத்தின் சில பங்குகள் மாந்தைக்கு சென்று சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புதுக்கமம் ஆலயத் திறப்பு விழா .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆலயத்தை வந்தடைந்ததும் ஏனைய குருக்களோடு இணைந்து ஆயர் அவர்கள் திருப்பலிக்கான திருவழிபாட்டு திருவுடை அணிந்து தூய நீரை அர்ச்சித்து அதன்பின் புதிய ஆலயத்தையும் அர்ச்சித்துப் புனிதப்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து திருப்பலி ஆரம்பமாகியது. அவ்வேளையில் திருச்சபையின் திருவழிபாட்டு ஒழுங்கு மரபில் குறிக்கப்பட்டபடி உரிய நேரங்களில், பலிப் பீடம், தூய நற்கருணைப் பேழை அகியவற்றையும் ஆயர் அர்ச்சித்துப் புனிதப்படுத்தினார். திருப்பலி முடிவில் கலைநிகழ்வும், நன்றி கூறல் நிகழ்வும் இடம்பெற்றன. அனைத்து நிகழ்வுகளையும் வஞ்சியன்குளம் பங்குத்தந்தை அருட்பணி. லோ. ஞானாதிக்கம் அடிகளார் புதுக்கமம் இறைமக்களோடு இணைந்து சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

## இயேசுக் கிறிஸ்து மனித .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

தட்டச்சு செய்து கையெழுத்திட்ட இந்தக் கடிதம் 1926ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் திகதி எழுதப்பட்டது ஆகும். இந்தக்கடிதத்தில் மகாத்மா காந்தி இயேசுக் கிறிஸ்துவைப்பற்றி எழுதியுள்ளார். குறிப்பாக இயேசுக்கிறிஸ்து மனிதகுலத்தில் மிகப்பெரிய போதகர்களின் ஒருவராகத் திகழ்ந்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.
அமெரிக்காவில் பென்சில்வேனியா மாகாணத்திலுள்ள "ராப் கலெக்ஷன்" என்று அழைக்கப்படுகின்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கையெழுத்து மற்றும் ஆவணச் சேகரிப்பு நிறுவனத்திடம் இந்தக்கடிதம் தற்போது உள்ளது. இந்தக் கடிதம் ஏலம் இடப்படுகின்றது. இது 50ஆயிரம் டொலருக்கு (சுமார் ரூபா 32 லட்சம்) விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பாக ராப் கலெக்ஷன் நிறுவனத்தின் நாதன் ராப் கூறும்போது, "உலகின் மிகப்பெரிய போதகர்களின் ஒருவர் இயேசுக்கிறிஸ்து என்ற காந்தியின் நம்பிக்கை சக மனிதர்களுடன் ஒத்துழைப்பதற்கான அவரது முயற்சிகளைக் காட்டுகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.


## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.
**கட்டணம்:** கறுப்பு வெள்ளை 4,500/=, கலர்7,500/=



## சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் - கொள்ளுங்கள். **- மன்னா நிர்வாகம்.**



## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.
பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். - **மன்னா நிர்வாகம்.**

# நீங்காத நினைவுகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 24 04 1929



உதிர்வு 24 02 2018

**திருமதி. ஞானப்பிரகாசம் திரேசா (ஓய்வுநிலை ஆசிரியை)**
**(தாழ்வுபாடு வீதி, மன்னார்)**

“உயிர்ப்பும், உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்” (யோவான் 11:25)

அன்பொழுக நாளும் அனைவரையும் ஆதரித்து
ஆறுதல் மொழிகளெல்லாம் அள்ளி வழங்கி
இன்பம் பயக்கும் இனியவாய்ச் சொல்லாலே
இகத்திலிருப்பவரைக் கவர்ந்தென்றும் வாழவைத்து
துன்பம் எதுவந்தபோதும் தயங்காது
துணையாக இயேசு பொன்மொழிகள் மனத்திருத்தி
வன்மம், பகை, எதுவும் வந்தும்மைத் தாக்காது
வளமாக வாழ்ந்தவரே! இறைவனடி இணைந்திடுக!

எமது அம்மாவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 27.03.2018 செவ்வாய்க்கிழமை காலை 5.45 மணிக்கு புனித செபஸ்தியார் பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**பிரிவால் நினைந்துருகும்;** குடும்பத்தினர்.

## 09ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 05 1968



உதிர்வு 24 03 2009

**திரு. செ. கொன்சாலஸ்**
**(ஆண்டாங்குளம், அடம்பன்)**

“ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது” (தி.பா. 116:15)

ஓடி மறைந்ததப்பா 10 ஆண்டுகள்
ஓயவில்லை உங்கள் நினைவலைகள்!
யுத்தத்தின் வடுக்கள் காயுமோ?
உம் இதயத்தைப் பிளந்த குண்டின் நினைவு ஓயுமோ?
காலன் காத்திருந்து கண்ணிவைத்தானே?
இப்பாரினில் எம்மைத் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்?
நீங்கள் சருகாகிப் போகவில்லை அப்பா
மீண்டும் உயிராகி நிற்கின்றீர்கள்!
உங்கள் ஆன்மா அமைதிபெறப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்;**
அன்பு மனைவி, மகள், அப்பா, அம்மா சகோதரர்கள், உறவினர்கள்.

## 06ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 16 1958



உதிர்வு 08 03 2012

**திருமதி. கொன்சால் சந்தானான் (மலர்)**
**(பொன்தீவுகண்டல், முருங்கன்)**



கானாவூர்த் திருமண வீட்டிலே
குறை நீங்கப் பரிந்து பேசிய
தேவதாயாரைப் போன்று
எங்களின் குறைகளை அறிந்து
எமக்காகப் பரிந்து பேசி நிற்கும்
அன்பான அம்மா!
ஆண்டுகள் ஆறாகினும்
ஆறவில்லையம்மா எம் துயர்!
உங்கள் ஆன்மா நித்திய பேரின்ப வீட்டில்
இளைப்பாறுதல் பெறவேண்டுமென்று
எந்நாளும் நாம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்;**
அன்புக் கணவர், பிள்ளைகள்.

## 32ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 04 1942



உதிர்வு 02 04 1986

**திருமதி. சைனம்மா பிரான்சிஸ்**
**(பரிகாரிகண்டல், முருங்கன்)**

கண்ணுக்கு மையழகு கவிதைக்குப் பொய்யழகு
கார்கூர்ந்தல் பெண்ணழகு என்றெல்லாம் வர்ணிக்கக்கூடிய
உங்கள் வதனமும் அழகானதே; விண்ணுக்குச்
செல்லும்வரை உங்கள் சொல்லுக்கு அளவில்லையே!
பண்ணுக்கு இசைவான இயல்புகள் நிறைந்ததோர் பிறவி
நீங்கள் என்னென்ன சொன்னீர்களோ அவையெல்லாம்
நடந்து முடிந்ததம்மா! நண்ணுதல் கண்டுகளித்த நம்மை
நறுக்கென இறைவன் பிரித்துவிட்டாலும், நம்மைப் படைத்த
பரமனின் திருவடியிலிருந்து இளைப்பாறுவீர்களாக!

**பிரிவால் நினைந்துருகும் :**
குடும்பத்தினர்

## 04ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 06 1970



உதிர்பு 03 03 2014

**திரு. பிரான்சிஸ் ராஜன்றிச்சேட்.**
**(பரிகாரிகண்டல், முருங்கன்)**

கருணையும் அன்பும் உள்ளத்தில் நிறைந்திருந்ததால்
கடவுள் கோயில் கொண்டிருந்ததை உம் புன்சிரிப்பில் கண்டோம்.
இருந்து வாழவேண்டிய வயதில் திடீர்மறைவுக்குக் காரணம்
இரக்கமும் நேர்மையும் நிறைந்த வாழ்வேயாகும்.
இதனைப் பெற்றோர் உடன் பிறந்தோர் தாங்கமுடியுமா?
உமது பிரிவைத் தாங்க முடியாது நினைந்து நினைந்து வருந்துகின்றோம். ஒன்றாய்த் திரிசுடராய் ஓங்கு சுயஞ்சீவியராம் இறைவன் சாந்தி அளிப்பதால் உத்தமனே நல்மகனே சுத்தம் நிறைஇயேசு பதம் சோபனமாய் வாழ்ந்திருப்பீர்.

**பிரிவால் நினைந்துருகும் :**
குடும்பத்தினர்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 07 1967



உதிர்வு 17 03 2017

**திரு. சந்தியோகு கியூபேட் பறுனாந்து**
**(கிராம சேவகர், பேசாலை)**

அன்புக்கு இலக்கணமாய் எம்மிடையே வாழ்ந்தீர்!
இல்லற வாழ்வினில் இன்புற்று ஈசனுக்கும்
ஊர் மக்களுக்கும் ஏற்ற மலராய் வாழ்ந்து
உவப்புடனே நற்பணி செய்தீர்.
எடுத்த காரியத்தில் எல்லாம் ஊக்கத்துடன் உழைத்து
ஏற்றமிகு எம் ஊர் உயர அயராது பாடுபட்டீர்
ஓராண்டு கழிந்தாலும் ஓயவில்லை எம் அழுகை!
உயிருள்ளவரை உங்கள் நினைவில் நாம் வாழ்வோம்.
உம் ஆன்மா அமைதியில் இளைப்பாற வேண்டுகிறோம்.

**பிரிவால் நினைந்துருகும் :**
அன்பு மனைவி, பிள்ளைகள், அம்மா, அப்பா, பாசமிகு சகோதரர்கள், சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள்.

## இறைபதம் அடைந்தார்

தளுகம பங்கின் பொல்கஹகமத கிராமத்தில் பிறந்து, கண்டி மறைமாவட்டத்தில் பணியாற்றிய அருட்பணி. நிலங்க டயஸ் அடிகளார் இம்மாதம் முதலாம் திகதி மாரடைப்பால் காலமானார். இளவயதுக்குருவான இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்போம்.

## எழுத்தூர் பங்கில் ......

8ஆம் பக்கத் தொடர்ச்சி

எழுத்தூர், கீரி, பட்டித்தோட்டம், ஜீவபுரம் ஆகிய கிராமங்களிலிருந்தும் தாழ்வுபாட்டுப் பங்கிலிருந்தும், தரவங்கோட்டை, பெரிய கமம், குழந்தையேசு புரம் போன்ற கிராமங்களிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் இவ்வழிபாட்டிற்கு வருகைதந்திருந்தனர்.

இந்தக் குணமளிக்கும் வழிபாட்டினை தென்னிந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த அருட்தந்தை. நிர்மலன் அடிகளாரும், அவர்களது குழு உறுப்பினர்களும் நடாத்தினர்.

அருட்தந்தை நிர்மலன் அடிகளார் தற்போது மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் தேற்றாத்தீவு புனித யூதாதேயு திருத்தலத்தின் பரிபாலகராகவும், பங்குத்தந்தையாகவும் பணிபுரிந்து வருகின்றார். எழுத்தூர் பங்குத்தந்தை அருட்திரு. பி. யேசுராஜா அடிகளாரினால் ஒழுங்கமைக்கப்பட்ட இப்புனித நிகழ்வின் அனுசரணையாளராக மன்னார் வை.எம்.சீ.ஏ அமைப்பு செயற்பட்டது பாராட்டுக்குரியதாகும்.

## போதைப்பொருளுக்கு எதிரான .....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

அத்துடன் குறித்த வியாபாரத்தின் பிரதான சூத்திரதாரிகளான முதலாளிமார்கள் சிக்கிக்கொள்கின்றபோதிலும் அவர்கள் தமது அடியாட்களைக் குறித்து குற்றச்செயலுக்கு பொறுப்புக்கூறச் செய்துவிட்டு தாம் தப்பித்துக்கொள்கின்றனர்.

அதனால் அம்முதலாளிமார்கள் தொடர்ந்தும் தமது வியாபாரத்தை அதிகரித்து வருகின்றனர். எனவே நீர்கொழும்பு பிரதேசத்தில் சகல திருச்சபைகளையும் மையமாகக்கொண்டு போதைப்பொருள் ஒழிப்புக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் என ஆலோசனை முன்வைக்கிறேன். அத்துடன் அக்குழுவின் தலைமையை ஏற்பதற்கு நான் தயாராக உள்ளேன். அவ்வேலைத்திட்டத்தின் மூலம் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, ‘MANNA’
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## சிரியாவில் வன்முறைகள் ......

5ஆம் பக்கத் தொடர்ச்சி

மருத்துவமனைகள் தாக்கப்பட்டுள்ளன. உண்பதற்கு எதுவும் இல்லாமல் மக்கள் துன்புறுகின்றனர். இவையனைத்தும் மனிதாபிமானமற்றது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

ஒரு தீமை இன்னொரு தீமைக்கு எதிராகப் போரிட முடியாது. எனவே, சிரியாவில் இடம்பெறும் சண்டை உடனடியாக நிறுத்தப்பட்டு, உணவு, மருந்துகள் உட்பட மனிதாபிமான உதவிகள் வழங்கப்படவும், நோயாளர் மற்றும் காயமுற்றோர் அவ்விடங்களைவிட்டு அகற்றப்பட வழியமைக்கவும், உள்ளத்தின் ஆழத்திலிருந்து உருக்கமாக விண்ணப்பிக்கின்றேன். இவை தாமதமின்றி இடம்பெற கடவுளிடம் மன்றாடுவோம் என்றும் திருத்தந்தை கூறியுள்ளார்.

தமஸ்கு நகருக்கு கிழக்கிலுள்ள கடவுடாவில் ஏறத்தாழ நான்கு இலட்சம் பேர் வாழ்ந்து வருகின்றனர். 2013ஆம் ஆண்டிலிருந்து புரட்சியாளர்களின் ஆக்கிரமிப்பில் இருந்த இப்பகுதியை மீட்பதற்காக, சிரியா இராணுவம் முயற்சித்து வருகிறது. இப்பகுதியை மீட்பதற்காக, பெப்ரவரி 18ஆம் திகதி தொடங்கிய கடும் தாக்குதலில் 500இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் இறந்துள்ளனர். இவர்களில் 121 பேர் சிறார்கள், மேலும், 2500இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். பல மருத்துவமனைகளும் தாக்கப்பட்டுள்ளன என்று செய்திகள் கூறுகின்றன.

# நீங்காத நினைவுகள்

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி



**“அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது
அழியாததாய் உயிர் பெற்றெழுகிறது”**

பாசத்தை உம் வளர்ப்பில் நாம் கண்டோம்
தியாகத்தை உம் செயலில் நாம் கண்டோம்
இரண்டு ஆண்டுகள் மறைந்து போய்விடினும்
ஆறாது உம் இழப்பு எம் வாழ்வில் அப்பா!

நீங்கள் தொலை தூரத்தில் அல்ல,
எம் விழி ஓரத்தில் இருக்கிறீர்கள்.
துயர்சுமந்து எமக்காய் திரியாகி ஒளி தந்தீர்
வலிகளை நீர்சுமந்து வழிகளை எமக்குக்காட்டினீர்.

இன்று ஆயனில்லா ஆடுபோல் அந்தரிக்கின்றோம்
நித்தமும் உம் அன்பைப் பெற்றிட ஆசிக்கின்றோம்.
நித்தியமாய் நின்ஆன்மா இறைவனில் இளைப்பாற
நித்தமும் இறைவனை நெஞ்சுருக இறைஞ்சுகிறோம்.

### திரு. அதிரியான் பிலேசியான் குரூஸ்
### (முள்ளிக்குளம்)

மலர்வு : 01 - 12 - 1935
உதிர்வு : 12 - 03 - 2016

**பிரிவால் நினைந்துருகும்:**
மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி



“உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே,
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்” (யோவான்: 11:25)

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
அன்பைத் தந்த உறவு,
ஆறுதலைத் தந்த உறவு
உங்கள் உன்னத உறவு!
தோள் அணைத்து நின்ற உங்கள்
உறவைத் தொலைத்துவிட்டு
தவியாய்த் தவிக்கின்றோம் நாம்.

ஆண்டிரண்டு கடந்தாலும்,
ஆற்றொணாத் துயரோடு
உறவுகள் நாமும் அழுகின்றோம்.
உதிரும் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர்த் துளிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்.

### திரு. சூசையப்பு சிப்பிரியான் லெம்பேட்
### (மூர்வீதி, மன்னார்.)

மலர்வு : 18 - 10 - 1955
உதிர்வு : 25 - 03 - 2016

**பிரிவால் நினைந்துருகும்:**
குடும்பத்தினர்.

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 08 1934



உதிர்வு 27 03 2015

### திரு. பாவிலுப்பிள்ளை பிரான்சிஸ் சேவியர்
### (இளைப்பாறிய அதிபர் – முத்தரிப்புத்துறை)

அன்பான ஐயா! அன்பால் அரவணைத்து அறிவூட்டி
சமூகத்தில் எம்மை உயர்த்திவிட்டீர்கள்!
நிஜங்கள் எல்லாம் நிழலாகி - எம்
நினைவுகளில் மட்டும் கலந்ததேனோ?

உம் வாழ்வால் வழிப்படுத்தி வார்த்தையால் நெறிப்படுத்தி
உற்றாரும் மற்றோரும் உறவாக உமைநினைக்க
ஏணியாய் நின்று பலரை ஏற்றிவிட்டீர்.
இறவாத பணிசெய்த ஏந்தலே உமை மறப்போமா?
விண்ணக வீட்டில்நீர் நித்திய அமைதிபெற வேண்டுகிறோம்.

**பிரிவால் நினைந்துருகும் :**
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், பெறாமக்கள், உறவினர்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 13 07 1981



உதிர்வு 24 01 2018


### மரியாம்பிள்ளை செபஸ்தியான் நிக்ஸன்
### (இசைமாலைத்தாழ்வு, முருங்கன்)

மூன்று அக்காக்களுக்கு ஒரு தம்பியாக, சந்தியாப்பிள்ளை குடும்பத்தின் வாரிசாக, புனித செபஸ்ரியாரிடம் நேர்ந்துபெற்ற புதல்வனாக, ‘செபஸ்ரியான்’ எனப் பெயரிடப்பட்டு இவ்வுலகில் மகிழ்வை அளித்த எங்கள் தெய்வமே!
எண்ணி 31 நாட்கள் சென்றாலும் கண்ணீர் ஆறாய்ப் பெருக, கலங்கி நாம் துடிக்கின்றோம். பெற்றவர்கள் நெஞ்சம் எரிமலையாய் வெடிக்க, உடன் பிறந்தவர்கள் நாம் பரிதவித்து நிற்கின்றோம். உங்கள் ஆன்மா இறைவனில் இன்புற்றிட உளமாற நாமும் மன்றாடி நிற்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும் :** அன்பு ஐயா, அம்மா, அக்காமார், அத்தான்மார், மருமக்கள், சித்தப்பா, சித்திகள், மாமாமார்கள், மாமிமார்கள், உறவினர், நண்பர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 01 1936



உதிர்வு 27 02 2017

### திரு. சுவாந்தக்குரூஸ் இசிதோர் (அருளப்பா)
### (உயிலங்குளம், மன்னார்)

புன்சிரித்த பூமுகமே, எம் குடும்பத் தலைவனே!
எம் விழிகளில் நீருமில்லை வாழ்வினில் வசந்தமுமில்லை
அப்பா என்றழைக்க நீங்களில்லையே ஐயா!
உம் கவிபாடும் குரலோசை எம் காதுகளில் கேட்கிறது.
ஓராண்டு சென்றாலும் உம் நினைவுகள்
எம் இதயமதை மெல்லக் கிள்ளிவிட்டுச் செல்லுதையா.
உம் பிரிவையெண்ணி பெருமூச்சு விடுகிறோமையா!
விண்ணகம் வாழும் நீர் எமக்காய் இறைஞ்சிடும்.
உம் ஆன்மா அமைதியுற இறைவனை வேண்டுகிறோம்.

**பிரிவால் நினைந்துருகும் :**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை, உறவினர்கள்.

## 05ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 03 1973



உதிர்வு 23 03 2013

### கமலசேகரம் சதீஸ்சேகர் (சதீஸ்)
### (முன்னாள் கச்சதீவு மூப்பரின் பேரன்)
### (வேப்பங்குளம், வவுனியா)

எம் அன்பின் ஆருயிர் மகனே! எம்மவர் சோதரனே!
எம் இனிய உறவுகளின் ஒளியே, நண்பர்களின் நாயகனே!
எம்மையெல்லாம்விட்டு நீ எங்கு தொலைதூரம் சென்றாய்?
உணர்த்திடும் வார்த்தைகளை உனக்குள்ளே புதைத்தாய்
விண்ணகத்தில் உன் உயிரை உறங்க வைத்தவரே
உலகத்தில் உன்னுடல் உலாவரக்கூடாதென நினைத்தாரோ?
‘சதீஸ்’ என்று பெயரை வாயாரச் சொல்ல முடியவில்லை!
ஆண்டுகள் ஐந்து மறைந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
ஆண்டவனில் நீ அமைதிபெற வேண்டுகிறோம்!

**பிரிவால் நினைந்துருகும்:** பெற்றோர், சகோதரர்கள்.

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 12 1948



உதிர்வு 17 03 2015

### திருமதி. மறிஸ்ரெல்லா கிறிஸ்தோப்பர் (செல்லா)
### (பெற்றா, மன்னார்)

**“கண்ணீரோடு விதைப்பவர்கள்
அக்களிப்போடு அறுவடை செய்வார்கள்”**

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் இதயமாய்
பாசத்தின் மகுடமாய் எம் குடும்பச் சுடர் ஒளியாய்
எம்மை வாழ்வித்த தெய்வம் நீரல்லவோ!
மூன்றாண்டுகள் ஓடி மறைந்தாலும்
உம் நினைவுகள் இன்னும் எம்மை வாட்டுகிறதே!
எம் இதயங்கள் அமைதிபெற மறுக்கிறதே!
இறைவனின் சந்நியதானத்தில் இனிதாய் நீர் துயில்கொள்வீர்.

**பிரிவால் நினைந்துருகும்,**
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார், உறவினர்கள்.

## 1ம் ஆண்டு, 3ம் ஆண்டு நினைவஞ்சலி





### திரு. லோறன்ஸ் மொத்தம் ஜோசப்
### திருமதி. யோசவ் இசபேல்
### (உயிலங்குளம், மன்னார்)

மலர்வு :- 24.04.1930
உதிர்வு :- 02.03.2017

மலர்வு :- 25.08.1938
உதிர்வு :- 14.12.2014

இல்லறத்தை நல்லறமாக்கி எமக்கெல்லாம் வழிகாட்டி
பண்பாய், பாசமாய், நேசமாய் எம்மை அரவணைத்து,
உயர் வாழ்வு தந்த அம்மா, அப்பாவே!
நீங்கள் விட்டுச்சென்ற அடிச்சுவட்டடில்
நாங்கள் நடைபயில எமக்காக மன்றாடுங்கள்.
உங்கள் ஆன்மா ஆண்டவரில் அமைதிபெற
உளமாற வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.